
இலங்கைத்
தீவிரவாதிகள்
எப்படி வந்தனர்?



கல்கி

KALKI 14-7-91 ரூ. 2-50





தாய்ப்பாலூட்டும் தாய்மார்களே! நீங்கள் இருவருக்காகவும் 'உண்ண' வேண்டுமே!

உங்களுக்குத் தேவை அதிக ஊட்டச்சத்துள்ள

புதிய காம்ப்ளான்® விட்டாமில்க்®

குழந்தை தன் ஊட்டத்திற்கு உங்களையே நம்பியிருப்பதால், உங்களிடமிருந்து அதற்கு போதுமான அளவு பால் கிடைக்க வேண்டும்.



காம்ப்ளான் விட்டாமில்க் குழந்தைக்குத் தாய்ப் பாலூட்டி வளர்க்கத் தேவையான ஊட்டச் சத்துக்களையும் மற்றும் காம்ப்ளானின் எல்லா நற்பயன்களையும் கொண்டது.

இதில் பால் புரதம் (22.2 கிராம்), ஃபாலிக் ஆஸிடு, வைட்டமின்கள் A, B_6 மற்றும் C, இரும்புச்சத்து, அயோடின், கால்ஷியம், ஸிங்க் மற்றும் மக்னீஷியம் தேவையான அளவில் அடங்கியுள்ளது.

தினமும் 3 கப்புகள்

ரெகுலர் * சாக்லேட்

உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ

GL/V/N/91 Tam



முதல்வர் நீங்கலாக அ. இ. அ. தி. மு. க. வில், கிட்டத்தட்ட இரண்டு டஜன் பெண் எம். எல். ஏக்கள் இருக்கிறார்கள். அவர்களிடையே, ஜெயலலிதாவால் அமைச்சர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் புலவர் இந்திரகுமாரி ஒருவர் மட்டுமே. ''இது ஜெ.யின் மீது இந்திரகுமாரி வைத்திருக்கும் பக்திக்குப் பரிசு'' என்கிறார்கள் கட்சித் தொண்டர்கள்.

வடபழனி கோயிலின் பின்புறம் உள்ள நெருக்கமான சந்து ஒன்றில் தான் இந்திரகுமாரியின் வீடு. ''அமைச்சருக்கான பங்களா ஒதுக்கிட்டாங்க,'' என்று முகத்தில் பெருமிதத்துடன் சொல்கிறார். ஹாலில், பிள்ளையார்ப்பட்டி பிள்ளையாரின் இரண்டு பெரிய படங்கள் பிரேம் போடப்பட்டு மாட்டப்பட்டிருக்கின்றன. அந்தப் படங்களுக்கிடையே உள்ள மேடையின் மீது அன்னை மேரி மாதாவின் சிலை. ரோஜாப்பூ கலரில், பட்டுப் புடைவை, அதற்கு மேட்சிங்காக பிளவுஸ், கழுத்தில் மெல்லிய தங்கச் சங்கிலி. சிரிக்கும்

அமைச்சர் இந்திரகுமாரி:

"பச்சை குத்திக் கொள்வதை எதிர்த்தேன்..."

பொழுது கண்களை மூடிக் கொள்கிறார். பேச்சுக்கு பேச்சு ''அம்மா அம்மா'' என்று முதல்வரைப் புகழ்கிறார்.

இந்திரகுமாரிக்குச் சொந்த ஊர் வாணியம்பாடிக்கு அருகில் உள்ள வல்லக்குட்டை என்றாலும், பிறந்தது வளர்ந்தது, படித்தது எல்லாம் சென்னையில் தான். பள்ளியில் படிக்கும் போதே பேச்சுக் கலையை வளர்த்துக் கொண்டார். ''ஒரு முறை கண்ணதாசன் பள்ளிக்கு வந்த போது, நான் வரவேற்றுப் பேசினேன். அப்போது கவிஞர் ''எதிர்காலத்தில் நீ சிறந்த பேச்சாளராக விளங்குவாய்'' என்று பாராட்டி விட்டுப் போனார்'' என்று நினைவு கூர்கிறார்.

இந்திரகுமாரியின் அப்பா ராமசாமி முதலியார், காங்கிரஸ் தியாகி. சுதந்திரப் போராட்டத்தில் ஆறு வருடங்கள் சிறையில் இருந்தவர். அந்தக் காலத்திய காங்கிரஸ் பெரிய தலைவர்களோடு பழகி, அரசியல் நடத்தியவர். அவருடைய ஒரே மகளான இந்திரகுமாரிக்குச் சிறு வயதிலிருந்தே 'வாத்தியார்' படங்கள் என்றால் கொள்ளை ஆசை.

''அந்த அடிப்படையில்தான், என்னை, அ. இ. அ. தி. மு. க.வில் 1972 ஆம் ஆண்டே இணைத்துக் கொண்டேன். தலைவர் (எம்.ஜி.ஆர்) என்னை ஊக்கப் படுத்தி, மகளிர் அணித்தலைமைப் பொறுப்பைக் கொடுத்தார். திண்டுக்கல் தேர்தல், பாண்டிச்சேரி தேர்தல்களில் சிறந்த முறையில் தேர்தல் பணி ஆற்றி வெற்றிக் கனியைப் பெற்றதனால், தலைவர் எனக்கு



அடுத்த இதழில்....

ஏவி. எம். -
1 - 150

- COVER STORY

மோதிரங்கள் பரிசாக வழங்கியிருக்கிறார்.''

இந்திரகுமாரி தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் மேடைகளில் பேசியிருக்கிறார். ஆனால், 74 ம் வருடம், ராமநாதபுரம் மாவட்டம் திருச்சுழியில் நடந்த கூட்டத்தை மறக்கவே முடியாது என்கிறார். இவர் பேசும் போதே மேடையை நோக்கி மாற்றுக் கட்சியினரால், கற்கள் வீசப்பட்டன. அப்போது பட்ட அடியின் தழும்பு, வலது கை மணிக்கட்டில் இன்னமும் இருக்கிறது.

இந்திரகுமாரியின் படிப்பைக் கவனித்துக் கொண்டவர் எம்.ஜி.ஆர்தான். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் புலவர் படிப்பு, டெல்லி பல்கலைக் கழகத்தில், பி.காம் (ஹானர்ஸ்). இருந்தும், ''சட்டம் படிக்கவில்லையே'' என்று வருத்தப்படுகிறார் அமைச்சர். இவருடைய கணவர் பாபு, வழக்கறிஞர். இவர்களுக்கு ஒரே மகள். சர்ச்பார்க்கில் படிக்கிறாள்.

கருணாநிதி ஆட்சிக் காலங்களில் மறியல் போராட்டங்களில் இறங்கியதற்காக இந்திரகுமாரி மீது எட்டு வழக்குகள் போடப்பட்டுள்ளனவாம்.

''நீங்கள் இடையில் ஒருமுறை கட்சியில் இருந்து விலகினீர்கள் அல்லவா?''

''ஆமாம். தலைவர் எல்லோரையும் பச்சை குத்திக் கொள்ளச் சொன்னாரல்லவா, அப்போது தான் கட்சியில் இருந்து விலகினேன். 'பச்சை குத்திக் கொண்டால்தான் கட்சிக்கு விசுவாசமாக இருப்பார்கள்' என்ற கூற்றை என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. அது ஒரு மூட நம்பிக்கை. கையில் பச்சை குத்திக் கொண்டு, பின்னர் கழகத்தை விட்டு ஓடியவர்கள் எத்தனை பேர்? இதைத் தலைவரிடமே சொல்லியிருக்கிறேன். காங்கிரஸ் கட்சியில் ஒரு வருடம் இருந்த பின்னர்; மீண்டும் கழகத்தில் இணைய விரும்பிய போது, தாயுள்ளத்தோடு என்னைச் சேர்த்துக் கொண்டார் தலைவர்.''

ஜெ. 82 இல் அ. இ. அ. தி. மு. க. வில் சேர்ந்ததிலிருந்தே இந்திரகுமாரிக்கு நெருக்கமாம். அவரோடு பல மேடைகளில் பேசியிருக்கிறார். ''இன்னமும் சொல்லப் போனால் அம்மாவின் பேச்சுக்களிலிருந்து பாயிண்ட்ஸ் எடுத்து, தமிழ்நாடு பூராவும் நான் பேசியிருக்கிறேன்'' என்று பெருமையுடன் சொல்கிறார்.

''எம்.ஜி.ஆர் ஒரு முறை கட்சிக்காரர்களை 'ஜெ.யோடு தொடர்பு கொள்ளக் கூடாது' என்று கூறி எச்சரித்திருந்தாரே?''

''அந்தச் சமயத்திலும் என்னைப் போன்று அம்மாவுக்கு விசுவாசமானவர்கள், தொடர்ந்து அவரிடம் தொடர்பு வைத்துக் கொண்டு தான் இருந்தோம்.''

பாக்கெட் சாராய ஒழிப்பினையொட்டி அரசுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் சமூக நல இலாகாவில், சிக்கனம் பிடித்து, அரசுக்கு உதவும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் இந்திரகுமாரி. ''என்னுடைய சொந்தத் தொகுதியான நாட்ராம் பள்ளித் தொகுதியில் சந்தன எண்ணெய்த் தொழிற்சாலை மூடிக்கிடக்கிறது. அதைத் திறக்க வேண்டும்....'' என்று தமது கடமைகளை ஒன்றன்பின் ஒன்றாக நினைவூட்டிக் கொள்கிறார்.

சந்திப்பு : ப்ரியன்
படம் : ராதாகிருஷ்ணன்

சக்தி+யுக்தி= பவார்



பிரதமர் பதவிக்குப் போட்டியிடப் போகிறார் என்று எதிர்பார்க்கப்பட்ட சரத் பவார், இப்போது மத்தியில் பாதுகாப்புத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார். இவரது அரசியல் குரு ஒய். பி. சவானும் இவரைப் போலவே, தாமாகவே முதல்வர் பதவியை விட்டு, மத்தியில் பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பேற்றவர்தாம். சவான், தமக்கு அடுத்தபடியாக கன்னம்வாரைத் தேர்ந்தெடுத்தது போல, பவாரும் தமக்குகந்த சுதாகர் நாயக்கை மகாராஷ்டிர முதல்வராகத் தேர்ந்தெடுத்ததன் மூலம், குருவுக்கேற்ற சிஷ்யனாக விளங்குகிறார்.

புனே அருகிலுள்ள பராமதி என்ற ஊர்தான், பவார் பிறந்த ஊர். பணம் படைத்த நிலச்சுவான்தார் குடும்பத்தைச் சேர்ந்தவர். பள்ளி நாட்களிலேயே அரசியல் போராட்டங்களில் பங்கு கொண்டு, கல்லூரி நாட்களில் புனே இளைஞர்கள் அரசியல் குழுவின் தலைவரானார். அதன் பிறகு, மகாராஷ்டிர இளைஞர் காங்கிரஸ் கட்சியின் தலைவரானார். புனே பல்கலைக் கழகத்தில் பி.காம். பட்டம் பெற்ற இவர், ஆர்வம் கொண்டதென்னவோ கிராம முன்னேற்றத்திலும் விவசாயத் துறையிலுந்தான்! வானம் பார்த்த பூமியாக இருந்த பராமதியை, இன்று செல்வம் கொழிக்கும் நன்செய் பூமியாக்கியது இவரது உழைப்பும், ஊக்கமும்தான்! பராமதியின் வளர்ச்சி, வறட்சிப் பிரதேசங்கள் பலவற்றுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது!

மகாராஷ்டிர இளைஞர் காங்கிரஸ் தலைவராக இருந்த போது, இவர் பல்வேறு அயல்நாடுகளுக்குச் சென்று, அவர்களது விவசாயத் துறை வளர்ச்சியை ஆராய்ந்தார். 66-இல் யுனெஸ்கோவின் ஸ்காலர்ஷிப் பெற்று, பிரான்ஸ், டென்மார்க், நார்வே, ஸ்வீடன் போன்ற பல நாடுகளுக்கும் சென்று, அவர்களது அரசியல் முறைகளை நேரில் கண்டறிந்தார்.

67-இல் முதன் முதலில் மகாராஷ்டிர எம்.எல்.ஏ.வான இவர், பல பதவிகள் வகித்த பின் 72-ல் மாநில உள்துறை அமைச்சரானார். 74-ல் 'காபினெட்' அந்தஸ்து பெற்றார். பல்வேறு துறைகளில் அமைச்சராக இருந்த பவார், தம் மாநிலத்தின் மூலைமுடுக்குகளையெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனியென அறிந்தவர்! 'பஞ்சகாலத்தில் மாநில திட்டக் கமிஷன் பம்பாயிலிருந்து கொண்டு திட்டங்கள் தீட்டினால் போதாது. பட்டி தொட்டிகளுக்கெல்லாம் நேரில் சென்று நிலமையை அறிந்து ஆவன செய்ய வேண்டும்' என்று கூறி அவர்களைக் கிராமம், கிராமமாக அனுப்பினார்! தாமும் இரவு பகலெனப் பாராமல் உழைத்தார்! வறட்சி நிலை மாறியது! பருத்தி, கரும்பு உற்பத்தியில் மகாராஷ்டிரம் வெகு முன்னேற்றம்



புதிய முதல்வர்-பவாரின் சாணக்கியம்!

மகாராஷ்டிரத்தின் பதினேழாவது முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுதாகர் நாயக், விதர்பா பகுதியில் ஒரு பின் தங்கிய மாவட்டத்தில், குஹாலி என்ற கிராமத்தில் பிறந்தவர். 'பஞ்சாரா' என்னும் மலைஜாதி நாடோடிகள் குடும்பத்தைச் சேர்ந்தவர். செல்வாக்குப் பெற்ற முன்னாள் முதல்வர் வசந்த ராவ் நாயக்கின் மருமானான இவர் குடும்பம், ஒரு பணக்காரக் குடும்பம்!

சுதாகர் பள்ளி நாட்களிலேயே அரசியலுக்குள் நுழைந்தவர்; வினோபா பாவேயின் பூதான இயக்கத்தால் கவரப்பட்டு, அவரோடு பல இடங்களுக்கும் பாத யாத்திரை சென்றவர். நாக்பூர் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் இலக்கிய, நாடகத் துறைகளில் மிக்க பற்று உள்ளவர். தமது மாவட்டத்தில் கிராமப்புற ஏழைகளுக்காகப் பல இடங்களில் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தியவர். சரத் பவார் அமைச்சரவையில் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தார். பவாரின் வலது கையாகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும் இருப்பவர்.

பவார் மாநில அரசியிலிலிருந்து விலகி, மத்திய அரசியலுக்குப் போகிறார் என்று தெரிந்தவுடனேயே அடக்கி வைக்கப் பட்டிருந்த கோஷ்டிப் பூசல்கள் தலை தூக்கின. பவாரின் அமைச்சரவையிலிருந்த பலரும் முதல்வர் பதவிக்குப் போட்டியிடத் தயாரானார்கள். போதாததற்கு மகாராஷ்டிர காங்கிரஸ் கட்சியின் தலைவர் சிவாஜிராவ் பாடீல் நிலங்கேங்கர் தாமும் போட்டியிடப் போவதாக அறிவித்தார். மகாராஷ்டிரக் காங்கிரஸ் கட்சி, மாநில சட்டசபையில் மெஜாரிட்டி ஆதரவு இன்றிச் சில சுயேச்சைகளின் உதவியுடன் ஆட்சி நடத்தி வரும் சூழ்நிலையில், போட்டி என்று வந்து, காங்கிரஸ் பிளவு பட்டால், அரசு அமைப்பது சிரமம்! இதைத் தவிர்க்க வேண்டிய சூழ்நிலை. எப்படி என்று யோசித்தார் பவார். தாம் மத்திய அரசியலுக்குச் சென்றாலும் மாநிலத்தில் தமது நம்பிக்கைக்குகந்தவரே வரவேண்டும் என்றும் நினைத்தார்.

கலாசார, வாழ்க்கை முறையில் இம் மாநிலம் நான்கு தனித்தனி பகுதிகளாகப் பிரிந்தது. மேற்கு மகாராஷ்டிரம், கொங்கணம், விதர்பா, மாரத்வாடா என்ற நான்கு தான் அவை. இதுவரை மேற்கு மகாராஷ்டிரமான பம்பாய், பூனா, ஷோலாப்பூர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மராத்தியர்களே பெரும்பாலும் முதல்வர்களாக இருந்திருக்கிறார்கள். இதனால் மற்ற மூன்று பகுதிகளும் பின் தள்ளப் பட்டதாக ஓர் அபிப்பிராயம். அதனால் இம்முறை விதர்பாவைச் சேர்ந்த பின் தங்கிய வகுப்பில் வந்த சுதாகர் நாயக்தான் முதல்வராக வரவேண்டும் என்று பவார் சாமர்த்தியமாக வாதாடினார். எம்.எல்.ஏக்களிடம் தனித் தனியாகப் பேசி, அவர்களின் கருத்துக்களைக் கண்டறிர்த போது, நாயக்குக்கு வரவேற்பு இருப்பதாகத் தெரிய வந்தது. அதனால், போட்டியைத் தவிர்த்து சுதாகர் நாயக்கே முதல்வராக வேண்டும் என்று முடிவாகியது. மற்றவர்கள் அனைவரும் போட்டியிலிருந்து விலகினர்!

- ஆர். என்.

கண்டது. பவார் முயற்சியால்தான்.

முப்பத்தெட்டாவது வயதிலேயே முதல்வரான பவார், அப்போதைய நாட்டின் முதல்வர்களிலேயே இளையவர். அனைத்திந்திய காங்கிரஸ் (எஸ்) கட்சியின் தலைவராக இருந்தார். கட்சியின் பெயரிலுள்ள 'எஸ்' சரத் பவாரையே குறிக்கும்.

மார்ச் 85 முதல் டிசம்பர் 86 வரை மகாராஷ்டிர அவையில் எதிர்க்கட்சித் தலைவ

ராகப் பணியாற்றினார். பிறகு ராஜீவ் தலைமையில், காங்கிரஸ் கட்சியில் மீண்டும் சேர்ந்து 88-இல் மகாராஷ்டிர முதல்வரானார். பதவியேற்ற நான்கு மாதங்களுக்குள்ளேயே, என்.ஆர்.ஐ. என்று குறிப்பிடப்படும் 'வெளிநாட்டு இந்தியர்'களைக் கொண்டு, மகாராஷ்டிரத்தில் தொழிலகங்கள் நிறுவவும், வர்த்தகம் பெருகவும் வழிகோலினார். காங்கிரஸ் கட்சியில் ஒரு சோஷலிஸ்டாகத் துவங்கிய அவரது வாழ்க்கை, இன்று பெரிதளவில் மாற்றம் கண்டிருக்கிறது. இன்று, அரசு தனியாருக்குத் தக்க ஊக்கம் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறார் அவர்!

90 - தேர்தலில் காங்கிரஸ் மற்ற வட இந்திய மாநிலங்களில் தோற்ற போது, மகாராஷ்டிரத்தில் மட்டும் வெற்றி பெற்றதென்பது, பவாரின் உழைப்புக்குக் கிடைத்த வெற்றி என்றே சொல்லலாம். மூன்றாம் முறையாக அதன் முதல்வராகவும் ஆனார்.


விளையாட்டுத் துறையில் பவாருக்கு மிக்க ஆர்வம் உண்டு. முற்றிலும் கிராமப்புற விளையாட்டுக்களான சடுகுடு, குஸ்தி, கோகோ போன்றவற்றில்தான் இவருக்கு ஈடுபாடு! 'ஆசியாட்' ஒலிம்பிக்கில் சடுகுடு, கோகோ சேர்க்கப்படவே இவர்தாம் காரணம்!

மனைவி பிரதீபா. ஒரே செல்ல மகள் சுப்ரியா! ஆடம்பரக் கோலாகலத்துடன் சுப்ரியாவின் திருமணத்தை நடத்தினார்.

பழகுவதற்கு எளியவர்; எவரிடமும் வளைந்து கொடுத்து ஆதரவைத் தட்டிச் செல்பவர். அப்படியும் அவரது மகாராஷ்டிர அமைச்சரவையில் சிலர் அவரை எதிர்க்க முயன்று தோற்றனர். டெல்லியிலும் இவரைப் பிடிக்காத 'ராஜீவின் உட்குழு' உண்டு. அங்கும் தம் சாணக்கியத்தால் இவர் தலைநிமிர்ந்து நிற்பார் என்பது நிச்சயம்!

இல்லையென்றால், மகாராஷ்டிரத்தின் எதிர்க்கட்சித் தலைவரான ஜனதா தளத்தைச் சேர்ந்த திருமதி மிருணாள் கோரே கூட, ''இந்த மராத்தியர் இன்று பிரதமராக விளங்க முடியாமல் போயிருக்கலாம்! ஆனால், தம் சக்தி, மற்றும் யுக்தி, இரண்டையும் பயன்படுத்தி ஒரு நாள் இவர் தம் குறிக்கோளை அடையத்தான் போகிறார்'' என்று கூறியிருப்பாரா?

- ராஜீவி நரசிம்மன்.



நீதிபதி : ''பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?''

திருடன் : ''ஹி... ஹி.. மாற்றுச் சாவிக் கொத்தைக் கொண்டு போக மறந்துட்டேன்.''

- சங்கீதா.

''அந்த எம். எல். ஏ. வை ஏன் சஸ்பெண்ட் பண்ணினாங்க?''

''அதிக வோட்டு வித்தியாசத்தில் ஜெயிச்சதுனால அதிகச் சம்பளம் வேணும்னு கேட்டாராம்!''

- குடந்தை எல். ராம்பிரபு.



''முதல் சந்திப்பில் நட்பு மலர்ந்தது!''

''பிறகு...?''

''ரெண்டாம் சந்திப்பில் காதல் வளர்ந்தது...!''

''அப்புறம்?''

''மூன்றாம் சந்திப்பில் காதல் கடிதம் கொடுக்கிற துணிச்சல் வந்தது...!''

''பலே! நீ அதிர்ஷ்டக்காரன்தாம்பா! நாலாவது சந்திப்பில் பதில் வந்ததா?''

''இல்லே, செருப்பு...!''


- சி. செல்வராஜு





✱ பயிற்சி பெறும் விடுதலைப் புலிகள்

இலங்கைத் தீவிரவாதிகள் எப்படி வளர்ந்தனர்?



✱ பிரபாகரன்



✱ பாலசிங்கம்


ஆங்கில ஆட்சியின் கீழ் இலங்கை இருந்த சமயத்தில், ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதில் ஈழத் தமிழர்கள் தான் முக்கிய பங்கு வகித்தார்கள். சர். பொன். அருணாசலம், சர். பொன். ராமனாதன் இருவரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது தான் இலங்கைத் தமிழ் காங்கிரஸ். அந்தக் காலகட்டத்தில், ஆங்கில ஆதிக்கம் காரணமாய், இலங்கைத் தமிழர்களுக்கும், சிங்களவருக்குமிடையே ஒற்றுமை நிலவியது. ஒருமுறை, இலங்கை வாழ் முஸ்லீம்களுக்கும், சிங்களவருக்குமிடையே பிரச்னை எழுந்த போது, இங்கிலாந்தின் பிரிவியூ கவுன்சில் முன்பாக சிங் களவர் சார்பில் வாதாடி, அவர்களுக்குச் சாதகமானதொரு தீர்ப்புக் கிடைக்கச் செய்தவர் சர். பொன். ராமனாதன். அதற்காகச் சிங்கள மக்கள், கொழும்பு நகரில் அவரைத் தேரில் ஊர்வலமாய் அழைத்து வந்து கௌரவித்தார்கள். பிற்காலத்தில் அவருக்கு இலங்கைப் பாராளுமன்றத்தில் கூட சிலை வைத்தார்கள்!

1948 ல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பிறகு, சிங்கள இன மக்களை மெஜாரிடியாய்க் கொண்ட இலங்கையில், முற்றிலும் மாறுபட்டதொரு சூழ் நிலை ஏற்பட்டது. பெரும்பான்மை பெற்ற சிங்கள இனம், ஈழத் தமிழர் மீது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. இலங்கை அரசாங்கம் சிங்கள மக்களுக்கும், சிங்கள மொழிக்கும் முன்னுரிமை தந்து, ஈழத் தமிழர் இனத்தை இரண்டாம் தரக் குடிகளாய்க் கருத ஆரம்பித்தது. இத்தகையதொரு இனவாதம் ஏற்பட, சேன நாயக, பண்டார நாயக போன்ற இலங்கையின் அரசியல் தலைவர்கள்தான் முக்கிய காரணம் என்கிறார்கள்.

ஆனாலும் கூட, ஜி. ஜி. பொன்னம்பலம் என்ற தமிழ்த் தலைவரின் தலைமையில், இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பலமானதொரு அரசியல் கட்சியாகவே இருந்து வந்தது. தமிழர் உரிமைகளுக்கு, இடைவிடாது குரல் கொடுத்து வந்தது. 48-ல் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டத்தின் காரணமாய், இலங்கையில் வசித்த மலைத் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் குடியுரிமையை இழக்க நேர்ந்தது. நாடற்ற தோட்டத் தொழிலாளர்கள், அகதிகளாய் இந்தியா திரும்ப வேண்டிய சூழ்நிலை. இது விஷயத்தில், இலங்கைத் தமிழ் காங்



◆ பத்மநாபா



◆ அமிர்தலிங்கம்

கிரஸ் உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. இதை எதிர்த்து, ஈழத் தமிழ்த் தலைவர்களுள் மு க் கி ய மா ன வ ரா ன, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வ நாயகம், காங்கிரஸிலிருந்து வெளியேறி 'தமிழரசுக் கட்சி' என்ற பெயரில் புதிய கட்சியை ஆரம்பித்தார்.

'செல்வா' என்று அன்புடன் அழைக்கப்பட்ட செல்வநாயகம், காந்தியவாதி. (இவருடைய கட்சிக்காரர்தான் அமிர்தலிங்கம்) ஈழத் தமிழர் உரிமைக்காகச் சிங்கள இனவாத அரசாங்கத்துடன் பல அறப் போராட்டங்கள் நடத்தினார். அதன் காரணமாகச் சிங்கள அரசாங்கமும், பல்வேறு சமயங்களிலும், ஈழத் தமிழர்களுக்கு உரிமைகள் தர ஒப்புக் கொண்டு, செல்வாவுடன் பல ஒப்பந்தங்கள் செய்து கொண்டது.

டட்லி - செல்வா ஒப்பந்தம், பண்டாரநாயக - செல்வா ஒப்பந்தம், சிரிமாவோ-செல்வா ஒப்பந்தம்; இவையெல்லாம் அப்படிச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள்தான். ஆனால், இவை அனைத்துமே வெறுமனே காகித அளவில் நின்று போய் விட்டனவே தவிர, நடைமுறையில் ஈழத் தமிழர்களுக்கு எந்தவிதமான உரிமைகளையும் பெற்றுத் தரவில்லை.

இந்த ஏமாற்றங்களினிடையே 74-ல் யாழ்ப்பாணத்தில் மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்தன. அந்த மாநாட்டை நடக்க விடாமல் செய்வதற்கான அனைத்து வழிகளையும் சிங்கள அரசு கடைப்பிடித்தது. அயல் நாடுகளிலிருக்கும் தமிழறிஞர்கள், மாநாட்டில் வந்து கலந்து கொள்ளுவதற்காக விசா தரக் கூடாது என்று, தன் நாட்டு ஹை கமிஷன்களுக்கு உத்தரவிட்டது. இத்தனை கட்டுப்பாடுகளையும் மீறி, மாநாட்டில் கலந்து கொண்ட ஒரு சிலரில் குறிப்பிடத் தக்கவர் டாக்டர் இரா. ஜனார்த்தனம்.

நிறைவு விழா மேடையில் ஜனார்த்தனத்தைக் கைது செய்ய இலங்கை அரசு உத்தரவிட்டது. மேலும் விழா நடந்த யாழ்ப்பாணத்தில், வீரசிங்க மண்டபத்துக்கு வெளியில் கூடியிருந்த திரளான மக்கள் கூட்டத்தைக் கலைக்க ராணுவ டிரக்குகளையும், போலீஸ் வேன்களையும் தாறுமாறாகக் கூட்டத்தினூடே செலுத்திக் கலவரம் ஏற்படுத்த முயற்சி செய்தது. விளைவு : ஒன்பது ஈழத் தமிழர்கள் மாண்டனர். இச் சம்பவம் ஈழத் தமிழர் சரித்திரத்தில் ஒரு முக்கிய திருப்பு முனையை ஏற்படுத்தியது. தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான மனக் கசப்பை மேலும் அதிகரிக்கச் செய்தது.

இந்தச் சூழ்நிலையில்தான் தமிழரசுக் கட்சியின் அரசியல் ரீதியான அறப் போராட்டங்கள் பலனளிக்கும் என்ற நம்பிக்கை, ஈழத் தமிழ் இளைஞர்களுக்கு முற்றிலுமாய்ப் போய் விட்டது. அதன் விளைவாக இலங்கைத் தமிழ் இளைஞர் பேரவை என்ற அமைப்பு உருவானது. அதில் முக்கிய பங்கு பெற்றவர்கள் வண்ணை ஆனந்தன், சேனாதிராஜா, கவிஞர் காசி. ஆனந்தன் ஆகியோர். (இதே



◆ அமைதிப் படை - போராளிகளிடம் ஆயுதப் பறிமுதல். இதில் விடுதலைப் புலிகள் ஒத்துழைக்கவில்லை.



◆ சேனா நாயக



◆ பண்டார நாயக

◆ கண்துடைப்புத் தேர்தலுக்குப் பிறகு முதல்வரான வரதராஜப்பெருமாள் அமைதிப்படை விலகிய பிறகு பதவியில் நீடிக்க முடியவில்லை.



கால கட்டத்தில் அரசியல் கட்சி தொடர்பு ஏதும் இல்லாத இளைஞர்கள் சிலர் 'நாகம், கழுகு' போன்ற பெயர்களில் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர் என்றும் கூறப்படுகிறது).

புதிதாகத் தொடங்கப்பட்ட இளைஞர் அமைப்பு, தன் முதல் கட்டப் பணியாக, சிங்கள இனவாத அரசுக்கு ஆதரவாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தமிழர்களைத் துரோகிகள் என அறிவித்தது. அவர்களையெல்லாம் ஒழித்துக் கட்டுவது என்றும் முடிவு எடுத்தது.

இந்த ஹிட் லிஸ்ட்டில் இடம் பெற்றவர்களுள் முக்கியமானவர்கள் , அன்றைய இலங்கை அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த குமார சூரியன், யாழ் மேயர் ஆல்பிரட் துரையப்பா, விசாரணை என்ற பெயரில் தமிழ் இளைஞர்களைக் கொடுமைப்படுத்தியதாகச் சொல்லப்படும் காவல் துறை அதிகாரி பஸ்தியாம் பிள்ளை, பாராளுமன்றத் தமிழ் உறுப்பினர் தியாகராயா ஆகிய இலங்கைத் தமிழர்கள்!

ஒருநாள், கோவிலிலிருந்து வெளியே வரும் போது துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டார். (இதைச் செய்தவர்கள் பிரபாகரனும், ஐந்து சகாக்களும் என்று சொல்லப்படுகிறது) ரயிலில், நேருக்கு நேர் சுடப்பட்டு இறந்தார் தியாகராயா. தெருவில் நடந்து போகும் போது, பஸ்தியாம் பிள்ளை பழிதீர்க்கப்பட்டார். இத்தகைய சம்பவங்களுக்குப் பின், ஈழத் தமிழ்ப் பகுதிகளில், தீவிரவாத நடவடிக்கைகள் அதிகரிக்க ஆரம்பித்தன. இவற்றைச் செய்த பிரதானமான அமைப்பு 'புலிப் படை'. அதன் தலைவர் முகுந்தன் என்கிற உமா மகேசுவரன். அவர் லெபனானில் ஆயுதப் பயிற்சி பெற்றவர். அவருடைய சகாதான் பிரபாகரன்.

இந்தக் காலகட்டத்தில்தான் ஈழம் முழுக்க, ஆங்காங்கே பல போராளிக் குழுக்கள் தோன்றலாயின. டெலோ (குட்டிமணி, தங்கதுரை, சிறிசபாரத்தினம்), ஈ. பி. ஆர். எல். எஃப். (ரஞ்சன், பத்மனாபா), ஈராஸ் (ராஜு), டி. ஈ. ஏ. (பனாக்கொடை மகேசுவரன்), என். எஃப். (விசுவனாதன்), டெலா (அராஃபத்)— இப்படிப் பல குழுக்கள். இந்தப் போராளிக் குழுக்கள் எல்லாமே, ஆயுதப் போராட்டத்தின் மூலம், இலங்கையின் இனவெறிச் சிங்கள அரசைப் பணியவைத்துச் சுதந்திரத் தமிழீழம் அடைவதே தம் லட்சியம் என்று கூறிக் கொண்டன.

இத்தனை குழுக்கள் இருப்பினும் உமா மகேசுவரன் தலைமையிலான புலிப் படையே 78 வரை மற்ற குழுக்களை விடப் பலமானதாய் இருந்து வந்தது. அதுவரை உமா மகேசுவரனும், பிரபாகரனும் இணக்கமாகவே செயல்பட்டு வந்தனர். ஆனாலும் அமைப்பு ரீதியில், உமா மகேசுவரனை விட, பிரபாகரனே பலம் பொருந்தியவராய் இருந்தார். . இந் நிலையில் உமா மகேசுவரனின் காதல் விஷயம் (காதலி பெயர்: ஊர்மிளாதேவி) தங்கள் அமைப்பின் சட்டதிட்டங்களுக்குப் புறம்பானது என்று பிரபாகரன் எதிர்ப்புக் குரல் கொடுக்க, அதுவே புலிப்படை இரண்டாக உடையக் காரணமாய் அமைந்தது. இருவருக்குமிடையே சமாதானம் செய்து வைக்கப் பாலசிங்கம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலனளிக்காமல், புலிப்படை, 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்று பிரபாகரன் தலைமையிலும், 'பிளாட்' என்று உமா மகேசுவரன் தலைமையிலும் இரண்டானது. பாலசிங்கம், பிரபாகரனின் இயக்கத்துக்கு ஆலோசகர் ஆனார்.

இருவரும் பிரிந்த பிறகு கூட, இரண்டு குழுக்களுக்குமிடையே இருந்த பகையுணர்வு மறையவில்லை. இதன் எதிரொலிதான் சென்னையில் பாண்டிபஜாரில்



✤ செல்வா

பட்டப் பகலில் நடந்த துப்பாக்கிச் சண்டை.

இலங்கைப் போராளிக் குழுக்கள், தங்களுக்கு வேண்டிய பணத்துக்காக, வங்கிகளைக் கொள்ளையிட்டனர். பணக்காரர்களை மிரட்டிப் பணம் பறித்தனர். தவிர, அயல்நாடுகளில் வாழும் வசதிமிக்க ஈழத் தமிழர்கள் இக் குழுக்களுக்கு தாராளமாகவே நிதியுதவி செய்தனர். இவர்களில் அச்சம் காரணமாகவும் பிளாக்மெய்ல் செய்யப்பட்டதாலும் பணம் தந்தவரும் உண்டு. அவற்றைக் கொண்டு ஆயுதங்கள் வாங்கித் தங்கள் தீவிரவாத நடவடிக்கைகளைத் தொடர்ந்தனர். இலங்கை அரசும் இவர்களிடம் வேறுவழியின்றிக் கடுமையாக நடந்து கொண்டது. அதிலிருந்து தப்பிக்க, படகுகள் மூலம் போராளிகள் அடிக்கடி இந்தியா வந்து போக ஆரம்பித்தார்கள்.

83-ல் கொழும்பு நகரில், ஆளும் கட்சி அமைச்சர் ஒருவருடைய தூண்டுதல் காரணமாகவே வரலாறு காணாத இனக்கலவரம் ஒன்று நடந்தது. அதன் காரணமாக அமிர்தலிங்கம் போன்ற அரசியல் தலைவர்களும், மிகவும் உயர்ந்த நிலையிலிருந்த ஈழத் தமிழ்க் குடும்பங்களும் தங்கள் சொத்து, சுகங்களை விட்டு விட்டு, உயிருக்குப் பயந்து இந்தியாவுக்கு வந்து விட்டனர். இதன் காரணமாயும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சிங்கள ராணுவம் நடத்திய வெறித் தாக்குதலால் பாதிக்கப்பட்டும் ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்களும் அகதிகளாகத் தமிழ்நாட்டுக்கு வந்தனர்.

இந்த நிலை தொடர்ந்து நடக்கவே, இனியும் பொறுக்க முடியாது என்கிற சூழ்நிலையில், அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி, நேரடி நடவடிக்கையில் இறங்க முடிவு செய்தார். ஒருபுறம் இந்திய அரசு சார்பாகப் பேச்சு வார்த்தைக்குத் தூதுவர்களை அனுப்பினார். இன்னொருபுறம், இலங்கை அரசை பயமுறுத்திப் பணியவைக்கும் நோக்கத்தில், ஈழத் தமிழ்ப் போராளிக் குழுக்களிலிருந்து சில நூறு பேரைத் தேர்ந்தெடுத்து, இந்தி மண்ணிலேயே இந்திய ராணுவ அதிகாரிகளைக் கொண்டு ராணுவப் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடு செய்தார்! அப்போதைய தமிழக முதல்வரான எம். ஜி. ஆரும் தம் பங்குக்குத் தீவிரவாதக் குழுக்கள் ஆயுதம் வாங்குவதற்கென்று வெளிப்படையாகவே பணம் கொடுத்தார்!

விடுதலைப் புலிகள் எல்லா வகையிலும் மற்றெந்தப் போராளிக் குழுக்களையும் விடப் பலம் மிகுந்து விளங்கினர். இவர்கள் எண்ணிக்கை 25,000க்கு அதிகம் என்று ஓர் மதிப்பீடு. ஈழ மக்கள் இவர்களுக்கு அளித்த ஆதரவுக்கு அச்சம் பாதி; அபிமானம் பாதி. இவர்கள் இங்கே பயிற்சி பெற்றதோடு பிற போராளிக் குழுக்களைத் தீர்த்துக் கட்டுவதிலும் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். அதன்படி நடந்த படுகொலைகளில் சிறி சபாரத்தினம் உள்ளிட்ட டெலோ பேராளிகளைக் கொன்றனர். சென்னையில் பத்மனாபாவையும் கொலை செய்தனர். ஜனநாயக ரீதியான போராட்டத்தில் நம்பிக்கை வைத்திருந்த அமிர்தலிங்கத்தையும் வஞ்சனையான முறையில் தீர்த்துக் கட்டினர்.

ராஜீவ் காந்தி செய்து கொண்ட இந்தியா - ஸ்ரீலங்கா ஒப்பந்தம் தோல்வி கண்டதும், இங்கிருந்து போன அமைதிப் படை விடுதலைப் புலிகளைத் தாக்க நேர்ந்ததும் கண்துடைப்பாக ஒரு தேர்தல் நடந்ததும் சமீபத்திய சரித்திரம். இவற்றாலும் ராஜீவ், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தராததாலும் அவர் மீதும் புலிகளுக்கு வெறுப்பு வளர்ந்தது.

எந்த இந்திரா காந்தியின் உதவியால் இங்கு ராணுவப் பயிற்சி பெற்றார்களோ, அதே இந்திரா காந்தியின் மகனும் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தியை மனித வெடிகுண்டு வைத்துப் புலிகள் படுகொலை செய்யும் அளவுக்கு நிலைமை மிகவும் முற்றிப் போய் இருக்கிறது. இதை வேரோடும் வேரடி மண்ணோடும் கெல்லி எறிவதற்கான ஒரே வழி இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தரமானதோர் அரசியல் தீர்வு கிடைக்கச் செய்வதுதான்! வேறு எந்த வழியும் பிரயோஜனப்படாது.

- ஜூலி..



ஐயா, வலி தாங்கலியே...
அந்த வலி மறக்கணும்னா— இன்னொரு அடி வாங்கிக்க...!
நரசிம்மராவ்
இந்தப் பசங்க மாதிரி நாமளும் காலுல விழுவோம்னு அம்மா நினைக்கிறாங்க போல...
ஜெயலலிதா
அமைச்சர்கள்
எம்.எல்.ஏக்கள்.
தேர்தலை ரத்து பண்ணிப் புட்டாங்க... நீயுமாச்சு உன் வேலையுமாச்சு!
நரசிம்மராவ்
அதிகாரம்
ஹி... ஹி... இப்ப என்ன அவசரம்?
அப்புறம் பார்க்கலாம்!
— செய்தி



கல்கி

1991 ஜூலை 14
மலர் : 49 இதழ் : 50
பிரஜோத்பத்தி ஆனி 30



வரவுக்கு மேல் செலவு : வேதனையே விளைவு!

'ஆடம்பரச் செலவினங்கள் வேண்டாம்; டம்பாச்சாரி திட்டங்கள் கூடாது; பற்றாக்குறை பட்ஜெட்டுகள் பேராபத்து; அளவுக்கு மீறி அந்நியக் கடன்களைப் பெறுவது, பொருளாதார ரீதியில் நம்மை அடிமைப்படுத்தும்; அரசியல் ரீதியில் பெற்ற சுதந்திரம் பயனற்றுப் போகும்' என்றெல்லாம் ராஜாஜி மட்டுமின்றி, பல பொருளாதார நிபுணர்கள் திரும்பத் திரும்பக் கூறி, பல ஆண்டுகளாகவே எச்சரித்து வந்தும், எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்தது. ரூபாயின் மதிப்பை 48 மணி நேரத்துக்குள் இரண்டு தடவை குறைக்க வேண்டிய நிர்ப்பந்தமான அவல நிலைக்குப் புதிய காங்கிரஸ் அரசு தள்ளப்பட்டிருக்கிறது. இதை விடக் கேவலமான அவமானம், நமது தேசத்துக்கு வேறு என்ன இருக்க முடியும்? இந்த லட்சணத்தில், 'இது மதிப்புக் குறைப்பு அல்ல; ஒரு 'அட்ஜெஸ்ட்மெண்ட்', அவ்வளவுதான்' என்று ஒரு கண்துடைப்பு நாடகம் வேறு அரசு நடத்துகிறது!

முதல் மதிப்புக் குறைப்பு 9.5 சதம். இரண்டாவது 11.5 சதம். ஆக மொத்தம் 21 சதம்! அதாவது முன்பு டாலருக்கு ரூ. 21 தந்து வந்த இடத்தில், இனி நாம் ரூ. 26.20 தர வேண்டும். ஸ்டர்லிங்குக்கு ரூ. 34 தந்த இடத்தில் இனி ரூ 41 தர வேண்டும். இப்படியே ஜப்பானிய யென், ஜெர்மானிய மார்க் முதலியவற்றுக்கும் கூடுதல் தொகை தர வேண்டும்.

இது எதனால் நேர்ந்தது? பொருளாதார ரீதியில் உலக நாடுகளிடையே நம்மை மதிப்பவர் கிடையாது. காரணம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நமது அரசு ஏராளமாய்க் கடன் வாங்கியிருப்பதுதான். போதாக்குறைக்கு நமது ஏற்றுமதி வர்த்தகம், இறக்குமதியை விட மிகக் குறைவாக இருப்பதால் அயல்நாடுகளுக்கு நாம் தர வேண்டிய பாக்கித் தொகை, ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே போகிறது. உள்நாட்டுக் கடன், வெளிநாட்டுக் கடன் ஆகிய இரண்டுக்குமே, ஆண்டுதோறும் வட்டி தரவே அரசு புதிய கடன்களைப் பெற வேண்டியிருக்கிறது! இதிலிருந்து, அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த மத்திய அரசுகள் (பெரும்பாலும் காங்கிரஸ்) நமது தேசத்தைத் திவாலா நிலைக்குக் கொண்டு வந்து சேர்த்துள்ளது புரியும்.

இப்போது ரூபாயின் மதிப்புக் குறைப்பினால் நமது இறக்குமதி இனங்களுக்குத் தர வேண்டிய விலை ரூபாய்க் கணக்கில் 21 சதம் அதிகரிக்கும்! பெட்ரோலியம் பொருள்கள், ரசாயன உரங்கள், கனரக இயந்திரங்கள் போன்ற பலவற்றை நாம் இறக்குமதி செய்கிறோம். இவை இல்லாவிட்டால் நமது விவசாய - தொழில் துறைகள் ஸ்தம்பித்துப் போகும். இறக்குமதியைத் தவிர்க்க முடியாது. ஆக, கூடுதல் தொகையை - கோடிக்கணக்கான ரூபாய்களை - வரி அல்லது விலைவாசி உயர்வாகச் சராசரி இந்தியக் குடிமகன்தான் கொடுத்து அழ வேண்டும். இவனுக்கு விடிவு காலம்தான் எப்போது?

'ஏற்றுமதியாளருக்கு ரூபாய்க் கணக்கில் 21 சதம் கூடுதலாகக் கிடைக்குமே; அதனால் ஏற்றுமதி செய்ய ஊக்கம் அதிகரிக்குமே; அது லாபம்தானே?' என்று வாதாடலாம். ஆனால் விஷயம் அத்தனை எளிதானது அல்ல. ஏற்றுமதிப் பொருள்களின் விலை உள்நாட்டில் ஏகமாக உயரும். ஆனால் அயல்நாட்டில் அவர்கள் பழைய விலைதான் கொடுப்பார்கள். இல்லாவிட்டால், 'உங்கள் பொருள் வேண்டாம்' என்று கூறி விடுவார்கள்! எனவே, முன்னர் கிடைத்து வந்த அதே அளவில் டாலரோ ஸ்டர்லிங்கோ பெறவே இங்குள்ள ஏற்றுமதியாளர், குறைந்தபட்சம் இருபது சதமாவது அதிகப்படி பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டும். நூறு சட்டை விற்றவர் இனி 120 சட்டைகளுக்கு ஏற்றுமதி மார்கெட் கண்டுபிடிக்க வேண்டும்!

அயல்நாட்டில் வசிக்கும் இந்தியர், இங்கே டாலரோ ஸ்டர்லிங்கோ அனுப்பினால் ரூபாய் மதிப்பில் நிறையக் கிடைக்கும் என்பது ஓர் ஆதாயம். இதனால் இங்கு முதலீடு பெருக வாய்ப்புண்டு. ஆனால் கஷ்ட நஷ்டங்களோடு ஒப்பிட, இது பெரிய அனுகூலமாகாது.

21% ரூபாயின் மதிப்புக் குறைப்பு, நமது பொருளாதாரம் சரியாக நிர்வகிக்கப்படவில்லை என்பதையும், வாங்கிய கடன்களைத் திருப்பித் தர இந்தியா திணறுகிறது என்பதையும், அதனால் மேலும் மேலும் கடன் பெற முனைந்து, சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி போன்றவை ஆட்டுவிக்கிறபடியெல்லாம் நமது அரசு ஆட வேண்டிய நிர்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதையும் உணர்த்துகிறது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

வாக்கிங் போகலாம்; நோயின்றி வாழலாம்!

விடியற்காலைத் தூக்கம் சுகமானது தான். ஆனால் அதைவிடவும் சுகமானது, அந்த நேரத்தில் எழுந்து வாக்கிங் போவது என்று அனுபவஸ்தர்கள் சொல்லுவார்கள். ''ஏதாவது ஒரு நாள் வாக்கிங் போக முடியாமல் போனால் அன்று முழுவதும் எனக்கு 'மூட் அப்செட்' ஆகிவிடும். அதனால் நான் மழைக் காலங்களின் கூட குடையைப் பிடித்துக் கொண்டு வாக்கிங் கிளம்பி விடுவேன்!'' என்கிறார் அறுபத்தேழு வயதான திருமதி ஷீலா குப்தா. இத்தனைக்கும் இவர் இருதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்!

''காலையில் எழுந்து வாக்கிங் போய் விட்டு வந்தால் அன்று முழுவதும் சுறு சுறுப்பாக இருக்கிறது. எனது பாடங்களை அன்றைக்கன்றே படித்து முடிக்க அந்தச் சுறுசுறுப்பு மிகவும் உபயோகமாக இருக்கிறது. அதனால்தான் விடுமுறைக்காகச் சென்னையிலிருக்கும் எனது பாட்டி வீட்டுக்கு வந்திருந்தாலும் என்னால் இங்கு கூட வாக்கிங் போகாமல் இருக்க முடியவில்லை!'' என்கிறார் பத்தொன்பது வயதான அமித்.




✤ டாக்டர் சந்திரசேகர சாண்டில்யா.

சாதாரணமாக ஓர் அரை மணி நேரமோ அல்லது முக்கால் மணிநேரமோ வாக்கிங் போவதில் இப்படியொரு நன்மையா? ''ஆமாம்!'' என்கிறார் டாக்டர் சந்திரசேகர சாண்டில்யா. ''இது மட்டுமல்ல; எவ்வளவோ நோய்களை வாக்கிங் போவதன் மூலம் வராமலே தடுக்கலாம்!'' என்கிறார் அவர்.

''வாக்கிங் போவதன் மூலம் ரத்த ஓட்டம் அதிகமாகும். அதனால் இருதயமும் மற்ற உறுப்புகளும் அதிக ரத்தம் பெற்று வலுப்பெறும். சாதாரணமாக 'உடலுழைப்புச் செய்கிறவர்களுக்குப் பிரச்னையில்லை. அந்த உழைப்பே உடலுறுப்புகளுக்குத் தகுந்த பயிற்சியைக் கொடுத்து விடும். ஆனால், உடலுழைப்பு அல்லாத ஆபீஸ் வேலை செய்பவர்கள் விஷயம் அப்படியல்ல... அவர்கள் சாப்பிடுகிற உணவு முழுமையும் சக்தியாகக் கரைந்து போவதில்லை. அதனால் மீதமுள்ள - செலவாகாத சக்தி, கொழுப்புப் பொருள்களாக உடலில் தங்கி விடுகிறது. இது எடையைக் கூட்டி உடலழகைக் கெடுப்பதோடு, அந்தக் கொழுப்பு, ரத்தக் குழாய்களில் சேர்ந்து, ரத்த ஓட்டத்தையும் தடைப்படுத்துகிறது. அப்படி இருதய ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு, இருதயத்தின் தசைகளுக்கு ரத்த ஓட்டம் தடைப்படும் போது தான் 'ஹார்ட் அட்டாக்' வருகிறது!

''வாக்கிங் போவதால் இப்படிப்பட்ட ரத்தக் குழாய் அடைப்புகள் தவிர்க்கப்படுகின்றன. கூடவே எடையும் குறைகிறது. இதில் இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் ஒரு முறை ரத்தக் குழாய்களில் கொழுப்புச் சேர்ந்து அடைப்பு ஏற்பட்டு விட்டால், அதை மீண்டும் முழுமையாகக் கரைக்க முடியாது. இன்றைய நவீன விஞ்ஞானத்தில் கூட பத்து சதம் முதல் இருபது சதம் வரைதான் அப்படிப்பட்ட அடைப்பைக் கரைக்க முடியும். எனவே, வாக்கிங் போவதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம்!''

''இந்தக் கொழுப்புச் சத்து அல்லது கொலஸ்ட்ராலில் நல்ல கொலஸ்ட்ரால்



என்றும் கெட்ட கொலஸ்ட்ரால் என்றும் இருக்கிறதாமே?''

''உண்மைதான். ஹை டென்சிடி லிபோ புரோடீன் (HDL) என்பது, மாரடைப்பு நோய் வராமல் பாதுகாக்கும் தன்மையுடையது. லோ டென்சிடி லிபோ புரோடீன் (LDL)லும், வெரி லோ டென்சிடி ட்ரைகிளசரிபஸ்லஸும், ரத்தத்தில் அதிக அளவில் இருந்தால் மாரடைப்பு வருவதற்குச் சாத்தியக் கூறு அதிகம். தினசரி நடப்பதால், HDL அதிகமாகிறது; எனவே மாரடைப்பு வராமல் தடுக்கும் பாதுகாப்பாக இது இருக்கும்.

''அப்புறம் சிறுநீரகம். வாக்கிங் போவதால் இது அதிக அளவில் வேலை செய்கிறது. அதனால் யூரியா கூடுவது தடுக்கப்பட்டுச் சிறுநீரக நோய்கள் வருவதும் தடுக்கப்படுகின்றன. இவற்றோடு முடக்கு வாதம், கீழ் வாதம் போன்ற உபாதைகளும் மற்றும் பல வியாதிகளும் வாக்கிங் போவதால் தவிர்க்கப்படுகின்றன! எனவே, நோய்கள் வருவதற்கு முன்பே அனைவரும் நாள் தோறும் ஒரு முக்கால் மணி நேரம் வாக்கிங் போவதுதான் நல்லது.''

''காலையில் வாக்கிங் போவது நல்லதா அல்லது மாலையில் போவது நல்லதா?''

''உடல் எடை குறைய வேண்டும் என்று நினைப்பவர்கள் வெறும் வயிற்றோடு காலையில் போவதுதான் நல்லது. இப்படிப் பட்டவர்கள் வியர்க்க விறுவிறுக்க வேகமாக வாக்கிங் போக வேண்டும். அப்போதுதான் பலன் கிடைக்கும். மற்றவர்களைப் பற்றிப் பிரச்னையில்லை. இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு கூட வாக்கிங் போகலாம்.''

''எவ்வளவு நேரம் போக வேண்டும்?''

''ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் சாதாரண நடையில் சுமார் அரைமணி நேரம் போய் வந்தால் போதும். மற்றவர்கள் முக்கால் மணியிலிருந்து ஒரு மணி நேரம் வரை போகலாம். இளைஞர்களுக்கு ஜாகிங் சிறந்தது. ஸ்கிப்பிங்கும் சிறந்தது. நீச்சலடிக்க வசதியிருந்தால் இன்னும் நல்லது. இவற்றையெல்லாம் செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை. வாக்கிங் மட்டுமே போதுமானது!''

''வாக்கிங் போகும் போதும் சரி, ஜாகிங் செய்யும் போதும் சரி வெறுங் கால்களோடு போகலாமா?''

''கூடவே கூடாது. கேன்வாஸ் ஷூக்கள் போட்டுக் கொண்டுதான் வாக்கிங் போக வேண்டும். வாங்க வசதியில்லாதவர்கள் தோல் அல்லது ரப்பர் செருப்புகளை அணிந்து கொண்டு செல்ல லாம். கண்டிப்பாகக் குதியுயர்ந்த செருப்புகளையும், கடினமான பிளாஸ்டிக் செருப்புகளையும் அணிந்து கொண்டு வாக்கிங் போகவே கூடாது. இவற்றை அணிந்து கொண்டோ அல்லது வெறுங்கால்களுடனோ வாக்கிங் போகும் போது குதிகாலுக்கு அடியில் Calcaneal spur எனப்படும் எலும்பு வளர்ந்து ஆபத்தை விளைவித்துவிடும். அதாவது நமது குதி கால் கெட்டியான தரையிலோ அல்லது செருப்புகளிலோ அழுத்தமாக ஊன்றப்படு வது கூடவே கூடாது. இது ஆண், பெண் இருபாலாருக்கும் பொருந்தும்.''

''டாக்டர் என்கிற முறையில் யாருக்கெல்லாம் வாக்கிங் என்பது கட்டாயம் என்று சொல்வீர்கள்?''

''அனைவருக்குமேதான். இதில் பேதமே இடையாது. எத்தனை வயதானாலும் முடிந்த வரை வாக்கிங் போய் வருவதுதான் நல்லது. குறிப்பாகப் பெண்கள்...... திருமணத்திற்குப் பிறகு நமது பெண்கள் அநியாயத்திற்குப் பருத்து விடுகிறார்கள். வாக்கிங் போவதைத் தினசரி வேலைகளில் ஒன்றாக்கிக் கொண்டால் நிச்சயமாகப் பருமனாக மாட்டார்கள்!''

டாக்டர் சொன்னதை அனுபவபூர்வமாக ஆமோதிக்கிறார் வேணுகோபால். ''எத்தனை வேலைகள் இருந்தாலும், வெளியூர் செல்ல நேரிட்டாலும் கூட காலை நேரத்து உடற்பயிற்சிகளான வாக்கிங் மற்றும் ஜாகிங்கை நான் விடுவதேயில்லை. அதனால், கடந்த இருபதாண்டுகளாக நான் டாக்டரிடம் செல்லும்படி நேர்ந்ததில்லை!

''விடியற்காலையில் எழுந்து வீட்டை விட்டுப் புறப்பட்டு வாக்கிங் சென்று வருவதில் இன்னொரு வசதி.... கண்கள் பசுமையைக் காணும் போதும் மார்பு தூய காற்றில் நிறையும் போதும் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. நன்றாகச் சிந்திக்க முடிகிறது. நான்கு சுவர்களுக்குள் மலைப்பை ஏற்படுத்தும் வியாபாரப் பிரச்னைகள், வாக்கிங் போகிற போது திறந்தவெளியின் அதிகாலைப் புத்துணர்வில் சுலபமாகத் தீர்ந்து விடுவதை உணர்ந்திருக்கிறேன்'' என்கிறார் ஒரு பிரபல கம்பெனியின் டைரக்டர்களில் ஒருவரான வேணு கோபால்.

''வாக்கிங் போவதால் ஏற்படும் நன்மைகளை உத்தேசித்துத்தான் 'பீச் வாக்கர்ஸ் அசோஸியேஷன்' என்று ஓர் அமைப்பையே தோற்றுவித்து, அதிகாலை நேரங்களில் பீச்சிலுள்ள உள்பக்கச் சாலைகளில் காலை எட்டரை மணி வரை யாரும் வந்து டிரைவிங் கற்றுக் கொள்ளக் கூடாது என்றெல்லாம் முறைப்படுத்தி, வாக்கிங் வருவோருக்கு வசதி செய்திருக்கிறோம்!'' என்கிறார் அதன் பொருளாளர் பாலன்.

இருப்பினும் இந்த வசதியைச் சென்னையிலுள்ள சில வி.ஐ.பிக்களைத் தவிர, மற்றவர்கள் - குறிப்பாகச் சாதாரண மக்கள் முன் வந்து முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதாகத் தெரியவில்லை.

- பிரின்ஸ்

அட்டையில் :
சுரேஷ், சாந்திகணேஷ்
அட்டை வண்ணப்படம், படம் :
உத்ரா

எத்தகைய மனைவி? எப்படிப்பட்ட கணவன்?

கல்லூரி மாணவப் பருவம் என்பது பொறுப்புணர்வுடன் படிப்பது மட்டுமல்ல; எதிர்கால வேலை வாய்ப்பு அல்லது தொழில் தொடர்பான திட்டங்கள் குறித்துச் சிந்திக்கும் காலகட்டம். அதுமட்டுமா? இல்லறம் பற்றிய இனிய கனவுகள் மலரும் தருணமும் இதுதான்! உங்களுக்கு எத்தகைய கணவன் அமைய வேண்டும்? அல்லது, எப்படிப்பட்ட மனைவி வாய்க்க வேண்டும்? யோசித்து எழுதுங்கள் - யதார்த்தமாக. இரண்டு தலைப்புகளிலும் சிறந்த ஒரு பக்கக் கட்டுரைகளுக்குப் பரிசு தலா ரூ. 50. பிரசுரமாகும் சிந்தனைச் சிதறல்களுக்கு ஆறுதல் பரிசுகளும் உண்டு. மிக அதிகமான முதல் பரிசுக் கட்டுரைகள் எழுதிய மாணவருக்கு ரூ. 1,500 சிறப்புப் பரிசு. பொன் விழா மேடையில் அவர் கௌரவிக்கப்படுவார். கல்லூரி விலாசம், வீட்டு விலாசம் இரண்டும் குறிப்பிடவும். உறையின் மேல், 'மாணவர் கட்டுரைப் போட்டி' என்று மறவாமல் எழுதவும்.

முடிவு தேதி: 20.7.91.

கல்கி பொன்விழா பரிசுத் திட்டம் | **கல்லூரி மாணவர் கட்டுரைப் போட்டி**

ஆகஸ்டு 4உ

கல்கி

பாதுகாக்க வேண்டிய
சிறப்பு அம்சங்களுடன்

பொன்விழா
ஆண்டு மலராக

மலருகிறது

128 பக்கங்கள்

சுஜாதா எழுதும்

கம்ப்யூட்டர் கிராமம்

புதுமைத் தொடர்கதை ஆரம்பம்



"நாங்கள் எதிரிக் கட்சியினர் அல்ல!"

நண்பர்களால் எஸ். ஆர். பி. என்றும், பாலு என்றும் செல்லமாக அழைக்கப்படுகிறார், தமிழக சட்ட சபையின் எதிர்க் கட்சித் தலைவரான எஸ். ஆர். பாலசுப்பிரமணியம். சொந்த ஊர் கோவை அருகே உள்ள கல்தான் பேட்டை. அப்பா ராமபத்ர நாயுடு. விவசாயக் குடும்பம். பாலு படித்ததெல்லாம் சென்னையில்தான். (பச்சையப்பன் கல்லூரி, சட்டக் கல்லூரி.) படிக்கும் போது சில காலம் தி.மு.க. அனுதாபியாக இருந்தார். 63 - ல் மொழிப் போராட்டத்தில் சிறை சென்றவர். 69 - ல் காங்கிரஸ் பிளவு பட்ட போது, இந்திரா காங்கிரஸுக்கு விசுவாசியாக மாறினார். பொங்கலூர்த் தொகுதியிலிருந்து இரண்டாவது முறையாகச் சட்ட மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இதே தொகுதியில் இரண்டு முறை தோற்றும் போயிருக்கிறார். காங்கிரஸில் மூப்பனார் கையைப் பலப்படுத்தும் நபர்களில் ஒருவர். நேரம் கிடைத்தால் ஜெஃப்ரி ஆர்ச்சர் புத்தகத்துடன் உட்கார்ந்து விடுவார்.

கேள்வி : காங்கிரஸுக்கும் அ. இ. அ. தி. மு. க.வுக்கும் இடையில் நெருக்கமான உறவு இருக்கும் சூழ்நிலையில், சக்தி மிக்க எதிர்க் கட்சியாக நீங்கள் செயல்பட முடியுமா?

எஸ். ஆர். பி : கூட்டணி சில பொதுவான திட்டங்களையும் கொள்கைகளையும் மக்கள் முன் வைத்தது. இந்தப் பணிகளைச் செய்ய முனையும் அரசுக்கு எங்களுடைய பூரண ஆதரவு உண்டு. ஆனால் தவறான பாதையில் சென்றால் எதிர்ப்போம். எதற்கெடுத்தாலும் எதிர்ப்பது எங்கள் நோக்கம் அல்ல. புதிய அரசின் செயல்பாடுகள், கவர்னர் உரையிலிருந்து தெரியவரும். அதன் அடிப்படையில் எங்கள் கருத்துக்களைச் சொல்வோம். நாங்கள் எதிர்க் கட்சியினர் தானே தவிர, எதிரிக் கட்சியினர் அல்ல!

கேள்வி: சட்டமன்றக் காங்கிரஸ் தலைவர் பதவிக்கு உங்களைத் தேர்ந்தெடுக்க நடந்த தேர்தலில், செல்லாத வோட்டுக்கள் போடப்பட்டன. நீங்கள் வெற்றி பெறும் நிலையை உருவாக்கத்தான் செல்லாத வோட்டுக்கள் போட ஏற்பாடு செய்யப்பட்டதாக, வாழப்பாடி சொல்கிறாரே?

எஸ். ஆர். பி : இது சம்பந்தமாக எந்த விதச் சர்ச்சையிலும் இறங்க நான் விரும்பவில்லை. யார் தலைவராக இருக்கலாம் என்று கருத்தறிவதற்காக ஒரு வழிமுறை கையாளப்பட்டது. அவ்வளவுதான். காங்கிரஸ் மேலிடம் கூட, 'ஒரு மனதாகச் சட்ட மன்றக் காங்கிரஸ் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்' என்றுதான் அறிவித்திருக்கிறது. எங்கள் கட்சி உறுப்பினர்கள் எல்லோருடைய ஆதரவுடனும் நாங்கள் பொறுப்புள்ள எதிர்க் கட்சியாகச் செயல்படுவோம்.

கேள்வி : தேர்தலுக்குத் தேர்தல் திராவிடக் கட்சிகளின் முதுகில் சவாரி செய்யும் காங்கிரஸ், என்றைக்குத் தனித்துச் செயல்பட்டு ஆளும் கட்சியாக வரும்?

எஸ். ஆர். பி: காங்கிரஸ் ஒரு ஜீவனுள்ள இயக்கம். இருபத்தி நான்கு வருடங்களாகப் பதவியில் இல்லாவிடினும், எங்கள் கட்சி, தமிழகத்தில் நன்கு வளர்ந்திருக்கிறது. முதல் வேலையாகத் தேச விரோத தி.மு.க்.வை களத்திலிருந்து விரட்டி இருக்கிறோம். எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை இப்போதே சொல்ல முடியாது.

பேட்டி : பி. எஸ்.
படம் : ராதாகிருஷ்ணன்

செந்தூர தேவி

அப்பா இராம-நாராயணன் அவர்களே! தயவு செய்து இந்த ஃபார்முலாவை விட்டு விடுங்கள்....

தெய்வத்தின் அருள் + மிருகங்களின் சாகசம் + பேபி ஷாமிலி = வெற்றி என்பது முதல் முறை புதுமையாக இருக்கலாம். அடுத்த முறை சுவாரஸ்யமாக இருக்கலாம். ஆனால் மூன்றாவது முறை?

இரட்டைக் குழந்தைகள் - பிரிந்து வாழும் அவர்களுடைய பெற்றோர் - தாயுடன் ஒன்றும் தந்தையுடன் ஒன்றுமாக வளரும் அவர்களின் சந்திப்பு - பெற்றோரை ஒன்று சேர்க்க அந்த வீட்டில் இவள், இந்த வீட்டில் அவள் - அவர்கள் முயற்சிக்கு முடிவில் வெற்றி என்பது, ஏற்கெனவே 'குழந்தையும் தெய்வமும்' திரைப் படத்திலும் பின்னர் அதனையே டி.வி.யிலும் பார்த்துப் பார்த்து ரசித்து விட்டதால் இப்போது ஏற்படுவது அலுப்பு.



ரிமோட் கன்ட்ரோல் கம்ப்யூட்டரின் துணை கொண்டு இடி, மின்னல், புயலை ஏற்படுத்திப் பிசாசுகளை ஊர் முழுதும் பறந்து திரிய விடும் விஞ்ஞான சாதனை யாருடைய கண்டுபிடிப்பு?

தூசு படர்ந்திருக்கும் செந்தூர தேவியின் கண்களை ஷாமிலி துடைத்து விட்டவுடன் அவை ஆற்றல் பெற்று மின்னலைச் செலுத்தி அந்தக் கம்ப்யூட்டரை அழித்து விடும் சாதனை ஒரு கேள்விக்குறியென்றால் -

அம்மனின் திருவிழிகளுக்குரிய ஆற்றலைத் தடுத்து நிறுத்தும் சக்தியை அதுவரை வெறும் தூசுப் படலம் பெற்றிருந்தது என்பது அதை விடப் பெரிய கேள்விக்குறி!

இப்படி எண்ணற்ற கேள்விக்குறிகள், இந்தக் கம்ப்யூட்டர் யுக - புராண காலக்கலவைப் படத்தில் பரவலாக எழுந்தாலும் மன நிறைவு அளிக்கும் அம்சம் - ஷாமிலியின் நடிப்பு. அவள் சிரிப்பும் துடிப்பும் நெஞ்சைக் கொள்ளை கொள்ளுகின்றன.

அடுத்தது, வளர்ந்து வரும் விவேக். இதில் கதாநாயக அந்தஸ்து பெறுகிறார். சிரிப்புக்குப் பஞ்சமில்லை. நந்தனாரை நினைவூட்டும் 'என்னப்பனல்லவா, என் தாயுமல்லவா' பாடல் காட்சி இதற்கொரு சாம்பிள்.

யானையும், குதிரையும், நாயும், குரங்கும், கிளிகளும் பாராட்டை அள்ளிக் கொண்டு போவது நிஜம் என்றாலும், அவை ஒரு கூட்டத்தையே எதிர்த்துச் சண்டை போட்டு வெற்றி பெறுவதாகக் காட்டியிருப்பதை என்ன சொல்ல?

செந்தூர தேவி! ஏன் இப்படி சினிமா ரசிகர்களைச் சோதிக்கிறாய்?

— சி. ஆர். கே.

நேற்றுவரை நந்தவனம்

14

ராஜேஸ்வரி அவள் வந்ததை எதிர் பார்க்கவில்லை. உட்புறமுள்ள கூடத்தில் அமர்ந்து, வீடியோவில் குமரனின் திருமண வைபவத்தைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மீரா வேகமாய் உள்ளே வந்து, தனக் கென ஒதுக்கப்பட்ட அறையில் போடப் பட்டிருந்த பெரிய கட்டிலில் வந்து விழுந்தாள்.

காலையில், தருமராஜனின் லேட் டஸ்ட் சின்ன வீடு என்று ராஜேஸ்வரியால் வர்ணிக்கப்பட்ட நிர்மலாவைப் பார்க்கப் போன மீரா, எதிர்பாராத விதமாய் நாகு மாமாவையும் அவரது மகள் மங்களாவை யும் சந்தித்த பின், வெறுத்துப் போனவ ளாய் வீடு திரும்பி விட்டாள்.

''என்ன மீரா... என்ன ஆச்சு?''

''ஒண்ணுமில்லேம்மா... தலைவலிக் குது...''

''சித்த முந்தி நல்லாத்தானே கிளம் பினே? அதுக்குள்ளே... இதென்னடிம்மா அதிசயமா இருக்கு? டாக்டருக்கு போன் செய்யட்டுமா?''

''சேச்சே.. அதெல்லாம் வேண்டாம். கொஞ்ச நேரம் படுத்திருந்தாச் சரியாப் போயிடும்...''



ராஜேஸ்வரி அவளையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு நகர்ந்தாள். வாசலில் நின்று கொண்டிருந்த ஞானப் பிரகாசத்திடம் என்னவோ பேசி னாள்.

என்ன நடந்தது என்று கேட்டிருப்பாள் போல இருக்கிறது. வீடியோவின் நாதசுர ஒலியில், மற்ற சப்தங்கள் அனைத்துமே மழுங்கிப் போய் விட்டன.

மீரா, இலக்கில்லாமல் கூடத்தில் ஓடும் வீடியோ படத்தைப் பார்த்தபடி படுத் திருந்தாள்.

குமரன், இதோ... இப்போது பார்க்கும் சிடுசிடுப்பான குமரனில்லை அதில். கல்யாணக் களையில் கறுப்பு முகம் அலாதி அழகாய்... அடிக்கடி சிரித்தான். கையில் கட்டியிருந்த கங்கணக் கயிற்றை நிமிஷத் துக்கு ஒருமுறை தளர்த்தி விட்டுக் கொண்டான். நலங்கு நிகழ்ச்சியில் அனேக மாய் மனைவிக்கே விட்டுக் கொடுத்தான். குடத்துக்குள் காசு போட்டுக் கணவனும் மனைவியுமாய் ஆளுக்கொரு கையை உப யோகித்துத் தேடும் போது, மனைவியைக் கிள்ளினானோ என்னவோ... அவள் முகத்தில் சின்னதாய் இமைப் பொழுதுக்கு வலி... அதற்கே அவன் பதறிப் போனது, முகத்தில் பளிச்செனத் தெரிந்தது.

நடு நடுவே முழு ஜரிகை போட்ட பட்டுப் புடைவையும், ஏகப்பட்ட நகை களுமாய் ராஜேஸ்வரி அம்மாள். முகத்தில் மட்டும் இருட்டு... நிமிஷத்துக்கொரு தரம் கணவனைத் தேடி அவளது கண்கள் பரிதாபமாய் அலைந்தன.

தருமராஜனைத் தேடி வந்து பல பிரமு கர்கள் பேச, அவரோ ஓரிடத்தில் நிற்காமல், ஜரிகை அங்கவஸ்திரம் தரையில் புரள, இங்குமங்குமாய் அலைபாய்ந்து கொண்டி ருந்தார்.

மாலை வரவேற்பு நிகழ்ச்சி படமாக்கப் பட்ட போது, சின்னதாய், மெழுகு பொம்மை போல ஒரு பெண் மேடையில் நடனமாடினாள். அடிக்கடி குமரனையும், தருமராஜனையும் பெரிய கண்களால்

அனுராதா ரமணன்

அவள் சுண்டி இழுக்க முயற்சி செய்தது வெளிப்படையாகவே தெரிந்தது.

குமரனுக்கு இவளைப் பார்க்கவே நேர மில்லை போல, மாலையும் கழுத்துமாய்ப் பக்கத்தில் அமர்ந்திருந்த மனைவியுடன் சதா காலமும் கிசுகிசுவெனப் பேசிக் கொண்டிருந்தான்.

கூர்ந்து கவனித்ததில், குமரனுக்கு இருந்த உற்சாகத்தில், சரி பாதி கூட தெய்வ நாயகியின் முகத்தில் இல்லாதது புலப் பட்டது மீராவுக்கு. அது மட்டுமில்லை; இவன் பத்து வார்த்தை பேசினால், அவள் சின்னதாய் ஒரு தடவை உதட்டை அசைத் தாள்.

தரு'மராஜன், திடுதிடுவென ஒரு பெரிய ரோஜாப் பூமாலையைக் கொண்டு வந்து, நடனமாடிய பெண்ணின் கழுத்தில் போட் டது மட்டுமின்றிச் செல்லமாய் அவள் கன்னத்தில் தட்டியும் கொடுக்க -

அது நேரம் வரையில் வேறு வேலை யில் கவனமாய் இருந்த ராஜேஸ்வரி, வேக மாய் வந்து 'பொக்'கென டி.வி.யின் விசை யைத் தட்டி விட்டாள்.

''சனியன் பிடிச்சவ.. சாகசக்காரி.. இவ ளாலேதான் நான் ரொம்பவும் அவதிப் பட்டேன் மீரா. இப்பப் பார்த்தியே... இதுக்கு அடுத்த ஸீன் என்ன தெரியுமா.. வெத்தலை பாக்குத் தட்டுல பணத்தோட நான் பட்டுப் புடைவை வச்சுத் தரல்லை யின்னு இந்தப் பாவி மனுஷன் அத்தனை பேருக்கு மத்தியில என்னைக் கை நீட்டி அடிச்சதுதான்...''

''.....''

''குமரன் அப்பா புத்தி எனக்குத் தெரியாததில்லை. உரலுக்குப் புடைவை சுத்தி வச்சிருந்தாக் கூட, ஒரு தடவைக்கு நாலு தடவை திரும்பிப் பார்ப்பாரு.. தெரிஞ்சும் தெரியாமலுமா எத்தனையோ தொடுப்பு. ஆனா, எவ விவகாரத்துலேயும் நான் அடி வாங்கினதில்லே தாயி.. இவளாலே அன்னிக்கு நான் அவமானப் பட்டேன். அடுத்தாப்பல என் மருமக அவ மானப்பட்டா...''

மீரா இத்தனையையும் கேட்டபடி, கண்மூடிப் படுத்திருந்தாள்.

மனசுக்குள் இன்னமும் நாகு மாமா வும், மங்களாவுமே நின்றிருந்தனர்.

'எங்க அப்பா, சண்டையின்னு வந்தா, தன் பக்கம் ஜெயிக்காம விட மாட்டார்...'

ராஜேஸ்வரி, மீராவையே ஒருகணம்



பார்த்தாள்.

''என்ன, தூக்கமா?''

''உம்...''

''நல்லாத்தான் காலை நீட்டிப் படுத்துத் தூங்கேன். ஏன் இப்படி கோழிக் குஞ்சு மாதிரி முடங்கறே... நான் கதவை வெறுமே சாத்திட்டுப் போறேன்... இந்தப் பய இளவரசு வந்தா, உன்னை ஒரு நிமிஷம் கூடத் தூங்க விட மாட்டான்.''

ராஜேஸ்வரி அறைக் கதவை மெல்லச் சாத்தி விட்டுப் போனாள்.

மாலை நாலு மணி சுமாருக்குக் கையில் காப்பியுடன், மீராவைத் தேடி வந்தவள், படுக்கை காலியாக இருப்பது கண்டு அலட்டிக் கொள்ளவில்லை.

'எங்கே போயிருக்கப் போறா... இங்கே தான் எங்கேயாவது இளவரசுவோட தோட்டதைச் சுத்திட்டிருப்பா...'

ராஜேஸ்வரி மாடியையும், தோட்டத்தையும் ஒருமுறை வலம் வந்ததுதான் மிச்சம். வாசலில் ஆட்டோவுக்குள் முடங்கிக் கிடந்த ஞானம், ராஜேஸ்வரியின் முதல் அழைப்பிலேயே துள்ளி எழுந்தான்.

''ஞானம்...''

''அம்மா...''

''இந்தப் பொண்ணு உன்கிட்ட ஏதாச்சும் சொல்லிட்டுப் போச்சா?''

''இல்லையேம்மா...''

''என்னடா இப்படிச் சொல்றே? தூங்கப் போறேன்னு போய்ப் படுத்தவ, எங்கே போனான்னு தெரியலையே. தஞ்சாவூர்லே கிழக்கு மேற்கு கூடத் தெரியாதேடா அவளுக்கு...''

''இங்கேதான் எங்கியாச்சும் காலாற நடந்து போயிருக்கும். வந்துடும்மா. பட்டணத்துப் பொண்ணு. எங்கே போனாலும் திரும்பி வர, வழி விசாரிச்சுக்கும்...''

என்னதான் ஞானம் சமாதானமாய்ச் சொன்னாலும் கூட, ராஜேஸ்வரி கவலை படர்ந்த முகத்துடன் வாசலுக்கும் உள்ளுக்குமாய் அலைந்து கொண்டிருந்தாள்.

மீராவைக் காணோம் என்பதை விடவும், குமரன் வந்தால் என்ன சொல்வது என்பதே அவளின் பதற்றத்துக்குக் காரணம்.

''இந்தப் பொண்ணு எங்கே போய்த் தொலைஞ்சாளோ தெரியலையே குமரு... காலையில பத்தரை மணிக்கு நம்ம ஞானத்தோட ஆட்டோவுல கிளம்பிப் போனா. திருப்பி பன்னெண்டு மணி சுமாருக்கெல்லாம் வீட்டுக்கு வந்துட்டா. தலைவலியின்னு படுத்தா. சரிதான் தூங்கட்டும்னு... சாயந்திரம் டீயோட போய்ப் பார்த்தா ஆளைக் காணோம்... ஞானத்தோட வண்டியிலேயும் போகலை...''

ராஜேஸ்வரி பயந்தபடி இழுத்தாள்.

ஏற்கெனவே குமரனுக்கு இந்தப் பெண்ணை வீட்டோடு தங்க வைத்திருப்பது பிடிக்கவில்லை.

இப்போது காணோம் என்றால்...

அவள் கலவரத்துடன் மகனைப் பார்க்க, அவனோ, சுழற்றிய வேகத்தில் சட்டையை மாட்டிக் கொண்டு, மோட்டார் சைக்கிளில் தாவி ஏறினான்.

மீராவிடம் எத்தனையோ கடுமையான வார்த்தைகளை அவன் உபயோகித்திருந்தாலும், உள்ளூர அவளிடம் பரிவும், மதிப்பும் இருந்தது.

முதலில் அவள் எடுத்தெறிந்து பேசிய போது, 'படிச்ச திமிர்... புத்தியக் காமிக்கறா...' - இப்படி அவன் நினைத்தது நிஜம்.

பின்னால் இப்படி நினைத்ததற்காக அவன் மனத்துக்குள் வெட்கப்பட்டான். வேதனைப்பட்டான்.

மீரா - இளவரசுவைத் தூக்கிச் சுமப்பது மட்டுமில்லை...

ஒருநாள் இரவு, ராஜேஸ்வரியுடன் தூங்கப் போன குழந்தை, அரைத் தூக்கத்தில் மீராவை எழுப்பி இருக்கிறான்.

''என்னடா?''

''ஆச்சா...''

அவன் தனது பிஞ்சு விரல்களை உயர்த்திக் காட்டியிருக்கிறான்.

மீரா, அறையை ஒட்டியிருந்த பாத்ரூமிற்கு சிறுவனைத் தூக்கிச் செல்ல, அவனோ விடாப்பிடியாய் கையைக் காலை உதைத்துக் கொண்டு பிடிவாதம் பிடிக்க...

''இங்க வேணா அங்க... டாடி ரூம்லே...''

சிறுவனுக்கு ஆரம்பத்திலிருந்தே மேல் நாட்டுப் பாணி வளர்ப்பு...

''அப்பா ரூம் சாத்தியிருக்குமேடா...''

''அப்ப வேணா...''

சிறுவன் அவளது பிடியிலிருந்து நழுவி, படுக்கையில் குப்புற அடித்துப் படுத்தான்.

''முளைச்சு மூணு இலை விடலை. என்ன பிடிவாதம்டா. அப்பனைப் போல...''

அவள், குழந்தையைத் தூக்கிக் கொண்டு, மளமளவெனக் கீழே இறங்கி வந்து, குமரனின் அறைக் கதவைத் தட்டினாள்.

''என்ன?''

குமரன் கதவைத் திறந்ததும் நிலைமையை உணர்ந்து பிள்ளையை வாங்க இரு கைகளையும் நீட்டினான்.

''வேணா ஆன்ட்டிதான்...''

மீரா, படபடவெனப் பொரிந்தாள்.

''தள்ளுங்க. குழந்தைக்கு அவசரம்...''

''உட்கார வையுங்க. நான் வந்து வாஷ் பண்ணறேன்..''

''ஏன், நான் அலம்பி விட்டா மாட்டேன்னு சொல்லிடுவாளோ... அட ஏன் சார், குழந்தை மனைகலயும் பேதத்தைத் திணிக்கப் பார்க்கறீங்க....''

அவள், சிறுவனுடன் உள்ளே போனதும், மறுபடி டர்க்கி டவலில் குழந்தையை ஒரு ரோஜாச் செண்டைச் சுற்றுவது போலச் சுற்றிக் கொண்டு வந்ததும்...

குமரனுள் எங்கோ ஒரு சின்ன இளக்கம்...

தெய்வநாயகிக்குப் பிறகு, இளவரசு ஒட்டிக் கொண்டிருப்பது மீராவிடம்தான்.

இதை நினைக்கும் போது, உள்ளுக்குள் ஒருவித பயமும் உண்டாகும்.

இந்த மீரா, தன் காரியம் முடிந்து கிளம்பி விட்டால் குழந்தை இன்னும் ஏங்கிப் போகாதோ...

இப்பொழுது அந்த பயத்தை மீறி - மீராவைக் காணோம் என்கிற நினைப்பு, நெஞ்சை உறைய வைத்தது.

தேர்தல் சமயமாதலால் ஊர் நிலைமை சரியில்லை.

கண்டிப்பாய்க் குமரன் வென்று விடுவான் என்கிற வயிற்றெரிச்சலில் எதிர்க் கட்சியினர் வாய்க்கு வந்தபடி மேடையில் முழங்கிக் கொண்டிருந்தனர்.

''தாய்க் குலத்தை மதிக்கிறாரே... எதிர்க் கட்சித் தலைவர்... இப்ப என்ன செஞ்சிருக்காரு... ஒரு வாரமா வீட்டோட ஒரு பொண்ணைக் கொண்டு வந்து சிறை வச்சிருக்காரு. எதுக்குக் கொண்டு வந்தாரு? எப்படிக் கொண்டு வந்தாரு? தானா வந்ததா... இவரு செட்டப் பண்ணினதா?''

ஒவ்வொரு கேள்விக்கும் மேஜையில் ஓங்கி ஒரு குத்து. கூடியிருந்த கூட்டம் கெக் கெக் என்று சிரித்தது...

இப்போதிருக்கிற நிலைமையில் மீராவை - யார், என்ன என்று கூட விசாரிக்காமல் கொன்று தெருவில் வீசி - கொலையைச் செய்தது குமரன்தான் என்று கூசாமல் எதிர்க்கட்சியினர் சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தச் சமயத்தில் இவள் எங்கே போனாள்?

குமரனின் மோட்டார் சைக்கிள் கூட, தன் எஜமானனின் நிலை உணர்ந்து அம்பாய்ப் பாய்ந்தது.

(தொடரும்)



''தாத்தா, ஆசிர்வாதம் பண்ணுங்க! எனக்கு எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ் சேஞ்சிலிருந்து அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் வந்திருக்கு!''

''மண்டு! சரியாப் பாருடா; கடிதாசு என் பேருக்கு வந்திருக்கு!''

- வி. சுந்தரேசன்.



''சிஷ்யா நல்ல கண் டாக்டர் யாருன்னு விசாரி... என் கண்ணைப் பரிசோதனை செய்யணும்...''

''ஏன் குருவே? என்ன கோளாறு?''

''ஞானதிருஷ்டியில் தெரியும் காட்சியெல்லாம் மங்கலாத் தெரியுது. அதான்...''

- மோஸ்ஜே.

''காலம் ரொம்பத்தான் கெட்டுப் போச்சு.''

''ஏன் சார் அப்படிச் சொல்றீங்க?''

''காயலாங்கடைக்குப் போக வேண்டிய என்னோட சைக்கிளையே எவனோ திருடிக்கிட்டுப் போயிட்டான்னாப் பாருங்களேன்!''

- சீர்காழி. வி. ரேவதி.



எக்ஸிக்யூடிவ் நாற்காலி

வெளியே புறப்பட்ட ஜனார்த்தனத்தை ஏற இறங்கப் பார்த்தாள் வனஜா.

''...என்னங்க இது தொளதொளன்னு க்ரீஸே இல்லாமே பாண்ட்... கசங்கின சட்டை...! பாக்கறவங்க மட்டமா நெனைச்சுரப் போறாங்க... நல்லதாப் போட்டுக்கிட்டுப் போங்க...''

அவளுக்குப் பதில் சொல்லும் முன், ஆக்ரோஷத்துடன் குறுக்கே பாய்ந்தாள் மகள் தேவகி. ப்ளஸ் டூவில் நுழைந்திருக்கிறாள். சல்வார் - கமீஸில் துள்ளுகிறாள். பாவாடை தாவணியையெல்லாம் இனி மியூசியத்தில்தான் பார்க்க முடியும் போலிருக்கிறது.

''ஒங்க பேண்டும் சட்டையும் சகிக்கலைப்பா... நல்லதாப் போட்டுக்கிட்டு வெளியே போறதானாப் போங்க. இல்லேன்னாப் போக வேண்டாம். ஆமா... அன்னிக்கு ஒருநா, சூப்பர் மார்க்கட்டுல என் ஃப்ரெண்ட் உங்களைப் பார்த்திருக்கா. மறுநா ஸ்கூல்லே என் ஃப்ரண்ட்ஸ் முன்னாடி, 'என்னடி இவளே, உங்கப்பா இப்படி வர்றாரு..? பெரிய எக்ஸிக்யூடிவ்ன்னே...? சரியாவே டிரஸ் பண்ணிக்காமே வர்றாரு?' அப்படின்னு கேட்டுட்டா... எனக்கு ஷேமாப் போயிடுச்சு...''

''கரெக்ட்க்கா...! என் ஃப்ரண்ட்ஸும் அப்படித்தான் சொன்னாங்க...''

குற்றம்சாட்டும் பார்வையுடன் இரண்டாம் பிள்ளை சுகுமார், அக்காவுக்கு ஆதரவளித்தான்.

''...சு ம் ம ா காஷுவலாத்தானே வெளிலே போறோம்னு கௌம்பினேன். இதுக்கெதுக்கு நல்ல டிரஸ்ஸுன்னு...''

அவர் முடிக்கும் முன் மூன்று பேரும் ஏக காலத்தில் ''உங்களுக்காக இல்லாட்டாலும் உங்க பொஸிஷனுக்காகவாவது பண்ணித்தான் ஆகணும்'' என்று உரத்த குரலில் எதிர்ப்புத் தெரிவிக்க, வேறு வழியின்றி உள்ளே போனார் ஜனார்த்தனம்.

''டிரஸ் பண்ணிக்கிற போது, அப்படியே ஷேவ் பண்ணிக்கிட்டு, சோப் போட்டு நல்லா மொகத்தை வாஷ் பண்ணிட்டு வாங்க. அரும்பரும்பாத் தாடி, மூஞ்சி டல்லடிக்குது...''

மகள் கூறியது காதில் விழுந்தது. இன்றில்லை. இதற்கென்றில்லை. ஒவ்வொரு விஷயத்திலும் இப்படித்தான்.

அன்றொரு நாள் பக்கத்துத் தெரு வரை சென்று வரலாம் என்று கிளம்பியவர், அவசரத்தில் செருப்புப் போட்டுக் கொள்ளவில்லை. போட்டுக் கொள்ளவில்லையென்றால், போட்டுக் கொள்ள வேண்டாம் என்றில்லை. தேடிப் பார்த்த போது, உடனடியாகக் கிடைக்கவில்லை. சரி, அடுத்த தெருதானே என்று கிளம்பி விட்டார்.

அன்றைக்கென்று சத்ருவாய் அவரிடம் வேலை பார்ப்பவன் எதிரே வந்திருக்கிறான். செருப்பில்லாமல் வெற்றுக் கால்களுடன் அவர் நடந்து போவதைப் பார்த்திருக்கிறான் போலிருக்கிறது. மறுநாள் அலுவலகத்தில் ஒரே விசாரணைமயம்!

''சார்... நேத்திக்குச் சாயங்காலம் செருப்புக் கூட இல்லாமே அவசர அவசரமா எங்கேயோ போனீங்களாமே? எனிதிங் சீரியஸ்?''

அதற்கு விளக்கமளித்து, விதவிதமாய்ச் சால்ஜாப்புச் சொல்லி... ஏ, அப்பா! இந்த அவஸ்தைக்குச் சற்று நேரம் நிதானமாய்த் தேடிப் பார்த்துச் செருப்பை அணிந்து கொண்டு - நல்ல செருப்பாய்ப் போட்டுக் கொள்ள வேண்டும். பழஞ் செருப்பாய் இருந்தால் அதற்கும் ஏதாவது விமர்சனம் வந்து சேரும் - போகாதது மகத்தான தவறு என்று மனத்திற்குள் தன்னைத்தானே நொந்து கொண்டார்.

தளர்ச்சியுடன் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டார். வெளியே செல்லும் உத்தேசம் மாறிப் போயிற்று.

மனம் ஆயாசமாயிருந்தது.

நினைத்தபடி ஒரு சட்டையை, மனத்துக்குப் பிடித்த நிறத்தில் வாங்கக் கூட

ஜெயபாரதன்

யோசனையாய் இருக்கிறது.

ஒருமுறை சட்டை வாங்கக் கடைக்குப் போன போது, பளிச்சென்று ஊதா நிறத்தில் கருப்புக் கட்டம் போட்ட சட்டையை எடுத்தார் ஜனார்த்தனம். பார்க்கவே பரவசமாய் இருந்தது. 'பளிச் பளிச்'சென்று கண்ணைப் பறிக்கும் வண்ணங்கள் என்றால் கொள்ளை ஆசை அவருக்கு.

''...யாருக்கு சார்?'' என்றான் கடைக்காரன்.

''எனக்குத்தான்... ஏன்? அளவு சரியாத் தானே எடுத்தே?''

விநோதமாய்ப் பார்த்தான். ''இதெல்லாம் பசங்க போட்டுக்கிடறது சார்.. உங்க மாதிரி எக்ஸிக்யூடிவ்ங்களுக்குன்னே ஸ்பெஷலா ஷர்ட்ஸ் இருக்கு சார்...'' என்று வேறொரு பெட்டியைத் திறந்து நிறையச் சட்டைகளை எடுத்துப் போட்டான்.

எல்லாம் ஒரே மாதிரியாய் வெளிர் நிறம் அல்லது வெள்ளையை அடிப்படை யாகக் கொண்டவை. பட்டும் படாமலும் தயக்கத்துடன் தெரிந்த கோடுகள். கட்டங்கள். அல்லது லென்ஸ் வைத்துப் பார்த்தால் தெரிகிற பொடிப் பொடிப் புள்ளிகள்.

பார்க்கவே அலுப்பாயிருந்தது.

மனத்துக்குப் பிடிக்காமல், ஏதோ ஒன்றை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தது நினைவில் எழுந்தது. மனைவியும் மகளும் பாராட்டியதும் ஞாபகம் வந்தது.

சரி. டிரஸ் விஷயம்தான் இப்படியென்றால், வாய் விட்டுச் சிரித்து, மனம் விட்டுத் துக்கித்து உணர்வுகளையாவது இஷ்டம் போல் காட்டிக் கொள்ள முடிகிறதா? அதற்கும்தான் எவ்வளவு கட்டுப்பாடு?

அன்றொரு நாள் அலுவலகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி நினைவில் நெருடிற்று.

அலுவலக இலக்கியச் சங்கத்தின் விழா. அலுவலக மானேஜர் என்ற முறையில் இவர்தான் தலைமை வகித்தார். மேடையில் இவரும் பேச்சாளரும் அமர்ந்திருந்தனர். பேச்சாளர் மிகத் திறமையாகப் பேசுபவர் என்பதால், ஹாலில் கூட்டம் நிரம்பி வழிந்தது. பேச்சின் ந டு வி ல், அருமையான நகைச்சுவை ஒன்றினை அவர் கூற, அது கேட்டு இவர் உணர்ச்சி வயப்பட்டுப் பெரிதாய்க் கைதட்டி, வாய் விட்டு உடல் குலுங்கிச் சிரித்து விட, எதிரில் அமர்ந்திருந்தவர்கள், ஒருகணம் தாம் சிரிப்பதை விட்டு, இவரைக் கவனிக்கலாயினர்.

அதை உணர்ந்ததும் இவர் சிரிப்பு



சட்டென்று எங்கோ போயிற்று. மனம் பேச்சில் லயிக்கவில்லை. தன்னை யாரா வது கவனிக்கிறார்களா என்று சன்னமாய்ப் பார்ப்பதிலேயே பொழுது போயிற்று. பேச்சின் சுவையில் மனம் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்தப் பெரிதும் கஷ்டப்பட்டார். மெலிதாய்ச் சிரித்து விட்டுத் தம்மை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்ப்பதிலேயே பொழுது போயிற்று. அசௌகர்யங்கள் மனத்தை உறுத்த வீடு வந்து சேர்ந்தார்.

இதென்ன அவஸ்தை, இயல்பாய் இயற்கையாய் இருக்க முடியாமல்?

'என்ன ஆச்சு?' என்ற வினா நாக்கு நுனியில் நர்த்தனமாடி வெளியே குதிக்கத் தவித்தாலும், மிகுந்த கஷ்டத்துடன் அடக் கிக் கொண்டு, வேறு வேலையாய் அங்கே வந்தது போன்ற பாவனையுடன் முதுகை விறைத்துக் கொண்டு நடந்ததும், விளைவு தெரிய மனம் துடியாய்த் துடித்ததும், 'இன்டியா ஹேஸ் வோன்' என்று யாரோ கூறியதைக் கேட்டதும் ஒரு துள்ளல் துள்ள வேண்டும் என்று மனம் தவித்ததை, பெரிய தவிப்புடன் அடக்கிக் கொண்டு தம் அறைக்கு வந்ததும் நினைவில் அலையலை யாய் எழுந்தன.

ஜனார்த்தனத்திற்குக் கிரிக்கெட் என் றால் உயிர். விளையாடியதே இல்லை யென்றாலும், கமென்ட்டரி கேட்டுக் கேட்டு ஆர்வம் கொப்புளித்தது.

ஒருமுறை இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையே நடந்த ஒரு நாள் கிரிக்கெட் பந்தயத்தின் முடிவு, 'இங்கா அங்கா' என்று இழுபறியாய் இருந்த போது, நாற்காலியில் அமர முடியாமல் தவியாய்த் தவித்தார். ஏர்-கண்டிஷன் செய்யப்பட்ட அறையாத லால் டிரான்ஸிஸ்டர் சரியாக வேலை செய்யவில்லை. என்ன ஆயிற்று என்று தெரிந்து கொள்ளும் ஆவலைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் அறைக்கு வெளியே வந்தார்.

வெளியே ஜன்னலோரம் சில ஊழி யர்கள் ஒரு டிரான்சிஸ்டரை வைத்துக் கொண்டு கூட்டமாய் நிற்பதைக் கண்டதும், ஆவல் திமிறிக் கிளம்ப அவ்விடத்திற்கு விரைந்தார்.

கூட்டத்தில் ஒருவர் இவர் வருவதைக் கண்டு கிசுகிசுக்க, உடனே அனைவரும் புலியைக் கண்ட மான்களாய்த் தத்தம் இருப்பிடத்திற்குக் கலைந்து போயினர்.

தமது அறையில் உலாவினார் ஜனார்த்தனம். சுவரில் அவர் மானேஜராய்ப் பங்கேற்ற பல நிகழ்ச்சிகளின் புகைப் படங்கள் தொங்கின. பார்க்கவே எரிச்ச லாய் இருந்தது.


இதுதான் இப்படி. பொது விஷயங் களில் தம் கருத்தை வெளிப்படை யாகவாவது கூற முடிகிறதா? 'என்ன பேசு வது எப்போது பேசுவது?' என்று வன விலங்கின் எச்சரிக்கை உணர்வுடன் அல்லவா கருத்துத் தெரிவிக்க வேண்டி யிருக்கிறது?

அன்றொரு நாள், அலுவலகத்தில் சாதாரணமாய்ப் பேசிக் கொண்டிருக்கும் போது, ஓர் அரசியல் கட்சிக்கு ஆதரவாய்ப் பேசி விட, சுற்றியிருப்பவர்கள் மௌன மாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப் போது ஒன்றும் தெரியவில்லை என்றாலும், அதுதான் பின்னால் எவ்வளவு பெரிதாய் விசுவரூபம் எடுத்து விட்டது?

சில நாட்கள் கழித்து, இவர் ஓர் ஊழியர் மீது கடுமையாய் ஒழுங்கு நடவ டிக்கை எடுக்க நேரிட்டது. அந்த ஊழியர் இவர் ஆதரவாய்ப் பேசிய அரசியல்

குழந்தை மேதை குஞ்சப்பா

'யோ'



கட்சியின் ஜன்மவிரோதக் கட்சியின் ஆதர வாளர் போலிருக்கிறது. அவ்வளவுதான். தன் கட்சிக்கு எதிர்க் கட்சியாளர் என்ற காழ்ப்புணர்ச்சியால்தான் இப்படி நடவடிக்கை எடுத்தார் என்ற புரளியைச் சிலர் கிளப்பிப் பொதுஜனக் கருத்து ஒன்றினை உருவாக்கி விட்டு, தலைமை யலுவலகத்திற்கு மொட்டைக் கடிதமும் போட்டிருக்கிறார்கள். அங்கிருந்து இவ ரிடம் விளக்கம் கோரிக் கடிதம் வந்ததுடன், அரசியல் சார்பு உணர்வுகளை அலுவல கத்தில் வெளியிடக் கூடாது என்று அறி வுரை வேறு வழங்கப்பட்டது.

ஒரு வாரம் சரியாய்ச் சாப்பிடக் கூட மனமில்லாமல் எவ்வளவு தவித்தார்?

இஷ்டப்படி ஆடை உடுத்த முடிய வில்லை. மனம் விரும்பியபடி பேச முடிய வில்லை. தம் கருத்தை உள்ளபடி வெளி விட முடியவில்லை. ஏன் வாய்விட்டுச் சிரிக்கக் கூட முடியவில்லை.

சே!

நினைத்து நினைத்து மனம் கசந்து போயிற்று.

''...ஏங்க குளிக்கப் போகல்லே...? அப்புறம் ஆபீசுக்கு லேட்டாயிடப் போகுது.. நீங்க லேட்டாப் போனா நல்லா இருக்குமா...''

வனஜா எச்சரித்தாள்.

வாஸ்த்தவம். இயந்திரம் போல், எல்லோருக்கும் முன்னால் நாற்காலியில் அமர்ந்து கொள்ள வேண்டும். இல்லா விட்டால் இமேஜ் போய் விடும். நான்கு பேர், நான்கு விதமாய்ப் பேசுவார்கள்.

அவசர அவசரமாய்க் குளித்துச் சாப் பிட்டு விட்டு வெளியே வந்தார்.

ஹாலில் உறவினர்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். பழைய குடும்ப விஷயங்கள். கேட்கச் சுவாரஸ்யமாயிருக் கும். பேசத் துடித்த நாக்கைக் கஷ்டத்துடன் கட்டுப்படுத்திக் கொண்டார்.

''இந்தாங்க பிளட் பிரஷர் மாத்திரை'' என்று மாத்திரையையும் ஒரு தம்ளர் தண்ணீரையும் நீட்டினாள் வனஜா.

சாப்பிட்டு விட்டு, உறவினர்களிடம் கூறிக் கொண்டு மிடுக்காய் நடந்து போனார். செயற்கையாய் மேற்கொண்ட இறுக்கத்தில் மென்னுணர்வுகள் வலித்தன.

''பெரிய எக்ஸிக்யூடிவ்... நாற்காலியில் ஒக்காந்துட்டார்னா இவர் வச்சதுதான் சட்டம்...'' என்று உறவினர் ஒருவர் மற்றவ ரிடம் கூறியதும், ''ஆமாமா... என்னிக் குமே ஜனார்த்தனம் அதிர்ஷ்டக்காரன்'' என்று மற்றவர் ஆமோதித்ததும் அவர் காது களில் மெலிதாய் விழுந்தன!

தில்லித் தமிழ்



திருநெல்வேலித் தமிழ், தஞ்சாவூர்த் தமிழ் போல, தில்லித் தமிழுக்கும் ஒரு தனி மஜா இருக்கத்தான் செய்கிறது! தில்லி வாழ்த் தமிழர்கள் தங்கள் பேச்சில் இந்திச் சொற்களைக் கலந்து பேசுவதைப் புரிந்து கொள்ள, நீங்கள் சாதுவாக, அதாவது சாமர்த்தியசாலியாக இருக்க வேண்டும்.

தில்லியில் வீட்டு வேலை செய்து பிழைக்கும் 'சேலத்துக்காரர்கள்' பேசும் தமிழைக் கேட்டால், அது தமிழ்தானா என்றே சந்தேகம் வந்து விடும். தாங்கள் வேலை செய்யும் வீட்டின் எஜமானியை 'செய்யற ஊட்டு அம்மா' என்று குறிப்பிடும் இவர்களுக்கு 'மீன்கார ஊடுகளிலும், இந்திக்கார ஊடுகளிலும் கூட நல்ல கிராக்கி. ஜுக்கி போட்டுக் கொண்டு குடியிருக்கும் இந்த வேலைக்காரிகள், காலிப் பத்து தேய்க்க எண்பது ரூபாய், ஊடு ஜாடு பண்ண எழுபது ரூபாய் என்று கறாராக 'ரேட்' பேசுவார்கள். வேலைக்குச் சேரும் பொழுதே மாதச் 'சுட்டி' (லீவு) எத்தனை என்று கேட்டும் இவர்கள், 'இந்தியா கேட்டு நோன்பு' (குடியரசு தினத்தன்று இந்தியா கேட் வழியாகச் செல்லும் ஊர்வலம்) போன்ற வைபவங்களைத் தமாஷா பார்க்க என்று 'எஸ்ட்ரா சுட்டிகள்' வேறு எடுப்பார்கள். காலையில் நாஸ்தா, சாயா இல்லாமல் வேலையைத் துவங்க மாட்டார்கள். 'எவரசு'ப் பாத்திரப் பைத்தியம் இவர்களையும் விட்டு வைக்கவில்லை. தீபாவளிக்கு எவரசுப் பாத்திரம் 'எடுக்காமல்' விட மாட்டார்கள். சண்டை என்று வந்து விட்டால் அச்சிட முடியாத இந்தி காலிகளை அதாவது வசவுகளை, இவர்கள் தாராளமாக அள்ளி வீசுவார்கள்.

தில்லிக்குக் குடிபெயரும் தமிழர்கள், முதலில் கற்றுக் கொள்ளும் இந்தி வார்த்தை 'அச்சா'வாகத்தான் இருக்கும். தொலை பேசியில் பேசும் பொழுதும் அச்சா, ஏதாவது விஷயத்தைக் கிரகித்துக் கொள்ளும் பொழுதும் இடையிடையே அச்சா, பேச ஆரம்பிக்கும் பொழுதும் அச்சா என்று எதற்கெடுத்தாலும் 'அச்சா' போடாமல் மதராசிகளால் இருக்க முடியாது.

தில்லியில் பிச்சைக்காரன் கூட 'சப்பல்' போடாமல் தெருவில் நடக்க மாட்டான். தில்லித் தமிழர்களும் கண்டிப்பாகச் சப்பல் போட்டுக் கொண்டுதான் நடப்பார்கள். சார்பாயில்தான் படுப்பார்கள். மோடா இல்லாத வீடு கிடையாது.

தில்லிவாழ்த் தமிழர்கள் 'ஸப்ஜி' வாங்கப் போகிறேன் என்றுதான் சொல்வார்களே தவிர, தப்பித் தவறி கூட காய்கறி வாங்கப் போவதாகச் சொல்லி விட மாட்டார்கள். வீண் குழப்பம் எதற்கு என்று சில வீடுகளில் இந்திக்கார ஸப்ஜி, தமிழ்க்கார ஸப்ஜி என்று ஸப்ஜியைப் பிரித்து விடுவார்கள். புலி பசித்தாலும் புல்லைத் திங்காது என்பது போல், தில்லியிலேயே பிறந்து வளர்ந்த தென்னிந்தியக் குழந்தைகள் தமிழ் ஸப்ஜியை (கூட்டு, கறி) தொட்டுக் கொண்டு, ஒரு நாளும் சப்பாத்தியைச் சாப்பிட்டு விட மாட்டார்கள். சப்பாத்திக்குத் தொட்டுக் கொள்ள இந்திக்கார ஸப்ஜிதான் ஏற்றது. மேலும் 'சக்கியில்' அரைத்துக் கொண்டு வந்த 'ஆடா'வினால் செய்யும் சப்பாத்திக்குத்தான் மவுசு அதிகம்.

தில்லிவாழ்த் தமிழ் குழந்தைகள், தென்னிந்தியப் பலகாரங்களின் பெயர்களை ''தோசா'', ''வடா'' என்று இந்தி(ய)ப் பெயர்களாக மாற்றி, இந்தப் பண்டங்களின் தேசிய இமேஜைக் காப்பாற்றி வருகிறார்கள். இந்தக் குழந்தைகள், பெரியவர்களைக் கண்டவுடன், அவர்கள்

ரமாமணி சுந்தர்



தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ''நமஸ்தே ஆண்டி, நமஸ்தே அங்கிள்'' என்றுதான் வந்தனம் தெரிவிப்பார்கள். அவ்வளவு தூரத்திற்குப் போவானேன், தில்லித் தமிழர்களின் வீடுகளில், அழுகிற பிள்ளை கூட 'சுப்' என்று சொல்லி அதட்டினால்தான் அழுகையை நிறுத்தும்.

திருமண வீடுகளில் விருந்து சாப்பிடும் பொழுது, ''இன்னும் கொஞ்சம் பாயசம் பரிமாறவா?'' என்று கேட்டவுடன், யாராவது ''பஸ், பஸ்'' என்று அலறினால், ஏதோ பஸ்ஸைப் பிடிக்கத்தான் ஓடப் போகிறாரோ (தில்லியில் ஓடிப் போய்த் தான் பஸ்ஸைப் பிடிக்க வேண்டும்) என்று நினைத்து விடாதீர்கள். போதும் என்ற சொல்லையே தில்லிவாழ்த் தமிழர்கள் மறந்து விட்டார்கள்.

தில்லிவாலா யாராவது உங்களைப் பார்த்து ''நீ சரியான புத்து (Budhu)'' என்று சொல்லும் போது, பெரிய புத்திமான் என்று பாராட்டுவதாக நீங்கள் நினைத்துக் கொண்டால், நீங்கள் உண்மையிலேயே சரியான புத்துதான்! அதாவது வடிகட்டின முட்டாள்!

தில்லியில் எல்லா வீடுகளிலும் வெகு சகஜமாகப் புழங்கும் சில தொழிற் பெயர்கள் பிரஸ்வாலா (இஸ்திரி போடுபவன்), தூத்வாலா (பால்காரன்), தோபி (சலவைத் தொழிலாளி), மோசி (செருப்புத் தைப்பவன்), கபாடி வாலா (பழைய பேப்பர்காரன்) ஜமேதார் (கழிவறை சுத்தம் செய்பவன்), சௌகிதார் (காவல்காரன்). இத் தொழிலாளர்களைத் தமிழில் எப்படிக் குறிப்பிடுவது என்று தில்லித் தமிழர்களைக் கேட்டுப் பாருங்கள். பாதிப் பேர்களாவது, நிச்சயமாக ஆடு திருடின சோர் மாதிரி திருதிருவென்று முழிப்பார்கள்.

இப்படி, தோடா, தோடா அதாவது கொஞ்சம், கொஞ்சம் இந்தி சொற்களைக் கலந்து தமிழ் பேசுவது, தில்லியில் எல்லா வீடுகளிலும் சல்தா ஹை. ஆனால் இளையதலைமுறைத் தமிழர்கள், குறிப்பாக டீன் ஏஜ், பெண்கள், பையன்களுக்கிடையே நடக்கும் உரையாடல்களோ, இந்தி, தமிழ், ஆங்கிலம் மூன்றும் கலந்த அவியலாகத்தான், அதாவது தமிழ்கார லப்ஜியாகத்தான் இருக்கும். தமிழில் பேசும் பொழுது 'டா' அல்லது 'டீ' போடுவது போல் 'யார்' உபயோகிக்காமல் இந்த இளைஞர்களால் பேச முடியாது.

ஒரே காலனியில் குடியிருக்கும் இரண்டு மதராசி மாணவர்கள் மீட் பண்ணினால் இப்படி உரையாடலாம் :

''ஹரே யார், க்யா ஹால் ஹை?''

''தும் சுனாவோ யார்''

''யார், நம்ப ரமேஷ் இல்லை, ரமேஷ். பெரிசா காடி (வாகனம்) வாங்கியிருக்காணாம், காடி. ரொம்பத்தான் தடி அடிச்சுக்கறான்.''

''சோடோ யார்... நம்ப வாக் போகலாம் வா.''

''வெயிட் கரோ யார். நான் டிரஸ் சேன்ஜ் பண்ணிண்டு வரேன்.''

''போர் மத் கரோ யார். இந்த டிரஸ்லே சலேகா, ஜல்தி வா யார்.''

ஸல்வார், கமீஸ் அணியும் இரண்டு தில்லித் தமிழ்ப் பெண்கள் தொலைபேசியில் அடித்த பக்வாஸ், அதாவது வெட்டிப் பேச்சு (இந்தத் தொலைபேசி உரையாடலை நான் எப்படி ஒட்டுக் கேட்கலாம் என்று என் மேல் விசாரணை தொடராதீர்கள்):

''ஹலோ யா, என்ன பண்ணிண்டிருந்தே?''

''ஐ வாஸ் குளிச்சு ஃபையிங் யார்!''

''இன்னிக்கு சாணக்கியால மூவி பார்க்கப் போகலாமா?''

''முஜே ஹோம் வொர்க் கர்னா ஹையா.''

''ரொம்பத்தான் ஷான் அடிச்சுக்கறே நீ. போலாம் வாயேன்!''

''நயீ யார், நயீ! இன்னிக்கி அம்மாவை வேறு மஸ்கா பண்ணனும்.''

''ப்ளீஸ் யார், கமான்.''

என்ன! இப்படியே படித்துக் கொண்டு போனால் மூன்று மொழிகளுமே மறந்து விடும் போலிருக்கிறதா? அச்சா! ஜல்தி கதம் பண்ணி விடுகிறேன். நமஸ்தே!



சிவகாமியின் சபதம்

நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்

பிக்ஷு யார்?

பிக்ஷுவிடம் தான் கவர்ந்து கொண்டு வந்தது விஷக் கத்தி என்று தெரிந்து நடுங்கிய குண்டோதரனைப் பார்த்து, ''பிக்ஷுவை எங்கே விட்டு விட்டு வந்தாய்? சீக்கிரம் சொல்!'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

''கோயில் மடைப் பள்ளிக்குள்ளே அடைத்துத் தாளிட்டு வந்திருக்கிறேன், பிரபு!'' என்றான் குண்டோதரன்.

''நல்ல காரியம் செய்தாய்! வா, போகலாம்! கிராமத்துக்கு வழி காட்டு!'' என்றார் மகேந்திர பல்லவர்.

அப்போது சத்ருக்னன், ''பிரபு! கிராமத்துக்கு நாம் ஏன் இப்போது போக வேண்டும்? நாம் வந்த காரியம் ஆகிவிட்டது. புத்த பிக்ஷுவைக் குண்டோதரன் கவனித்துக் கொள்ளுவான். நாம் போகலாம், வாருங்கள்!'' என்று கவலை தொனித்த குரலில் கூறினான்.

மகேந்திர பல்லவர், ''இல்லை சத்ருக்னா! நாம் வந்த காரியம் இன்னும் ஆகவில்லை. வாதாபிப் படைகளைத் தடுப்பதைக் காட்டிலும் முக்கியமான காரியம் இங்கே நமக்கு இருக்கிறது. துரோகி துர்விநீதனைச் சிறைப்படுத்தியது பெரிய காரியமில்லை. நாகநந்தி பிக்ஷுவைச் சிறைப் பிடித்துக் கொண்டு போனோமானால், இந்த யுத்தத்தில் நமக்கு முக்கால் பங்கு வெற்றி கிடைத்து விட்டது'' என்றார்.

''பிரபு! அவ்வளவு முக்கியமான காரியமாயிருந்தால், பிக்ஷுவை வெகு நாளைக்கு முன்பே சுலபமாகச் சிறைப்படுத்தியிருக்கலாமே? ஆயனர் வீட்டிலேயே பிடித்திருக்கலாமே?''

''இத்தனை நாளும் பிக்ஷு சுயேச்சையாக இருத்தல் நான் உத்தேசித்திருந்த காரியங்களுக்கு அவசியமாயிருந்தது. இனி மேல் அவர் வெளியில் இருந்தால் பாதகம் விளையும்.''

''பிரபு! பிக்ஷுவைச் சிறைப் பிடிக்கும் வேலையை என்னிடமும் குண்டோதரனிடமும் ஒப்படையுங்கள். தாங்கள் உடனே புறப்பட்டுச் செல்லுங்கள். ஆற்றுக்கு அக்கரையில் கண்ணபிரான் ரதத்தைப் பூட்டி ஆயத்தமாய் வைத்திருக்கிறான்.''

''இந்த வேலையை உங்கள் இருவரிடம் கூட ஒப்படைக்க முடியாது சத்ருக்னா! நானேதான் செய்தாக வேண்டும். குண்டோதரா! போ முன்னால்!'' என்றார் மகேந்திர பல்லவர்.

அதற்கு மேல் சத்ருக்னன் வாய் திறக்கவில்லை. மூன்று பேரும் ஏறக்குறைய பொழுது புலரும் சமயத்தில், மண்டபப்பட்டுக் கிராம எல்லையை அடைந்து, கோயில் வெளி மதிலைத் தாண்டிக் குதித்து உள்ளே சென்றார்கள். மடைப்பள்ளியின் கதவு வெளித் தாழிட்டபடி இருந்தது. சற்று கர்வத்துடனேயே குண்டோதரன் அந்த வெளித் தாழை அப்புறப்படுத்திக் கதவைத் திறந்தான். மூவரும் உள்ளே பிரவேசித்தார்கள். நாலாபுறமும் நன்றாய்ப் பார்த்தார்கள்.

மடைப்பள்ளியின் உட்புறம் சூனியமாயிருந்தது! மேற்கூரையில் சில ஓடுகள் எடுக்கப்பட்ட படியினால் உண்டாகியிருந்த துவாரம், பிக்ஷு எவ்விதம் அங்கிருந்து தப்பிச் சென்றார் என்பதைத் துலாம்பரமாகத் தெரியப்படுத்தியது.

அமரர் கல்கி

''நினைத்தேன், சத்ருக்னா! பிக்ஷுவைச் சிறைப்பிடிக்கும் வேலையை உங்களிடம் நான் ஒப்புவியாததன் காரணம் இப்போது தெரிகிறதா?'' என்றார் மகேந்திர பல்லவர்.

''குண்டோதரா! பல்லவேந்திரர் கூறியது காதில் விழுந்ததா? காஞ்சி ஒற்றர் படைக்கு நீ அழியாத அவமானத்தை உண்டுபண்ணி விட்டாய்!'' என்றான் சத்ருக்னன்.

''எஜமானே! அந்த அவமானத்தை இன்றைக்கே போக்கி விடுகிறேன். கருணை புரிந்து தங்களிடமுள்ள கத்தியை இங்கே கொடுங்கள். நாகநந்தி பிக்ஷு இந்த கிராமத்திலேதான் இன்னும் இருக்க வேண்டும். நாளைப் பொழுது விடிவதற்குள் அவரைக் கண்டுபிடித்து, அவருடைய தேகத்தில் இந்த விஷக் கத்தியைப் பதித்துக் கொல்லாவிட்டால், என்னுடைய நெஞ்சிலே இதைப் பதித்துக் கொண்டு உயிரை விடுவேன்'' என்றான் குண்டோதரன்.

சத்ருக்னன் கத்தியைக் குண்டோதரனிடம் கொடுக்க யத்தனித்த போது, மகேந்திர பல்லவர் குறுக்கிட்டு அதை வாங்கிக் கொண்டார்.

''குண்டோதரா! இந்த மாதிரி அசட்டுத்தனமான சபதம் இனிமேல் செய்யாதே! புத்த பிக்ஷுவின் உடம்பில் இந்தக் கத்தியை நீ செலுத்த முடியாது! அவருடைய தேகம் வஜ்ர தேகம். அவரைக் குத்தினால் கத்தியின் முனைதான் மழுங்கும். அப்படி அவரை நீ காயப்படுத்தினாலும், இந்தக் கத்தியிலுள்ள விஷம் அவரைக் கொல்லாது.....'' என்றார் மகேந்திர சக்கரவர்த்தி.

''அது எப்படி, பிரபு! பிக்ஷு மந்திரவாதியா? மந்திர சாதனங்களில் உங்களுக்குக் கூட நம்பிக்கை உண்டா?'' என்று கேட்டான் சத்ருக்னன்.

''மந்திரமும் இல்லை; மாயமும் இல்லை. விஷத்தை விஷம் ஒன்றும் செய்ய முடியாதல்லவா? புத்த பிக்ஷுவின் தேகத்தில் ஓடும் இரத்தம் விஷங் கலந்த இரத்தம். எத்தனையோ காலமாக விஷ மூலிகைகளை அருந்தி உடம்பையே விஷமயமாகச் செய்து கொண்டவர் அந்த பிக்ஷு!''

''ஐயோ! என்ன பயங்கரம்!'' என்றான் சத்ருக்னன்.

''புத்த பிக்ஷுவின் தேகக் காற்றுப் பட்டதும் அக்கம் பக்கத்திலுள்ள நாகங்கள் மிரண்டு அங்குமிங்கும் ஓடும்!''

''ஆம், எஜமானே! நானும் பார்த்திருக்கிறேன். அதன் காரணம் இப்போதுதான் தெரிகிறது!'' என்று குண்டோதரன் கூறிய போது, அவனுடைய உடம்பு நடுங்கிற்று.

''கெடில நதிக்கரையில் அந்தப் பயங்கரமான சர்ப்பக் குகையைப் பார்த்தோமே, ஞாபகமிருக்கிறதா, சத்ருக்னா?''

''அதை மறக்க முடியுமா, பிரபு!''

''அதன் மர்மம் என்னவென்பதைக் கண்டுபிடித்தாயா?''

''என்ன யோசித்தும் ஊகிக்க முடியவில்லை.''

''நான் சொல்லுகிறேன். காஞ்சிக் கோட்டையை வேறு வழியில் பிடிக்க முடியாவிட்டால், கோட்டைக்குள் இருக்கும் குடிதண்ணீரிலெல்லாம் விஷத்தைக் கலந்து விடலாம் என்பதற்காகத்தான்....!''

''என்ன கொடுமை? இவ்வளவும் கருணாமூர்த்தியான புத்தபெருமானின் பெயரால், ஒரு புத்த பிக்ஷுவால் செய்யப் படுகிறதா? என்னால் நம்ப முடியவில்லையே!'' என்றான் சத்ருக்னன்.

''நம்ப முடியாத காரியந்தான். ஆனால், புத்த பிக்ஷு நிஜமான புத்த பிக்ஷு இல்லையே! காவித் துணியையும் பௌத்த சங்கங்களையும் தன்னுடைய காரியங்களுக்காக உபயோகப்படுத்திக் கொள்ளும் மிக மிகச் சாமர்த்தியசாலியான ஒற்றன் அல்லவா?''

''அப்பேர்ப்பட்ட கிராதகக் கொலை பாதகனைக் கொல்லாமல் விட வேண்டும் என்கிறீர்களா?''

''கொல்லுவதனால் பயனில்லை. சிறைப்பிடித்து வைத்தோமானால் புலிகேசியுடன் நாம் நடத்தும் யுத்தத்தில் ஒரு பெரிய ஆயுதமாகப் பிக்ஷு உபயோகப் படுவார்.

''பிரபு! பிக்ஷு யார்?'' என்று கேட்டான் சத்ருக்னன்.

''ஓர் ஊகம் இருக்கிறது. நிச்சயமாகத் தெரிந்த பிறகு சொல்கிறேன், சத்ருக்னா! நீயும் உன் சீடன் குண்டோதரனும் இது வரையில் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு எவ்வளவோ மகத்தான சேவைகளைப் புரிந்திருக்கிறீர்கள். ஆனால், அவையெல்லாவற்றையும் விடப் பரம முக்கியமான காரியம் உங்களால் இப்போது ஆக வேண்டியிருக்கிறது. நான் சொல்லுவதை இருவரும் கவனமாகக் கேட்டு, அந்தப்படி செய்தால், காரியம் ஜயமாகலாம். என்ன சொல்லுகிறீர்கள்?''

''தங்கள் சித்தம், பிரபு! கட்டளைப்படி அணுவும் பிசகின்றி நடந்து கொள்ளுகிறோம்'' என்றான் சத்ருக்னன்.

பொழுது புலரும் நேரத்தில் பன்னீர் மரத்திலே மலர்ந்து குலுங்கிய புஷ்பங்கள் 'கம்'மென்று மணம் வீசின.

ஏறக்குறைய வட்டவடிவமாயிருந்த சந்திரன் பொன்னிறத்தை இழந்து, வெண் தாமரையின் நிறத்தைப் பெற்று, மேற்குத் திசையின் அடியில் அமிழ்ந்து கொண்டிருந்தான்.

அந்த அதிகாலை நேரத்தில் கோயில் பிராகாரத்தில் மடைப்பள்ளி வாசலில் மகேந்திர சக்கரவர்த்தி அமர்ந்து, சத்ருக்னனையும் குண்டோதரனையும் அருகில் உட்காரச் சொல்லி, அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றிக் கூறினார். ஒற்றர்கள் இருவரும் மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டார்கள்.

நாற்பத்து நாலாம் அத்தியாயம்
சிங்க இலச்சினை

மறுநாள் பொழுது விடிந்து, சூரியன் வான வெளியில் இரண்டு நாழிகைப் பிரயாணம் செய்திருந்தும், மண்டபப்பட்டுக் கிராமத்து வீதிகளில் ஜன நடமாட்டமும் கலகலப்பும் இல்லை. இரண்டு நாளாக இரவில் நடந்த களியாட்டங்களில் ஈடுபட்டதனாலும், எதிர்பாராத விந்தைச் சம்பவங்களினால் உள்ளக் கிளர்ச்சியடைந்து, தூக்கமின்றி இரவு நேரங்களைக் கழித்ததனாலும், அந்தக் கிராம வாசிகள் அன்று காலை கொஞ்சம் மந்தமாகவே இருந்தார்கள். பல வீடுகளில் வாசற் கதவுகள் இன்னும் திறக்கப்படாமலே இருந்தன. திரு நாவுக்கரசர் மடத்து வாசற் கதவும் அவ்வாறு உட்புறம் தாழிடப் பட்டுத்தான் இருந்தது. ஆனால் உள்ளே பேச்சுக் குரல் கேட்டது.

குண்டோதரன், சத்ருக்னன், வஜ்ரபாஹு ஆகிய மூவரும் அந்த வேளையில் மடத்து வாசலுக்கு வந்தார்கள்.

குண்டோதரன் கதவை இடித்தான். உள்ளே கேட்டுக் கொண்டிருந்த பேச்சுக் குரலின் சப்தம் உடனே நின்றது.

மனிதர் நடமாடும் சப்தமும், கதவுகள் திறந்து மூடப்படும் சப்தமும் கேட்டன.

பிறகு, வாசற் கதவு திறந்தது.

ஆயனர் வெளியிலே வந்து, ''நீதானா, குண்டோதரா! இராத்திரியெல்லாம் எங்கே போயிருந்தாய்? உன்னை நம்பினால்...'' என்று சொல்லிக் கொண்டு வந்தவர், வஜ்ரபாஹுவையும் சத்ருக்னனையும் பார்த்துவிட்டு, ''இவர்கள் யார்?'' என்று கேட்டார்.

''நேற்றிரவு, இரண்டு பேர் வந்திருந்தார்கள் - சிற்பக் கலையில் ஊக்கம் உள்ளவர்கள் - என்று சொன்னேனே, அவர்கள் தான்; இராத்திரியெல்லாம் இவர்களைத் தேடிக் கடைசியில் பொழுது விடியும் சமயத்தில் கண்டுபிடித்தேன். தங்களைப் பார்க்க வேண்டும் என்று சொன்னபடியால் அழைத்து வந்தேன்'' என்றான் குண்டோதரன்.

''அப்படியா! உள்ளே வாருங்கள்! அம்மா, சிவகாமி! மணை எடுத்துப் போடு'' என்றார் ஆயனர்.

ஆயனருக்குப் பின்னால் நின்ற சிவகாமி, உடனே மணைகளை எடுத்துப் போட்டாள். ஆயனரும், வந்தவர்கள் இருவரும் உட்கார்ந்தார்கள். சிவகாமியை வற்புறுத்தி உட்காரச் சொல்லியும் அவள் உட்காரவில்லை. புதிதாக வந்த இருவரையும் ஆவலுடன் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''உங்களைப் பற்றிக் குண்டோதரன் சொன்னான் - சிற்பத்தில் ஆர்வம் உள்ளவர்கள் என்று. உங்கள் இருவருக்கும் எந்த ஊரோ?'' என்று ஆயனர் கேட்டார்.

''குருவே! என்னைத் தெரியவில்லையா?'' என்றான் சத்ருக்னன்.

''தெரியவில்லையே, அப்பா! நீ எப்போதாவது என்னிடம் சிற்பம் கற்றுக் கொண்டாயா, என்ன?''

''ஆம், ஐயா! சிவகாமி அம்மையை வேணுமானால் கேளுங்கள். அவருக்கு ஞாபகம் இருக்கும்.''

''ஆமாம், அப்பா! இரண்டு மூன்று நாள் இவர் உங்களுடைய சீடராயிருந்தார்!'' என்றாள் சிவகாமி.

''என் அதிர்ஷ்டம் அப்படி! நான் வந்த சில நாளைக்கெல்லாம் தாங்கள் மாமல்லபுரத்துக்குப் போனீர்கள்...'' என்றான் சத்ருக்னன்.

''பிறகு, கொஞ்ச நாளைக்கெல்லாம் எல்லா வேலையும் நின்று விட்டது. இந்தப் பாழும் யுத்தம் எதற்காக வந்ததோ, எப்போது முடியப் போகிறதோ தெரியவில்லை!'' என்று ஆயனர் கூறிப் பெருமூச்சு விட்டார்.

''இன்னும் கொஞ்சம் பொறுமையாயிருங்கள், ஆயனரே! யுத்தம் சீக்கிரத்தில் முடிந்து விடும். தாங்கள் பழையபடி தங்கள் அரண்ய வீட்டுக்குப் போகலாம்'' என்றார் வஜ்ரபாஹு.

அந்தக் குரலைக் கேட்டதும் ஆயனர் சிறிது திடுக்கிட்டவராய், வஜ்ரபாஹுவை உற்று நோக்கி, ''ஐயா! தாங்கள் யாரோ?'' என்றார்.

''என்னை நிஜமாகவே தெரியவில்லையா, ஆயனரே!''

''பார்த்த ஞாபகமாய் இருக்கிறது.''

அப்போது சிவகாமி தந்தையின் அருகில் வந்து அவருடைய காதோடு, ''சக்கரவர்த்தி, அப்பா, தெரியவில்லையா?'' என்றாள்.

ஆயனர் அளவிட முடியாத வியப்புடன் ஒருகணம் வஜ்ரபாஹுவின் முகத்தை உற்று நோக்கினார். பின்னர், அவசரமாகப் பீடத்தை விட்டு எழுந்து, ''பிரபு! இது என்ன வேஷம்? அடையாளமே தெரியவில்லையே?'' என்றார்.

''வேஷம் போடும் கலையில் என்னுடைய சாமர்த்தியம் இப்போதுதான் எனக்குத் திருப்தி அளித்தது. போர்க்களத்தில் புலிகேசியின் முன்னால் நின்று தூது சொல்லிவிட்டுத் திரும்பிய போது கூட இவ்வளவு திருப்தி எனக்கு உண்டாகவில்லை!'' என்றார் மகேந்திரர்.

ஆயனர், ''பல்லவேந்திரா! குண்டோதரன் நேற்றிரவே என்னிடம் சொன்னான்: யாரோ இருவர் வந்திருக்கிறார்கள்; அவர்கள் இந்தக் கிராமத்துப் பாறைகளைப் பார்த்துவிட்டுக் கோயில் அமைப்பது பற்றிப் பேசினார்கள் என்று. உடனே தங்களுடைய ஞாபகம் எனக்கு வந்தது. அப்படிப்பட்ட சிற்ப மனோகற்பனை உள்ளவர்கள் நம் சக்கரவர்த்தியைத் தவிர யார் உண்டு என்று எண்ணினேன். கடைசியில் தாங்களாகவே இருக்கிறீர்கள்! பிரபு! இந்த ஏழைச் சிற்பியைப் பார்ப்பதற்கா இவ்வளவு தூரம் தேடி வந்தீர்கள்? தங்களைப் பார்த்து எத்தனை காலம் ஆகி விட்டது? ஒரு யுகம் மாதிரி இருக்கிறது'' என்றார் ஆயனர்.



''ஆயனரே! உங்களிடம் பொய் வேஷத்துடனே வந்தேன். அதோடு பொய் சொல்லவும் விரும்பவில்லை. நான் இங்கே வந்தது உங்களைப் பார்ப்பதற்காக அல்ல. என் மகன் மாமல்லனைத் தேடிக் கொண்டு வந்தேன்'' என்றார் சக்கரவர்த்தி.

சிவகாமி நாணத்தினால் தலைகுனிந்து கொண்டாள்.

ஆயனர் சிறிது தடுமாறி விட்டு, ''பல்லவ வேந்திரா! மாமல்லர் நேற்று இரவே புறப்பட்டுச் சென்று விட்டாரே! குண்டோதரன் சொல்லவில்லையா?'' என்று கேட்டார்.



''மாமல்லனும் பரஞ்சோதியும் இத்தனை நேரம் காஞ்சிப் பாதையில் போய்க் கொண்டிருப்பார்கள். வந்த இடத்தில் உங்களையும் பார்த்து விட்டு, மாமல்லனைக் காப்பாற்றியதற்காக நன்றி சொல்லி விட்டுப் போகலாமென்று வந்தேன்'' என்றார் சக்கரவர்த்தி.

''பிரபு! மாமல்லரை நாங்கள் காப்பாற்றவில்லையே? வெள்ளத்தில் முழுகிப் போக இருந்த எங்களையல்லவா குமார ,சக்கரவர்த்தி தக்க சமயத்தில் வந்து காப்பாற்றினார்!''

''ஆம், ஆயனரே! அதுவும் எனக்குத் தெரியும். ஆனால், மாமல்லனுடைய உயிரை நீங்கள் காப்பாற்றியதும் உண்மைதான்; 'நீங்கள்' என்றால், முக்கியமாக உங்கள் குமாரியைச் சொல்லுகிறேன்.

இதோ பார்த்தீர்களா, இந்தக் கத்தியை!'' என்று சக்கரவர்த்தி கூறி, நாகப் பிடி அமைந்த கத்தியை எடுத்துக் காட்டினார்.

ஆயனர், சிவகாமி இருவரும் அந்தக் கத்தியை இன்னதென்று விளங்காத பயங்கரத்துடன் பார்த்தார்கள்.

''இந்த விஷக் கத்தி மாமல்லன் மேல் பாய்வதற்கு இருந்தது. அப்போது சிவகாமி பக்கத்தில் இருந்தபடியால் மாமல்லன் அந்த அபாயத்திலிருந்து தப்பினான்!''

சிவகாமி நடுங்கினாள். அவளுடைய இருதய பீடத்தில் வீற்றிருக்கும் தெய்வத்தின்பேரில் விஷக் கத்தி பாய்வதற்கு இருந்தது என்று எண்ணிய போது, அவளுடைய நெஞ்சில் அந்தக் கத்தி பாய்ந்து விட்டது போன்ற வேதனை உண்டாயிற்று. அவ்விதம் நேராமல் தன்னால் மாமல்லரைக் காப்பாற்ற முடிந்தது என்ற எண்ணம், சொல்ல முடியாத உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கிற்று. ஆனால், தான் காப்பாற்றியது எப்படி என்பது தெரியாதபடியால் திகைப்பும் ஏற்பட்டது.

''பிரபு! என்ன சொல்கிறீர்கள்? குமார சக்கரவர்த்தியின் மேல் விஷக்கத்தி ஏன் பாய வேண்டும்? அவ்விதம் செய்ய எண்ணிய பாதகன் யார்? அதை எவ்விதம் சிவகாமி தடுத்தாள்? எல்லாம் ஒரே மர்மமாயிருக்கிறதே? சிவகாமி! உனக்கு ஏதேனும் தெரியுமா?'' என்று ஆயனர் கேட்டார்.

''சிவகாமியைக் கேட்பதில் பயனில்லை. அவளுக்கு ஒன்றும் தெரியாது. சமயம் நேரும் போது நானே எல்லாம் சொல்கிறேன். இப்போதைக்கு அபாயம் நீங்கி விட்டது. மாமல்லன் காஞ்சிப் பாதையில் வெகுதூரம் இதற்குள் போயிருப்பான். நானும் போக வேண்டியதுதான். ஆயனரே! இந்த மண்டபப்பட்டுக் கிராமம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதல்லவா; யுத்தம் முடியும் வரையில் இங்கேயே நீங்கள் தங்கியிருக்கலாமல்லவா?''

''ஆம், பிரபு! அப்படித்தான் உத்தேசம். இந்தக் கிராமவாசிகள் மிகவும் நல்லவர்கள். கலை அபிமானம் உள்ளவர்கள். பாறைக் கோவில்கள் அமைக்க உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.''

''நானும் அதற்கு ஏற்பாடு செய்கிறேன். உங்களுக்கு வேண்டிய திரவியமும், ஆட்களும், கருவிகளும் கொடுத்து உதவும்படி திருக்கோவலூர்க் கோட்டத்து அதிகாரிகளுக்குக் கட்டளை அனுப்புகிறேன்.''

''பல்லவேந்திரா! தாங்கள் ஒரு நாளாவது இங்கே தங்கலாமா? இன்று சாயங்காலம் பாறைகளைப் போய்ப் பார்த்து, எப்படி எப்படிக் கோவில் அமைக்கலாம் என்று தீர்மானிக்கலாமே?''

மகேந்திர சக்கரவர்த்தி சிரித்து விட்டு, ''ஆயனரே! காஞ்சிக்கு மூன்று காத தூரத்தில் வாதாபிப் படைகள் வந்து கொண்டிருக்கின்றனவாம். அந்தப் படைகள் காஞ்சிக்கு வருவதற்குள் நான் போயாக வேண்டும்'' என்றார்.

''அப்படியா! இங்கிருந்து காஞ்சி ஏழு காத தூரம் இருக்குமே? எப்படிப் போவீர்கள்?'' என்று ஆயனர் கவலையுடன் கேட்டார்.

''அதைப் பற்றிக் கவலையில்லை. நதியின் அக்கரையில் கண்ணபிரான் ரதத்துடன் காத்திருக்கிறான்.''

அப்போது சிவகாமி ஆயனரைப் பார்த்து, ''கமலி சௌக்கியமாயிருக்கிறாளா என்று கேளுங்கள் அப்பா!'' என்றாள்.

''கமலி சௌக்கியம், அம்மா! கண்ணபிரான் உன்னைப் பார்த்துக் கமலியைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று எவ்வளவோ ஆவலுடன் இருந்தான். நான்தான் வரக் கூடாதென்று தடுத்து விட்டேன்.''

சிவகாமி மறுபடியும் ஆயனரைப் பார்த்து, ''அப்பா! கமலிக்குக் குழந்தை பிறந்ததும் சொல்லி அனுப்பச் சொல்லுங்கள்!'' என்றாள். எக் காரணத்தினாலோ, மகேந்திர பல்லவரை ஏறிட்டுப் பார்க்கவே அவளுக்குச் சங்கோசமாயிருந்தது.

''ஆகட்டும், சிவகாமி! அப்படியே சொல்லியனுப்பச் சொல்லுகிறேன். ஆயனரே! நான் புறப்படட்டுமா? போகும் வழியில் வேணுமானால் சற்றுப் பாறைகளைப் பார்த்து விட்டுப் போகலாம். நீரும் வருகிறீரா?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

''ஆகட்டும் பிரபு! அதைவிட எனக்கு என்ன வேலை?'' என்று ஆயனர் எழுந்தார்.

''இன்னும் ஒரு விஷயம் மறந்து விட்டேன்'' என்று கூறி, மகேந்திர பல்லவர் தமது அங்கிப் பையிலிருந்து அறுகோண வடிவமான பதக்கம் ஒன்றை வெளியில் எடுத்தார்.

அதைக் காட்டி, ''ஆயனரே! இது என்ன தெரிகிறதா?'' என்று சக்கரவர்த்தி கேட்கவும், ''தெரிகிறது, பிரபு! சிங்க இலச்சினை'' என்றார் ஆயனர்.

''ஆமாம், ஆயனரே! இந்த இலச்சினை பல்லவ இராஜ்யத்தில் மொத்தம் பதினொரு பேரிடந்தான் இருக்கிறது. பன்னிரண்டாவது இலச்சினையை உம்மிடம் கொடுக்கிறேன். இதைக் காட்டினால், இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் எந்த மூலை முடுக்கிலுள்ள அதிகாரியும் நீர் விரும்பியதைச் செய்வார். எந்தக்

கோட்டைக் கதவும் உடனே திறக்கும். இதை வைத்துக் கொண்டு என்னையும் மாமல்லனையும் எந்த நேரத்திலும் பார்க்கலாம். இந்த யுத்த காலத்தில் உம்மிடம் இது இருக்கட்டும் என்று கொடுக்கிறேன். சர்வ ஜாக்கிரதையாய் வைத்துக் கொள்ள வேண்டும், ஏதாவது மிகவும் முக்கியமான காரணம் ஏற்பட்டாலன்றி இதை உபயோகிக்கக் கூடாது'' என்று கூறிச் சக்கரவர்த்தி இலச்சினையை நீட்டினார்.

''பிரபு! இந்த ஏழைச் சிற்பிக்கு எதற்காக இந்தச் சிங்க இலச்சினை?'' என்று ஆயனர் அதை வாங்கிக் கொள்ளத் தயங்கினார்.

''ஆயனரே! இந்தப் பெரிய இராஜ்யத்தில் உம்மையும் உம்முடைய குமாரியையும் காட்டிலும் எந்தச் செல்வத்தையும் நான் பெரிதாய்க் கருதவில்லை. ஏதாவது ஒரு சமயத்திற்கு வேண்டியதாயிருக்கலாம். ஆகையால், வாங்கிப் பத்திரமாய் வைத்துக் கொள்ளும்'' என்று மகேந்திர பல்லவர் கையை நீட்டிக் கொடுக்க, அதற்கு மேல் ஆயனரால் அதை மறுக்க முடியவில்லை. பயபக்தியுடன் வாங்கிக் கொண்டு, ''அம்மா சிவகாமி! இதை உன் பெட்டியில் பத்திரமாய் வைத்து விட்டு வா!'' என்று சொல்லிக் கொடுத்தார்.

சிவகாமி அந்தச் சிங்க இலச்சினையை வாங்கிக் கொண்டு, அடுத்த அறைக்குள் அதைப் பத்திரப்படுத்தப் போனாள். அங்கே அந்தக் கிராமத்துப் பெரிய வீட்டுப் பெண்மணிகள் அவளுடைய ஆடை ஆபரணங்களை வைத்துக் கொள்வதற்காக அளித்திருந்த அழகிய வேலைப்பாடமைந்த பெட்டி இருந்தது. பெட்டியைத் திறந்து, அதற்குள்ளே சிங்க இலச்சினையைச் சிவகாமி பத்திரப்படுத்தினாள்.

அவ்விதம் அவள் பெட்டியைத் திறந்து, சிங்க இலச்சினையை வைத்ததை, அதே அறையில் தூணுக்குப் பின்னால் மறைந்திருந்த நாகநந்தி பிக்ஷு கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்!

(தொடரும்)

அருள்வாக்கு



நாமாக ஒருத்தனுக்குத் தானம் பண்ணாமல் இருக்கலாம். எவனோ கடன் கேட்டால் கொடுக்க மாட்டேன் என்று சொல்லலாம். ''கொடுத்தா வைத்திருக்கிறீர்? என் பணம். கொடுப்பதும் கொடுக்காததும் என் இஷ்டம்'' என்று சொல்லலாம். ஆனால், நாம் கடன்பட்டிருக்கும் போது, கடன் கொடுத்தவன் திருப்பிக் கேட்டால் இப்படிச் சொல்ல முடியுமா? முடிகிறதோ இல்லையோ எப்பாடு பட்டாவது, அவனுக்குக் கொடுத் துத் தீர்க்கத்தானே வேண்டும்? இப்படித் தான் நாம் கடன்பட்டிருப்பவர்களுக்காக வேதம் பஞ்ச மஹா யஜ்ஞங்களை விதித்திருக்கிறது. கடன் என்றால் திருப்பித்தானே ஆக வேண்டும்? ஆகவே, இதைச் செய்ய மாட்டேன் என்று சொல்ல, நமக்கு 'ரைட்'டே கிடையாது. நம் போன்ற மனுஷ்யர்களுக்கும் பசு, பக்ஷிகளுக்கும் உபகாரம் என்ற ரூபத்தில் யஜ்ஞம் செய்து, அவற்றைத் திருப்திப்படுத்த வேண்டியது நம் கடமை. 'கடன்' என்பதிலிருந்தே கடமை என்பது வந்திருக்கிறது. ஈச்வரன் இந்தப் பிரபஞ்சத்திலே ஒரு ஜீவனைப் பிறப்பித்து, அந்தப் பிரபஞ்சத்தால் அவன் பலவிதமான ஸௌக்கியங்களை அடைய வேண்டுமென்று வைத்திருக்கிறபோதே, அதைச் சேர்ந்த எல்லா வகை ஜீவ இனங்களுக்கும் - பூச்சி பொட்டிலிருந்து ஆரம்பித்து, தேவ, ரிஷிகள் வரைக்கும் - தன்னாலான தொண்டை அவன் செய்ய வேண்டும் என்று வேதத்தின் மூலம் ஆர்டர் போட்டிருக்கிறான். ஆதலால், இதைக் கடனாக, கடமையாகச் செய்தேயாக வேண்டும். ''கடனே'' என்று செய்யாமல், அன்பைக் கலந்து, உபகாரத்துக்குப் பாத்திரமாகிற எல்லாரையும் அந்த ஈச்வர ஸ்வரூபமாகவே பாவித்து அடக்கத்தோடு பணி செய்ய வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்.

அம்மாவுக்குப் பாட்டுக் கற்றுக் கொள்ள வேண்டும்

''என்னடா ராஜாமணி, இன்றைக் காலும் நீ ஒரு பாகவதரைப் பார்த்து டியூஷனுக்கு ஏற்பாடு பண்ணுகிறாயா இல்லையா?'' என்று அம்மா கௌசல்யா கேட்டாள்.

'தியாகராஜ சுவாமிகளும், முத்துசாமி தீட்சிதரும், சியாமா சாஸ்திரியும் எதற்கு இப்படி நூற்றுக்கணக்கான பாட்டுக்கள் பாடி வைத்து விட்டுப் போனார்கள்! 'நிதி சால சுகமா' என்றும், 'சுப்பிரமண்யாய நமஸ்தே' என்றும், 'சரோஜ தள நேத்ரி' என்றும் இவர்களை யார், சும்மா இராமல் பாடிக் கொண்டே இருக்கச் சொன்னார்கள்?'

''என்னடா பதிலையே காணோம்?'' என்றாள் கௌசல்யா.

''எதுக்கம்மா உனக்கு இந்த வயசில் போய்ப் பாட்டுக் கத்துக்கணும்னு ஒரு விபரீத ஆசை? இனிமே நீ பாட்டுக் கத்துக் கொண்டு என்ன ஆகணும்?'' என்று எத்தனையோ சொல்லிப் பார்த்தான் ராஜாமணி.

அம்மா கேட்கிற வழியாய் இல்லை. பெயர்தான் கௌசல்யாவே தவிர, அம்மா சரியான கைகேயி. பிடிவாதம் என்றால் அப்படி ஒரு பிடிவாதம்.

''நானும் தியாகராஜ சங்கீத வித்வத் சமாஜத்தில் சொல்லி விட்டுத்தான் வந்திருக்கிறேன், யாரேனும் நல்ல பாகவதர் இருந்தால் அனுப்பச் சொல்லி. வர வேண்டாமா? கொஞ்சம்தான் பொறுமையாய் இரேன்!'' என்றவன் மீண்டும், ''அம்மா, கொஞ்சம் தயவு செய்து யோசித்துப் பார். இந்த அறுபத்திரண்டு வயசுல நீ பாட்டுக் கத்துக் கொண்டு என்ன ஆகணும்?'' என்றான் குழைவாக.

மனைவி ருக்மிணி பஜன் கிளாசுக்குப் போகிறேன் என்று போய் விட்டு வந்து, அபிராமி அந்தாதியும், லலிதா சகஸ்ர நாமமும், திருப்புகழும் வீடு பூரா முழங்க ஆரம்பித்தபோதே கோபம் கோபமாய் வந்தது ராஜாமணிக்கு.

''இது என்ன வீடா, கோயிலா? ஸ்லோகம் சொல்லு. பஜன்ஸ் பாடு. வேண்டாம் என்று சொல்லவில்லை. சாயந்தர வேளையில் விளக்கேற்றி வைக்கிற போது மட்டும் பாடினால் போதாதா? பொழுது விடிந்தால் சௌந்தர்ய லகரி. காய்கறி நறுக்குகிற போது கபீர்தாஸ் பஜன். சமையல் பண்ண ஆரம்பித்தால் அபிராமி அந்தாதி!'' என்று சண்டைக்குப் போயிருக்கிறான்.

''படிக்கிறது எல்லாம் மறக்காம இருக்கணும் என்றால் பாடிக் கொண்டே இருந்தால்தானே முடியும்?'' என்று எதிர்த்துக் குரல் எழுப்பியிருக்கிறாள் ருக்மிணி.

''நீ பஜனை கிளாசுக்குப் போகிறே என்று, இப்போ உன் மாமியாரும் பாட்டுக் கற்றுக் கொள்ள வேணும் என்று அடம் பிடிக்கிறாள் பார்!'' என்று கோபமாகக் கத்தினான் ராஜாமணி.

''அதற்கு நான் என்ன செய்யட்டும்? மருமகள் செய்கிறதை எல்லாம், மாமியார், தானும் செய்யணும் என்று பிடிவாதம் பிடித்தால் எப்படி?'' என்று சொல்லிப் பார்த்தாள் ருக்மிணி. ''அறுபது வயசுக்கு அப்புறம் ஸா-பா என்று ஆரம்பித்தால் சரிப்பட்டு வருமா?''

''எல்லாம் உன்னால் வந்த வினை!'' என்றான் ராஜாமணி. ''பஜன் க்ளாஸ்தான் தொலையட்டும் என்றால், பம்பாய்க்குப் போன போது அந்த கேல்கர் வீட்டுக்கு ஏன் கூட்டிக் கொண்டு போனாய் அம்மாவை?''

''நானாக ஒன்றும் கூட்டிக் கொண்டு போகவில்லை, உங்கள் அம்மாவை. தாதர் பக்கம் எல்லாம் பார்த்து ரொம்ப நாளாயிற்று, நானும் வருகிறேன் என்றாள். எனக்குத் தெரியுமா, உங்கள் நண்பர் கேல்கருக்கு எழுபத்தைந்து வயதில் அம்மா இருப்பதும், அவள் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டு, நாங்கள் போன வேளையில் இந்துஸ்தானி சங்கீதம் கற்றுக் கொள்ளுவாள் என்பதும்!''

பம்பாயிலிருந்து திரும்பி வந்தது

முதல் அம்மா கௌசல்யா, ''பார்த்தாயா? வயசு எழுபத்தைந்து ஆகி விட்டதாம் அந்த கேல்கர் அம்மாவுக்கு. வியாதிக்காரி மாதிரி படுக்கையில் படுத்திருந்தவள், பாட்டு வாத்தியார் வந்ததும் என்னமாய் ஆவேசம் வந்த மாதிரி எழுந்து உட்கார்ந்து கொண்டு, அவர் கூடவே பாட்டுப் பாட ஆரம்பித்து விட்டாள்!'' என்றாள்.

''இந்துஸ்தானி சங்கீதத்தில் யார் வேண்டுமானாலும் பாடலாம் அம்மா. இருபது வயசுக்காரர் பாடினாலும், எழுபது வயசுக்காரர் பாடினாலும் கேட்க ஒரே

சாருகேசி



மாதிரிதான் இருக்கும்!'' என்று ராஜாமணி சொல்லிப் பார்த்தான். கௌசல்யா கேட்டால்தானே?

சரி, கொஞ்ச நாளைக்கு மாமியாரும் மத்தியான வேளையில் பஜனை வகுப்புக்குப் போகட்டும் என்று ருக்மிணி தன்னுடன் கூட்டிக் கொண்டு போனாள்.

போன இடத்தில் பாட்டைப் பார்த்துக் கொண்டு (அல்லது கேட்டுக் கொண்டு) உட்கார்ந்திருப்பதுதானே? அ து த ா ன் இல்லை. தானும் பாடுகிறேன் பேர்வழி என்று, தொண்டை கட்டிப் போய்க் கம்மிக் கொண்டிருக்கிற குரலில் அவர்களுடன் சேர்ந்து அன்னபூர்ணா ஸ்தோத்திரம் பாடியதில் எல்லாருக்குமே ருக்மிணியிடம் கோபம்.

கிளாஸ் முடிந்து போகிற போது, ''இதோ பார் ருக்கு. சொல்கிறேன் என்று தப்பாய் நினைத்துக் கொள்ளாதே. நாளையிலிருந்து உன் மாமியாரையும் பஜன் கிளாசுக்குக் கூட்டிக் கொண்டு' வராதே. பாடணும்னா வீட்டிலேயே தனியா பிராக்டிஸ் பண்ணச் சொல்லு!'' என்று வெளிப்படையாகக் கோரஸ் பாடினார்கள்.

ருக்மிணிக்குத் தர்மசங்கடமாகப் போய் விட்டது. ஒருபுறம் பஜன் கிளாஸ் தோழிகள். இன்னொரு புறம் மாமியார். மாமியாரைப் பகைத்துக் கொண்டு என்ன பஜன் பாடி விட முடியும்?

இரவு, ராஜாமணியிடம் நடந்ததைச் சொன்ன போது, ஆத்திரம் ஆத்திரமாக வந்தது அவனுக்கு.

''அம்மாவுக்குத்தான் ஜ ல தோ ஷ ம் பிடித்து, குரல் ஒரே கரகரப்பாய் இருக்கிறதே. நீ ஏன் உங்கள் கூடப் பாடச் சொல்ல வேண்டும்? நீ சமாளித்திருக்க வேண்டியதுதானே?'' என்றான்.

''நான் என்ன கண்டேன், அம்மாவுக்குக் குரல் இத்தனை மோசமாயிருக்கும் என்று? சில பேர், குரல் நன்றாயில்லை என்றால் தொடையில் நன்றாக ஓங்கி ஓங்கித் தாளம் போட்டு, அந்தத் தாளச் சப்தம் குரலை அமுக்கி விடுகிற மாதிரி சாமர்த்தியமாகச் சமாளித்து விடுவார்கள். அம்மாவுக்கு அதுவும் தெரியவில்லை!'' என்றாள் ருக்மிணி.

''ஆமாம். தொண்டை அடைத்துப் போனது போதாது என்று தொடையையும் அடித்து அடித்துக் கிழித்துக் கொள்ள வேண்டும் என்கிறாயாக்கும்? என்ன கரிசனம் மாமியார் மீது!'' என்றான் ராஜாமணி.

''சரி இப்போ என்னதான் வழி?''

''அம்மா கேட்கிற மாதிரி வீட்டிலேயே ஏதாவும் பாட்டு வாத்தியார் பார்த்து வைத்து விட வேண்டியதுதான். தாளம் வேதாளமாயிருந்தாலும் சரி. பைரவி பாதாளபைரவியாய்ப் பாடினாலும் சரி.''

''மாதம் நூறு ரூபாய்க்குக் குறைந்து யாரும் இப்போது வருவதில்லையாமே? நானும் எல்லா இடத்திலும் விசாரித்து விட்டேன். சிவசாமி பாகவதர்னு ஒருத்தர் வரேன் என்று சொன்னார். மொபெட் வைத்திருக்கிறாராம். பகலில்தான் வர முடியும் என்றார்.''

''சரியென்று சொல்லி விடுங்கள்!'' என்று சொன்ன ருக்மிணிக்கு, ஒன்று மட்டும் ஏனோ உறைக்கவில்லை.

பக்கத்தில், ஃப்ளாட்டில் இருப்பவர்கள் எல்லாம் சண்டைக்கு வராமல் இருக்க வேண்டுமே? 'பகல் நேரத்தில் நாங்கள் கண்ணயர்ந்திருக்கிற சமயம் வாள் வாளென்று வாத்தியாரும் சீடப் பெண்மணியும் கத்தினால் எப்படி' என்று, பிலு பிலு என்று பிடித்துக் கொள்ளாமல் இருக்க வேண்டுமே?

சிவசாமி பாகவதரைச் சுமந்து கொண்டு வந்த மொபெட்டுக்கு வாயிருந்தால், முகாரியில் ஒரு பாட்டம் அழுதிருக்கும். சுமார் எண்பது கிலோ எடையுள்ள தன் எஜமானரை எப்படி முக்கி முனகிக் கொண்டு சுமந்து வருகிறதோ என்று பரிதாபமாக இருந்தது ருக்மிணிக்கு.

''நீங்கள் ஜண்டை - சரளிவரிசை என்று ஆரம்பித்துச் சொல்லிக் கொள்ள வேண்டும் என்று இல்லை. 'நின்னுக்கோரி' வர்ணம் எல்லாம் கூட வேண்டாம்...'' என்றார் சிவசாமி பாகவதர்.

''நின்னுக்கோரியை நான் அக்னி நட்சத்திரம் படத்தில் கேட்டுக் கேட்டே கற்றுக் கொண்டு விட்டேன்!'' என்று மாமியார் சொன்ன போது, தலையில் அடித்துக் கொள்ளலாம் போல் இ ரு ந் த து ருக்மிணிக்கு.

மூன்று மணிக்கு பாகவதர் வருகிற சமயம், அவருக்கு நல்ல காப்பியாகப் போட்டு வைத்திருந்து கொடுக்க வேண்டும். கும்பகோணம் வெற்றிலையும், சீவலும் வாங்கி வைத்திருக்க வேண்டும்...

இரண்டு, மூன்று நாட்களுக்குப் பக்கத்துக் குடித்தனங்களிலிருந்து ஆட்சேபம் எதுவும் வரவில்லை.

மூன்றாம் நாள் கீழ் ஃப்ளாட்டிலிருந்து குப்புசாமி எட்டிப் பார்த்து விட்டுப் போனார். ரிட்டயர்டு ரயில்வே ஆசாமி.

> படிப்பில்லாச் சிந்தனை வீண்.
> சிந்தனையில்லாப் படிப்பு ஆபத்தானது.
> - சீன அறிஞர்.
> தகவல் : சுகாராஜ்

''அதோ போறாரே.. அவர் விரல் விட்டு எண்ணக்கூடிய கணித மேதைகளில் ஒருவர்!''

''கணித மேதைங்களே. விரல் விட்டுத் தான் எண்ணுவாரா?''

—ரா. ஞானமுத்து.



பாகவதரின் உருவத்தைப் பார்த்து, இவரிடம் ஏன் வம்பு என்று போய் விட்டார் போலும்!

அப்புறம் இடது பக்கத்து ஃப்ளாட் ராமச்சந்திரனின் மனைவி வந்து, ''கொஞ்சம் மெதுவாகத் தாளம் போடச் சொல்லுங்களேன். கொஞ்சம் கூடத் தலையைச் சாய்க்க முடியலே!'' என்று சொல்லிவிட்டுப் போனாள்.

சிவசாமி சொல்லிக் கொடுத்த 'எந் நேரமும் உன் சந்நிதியில் இருக்க' பாட்டை கௌசல்யா இன்னும் உரக்கப் பாடிய போது, வலது பக்கத்து ஃப்ளாட் கோகிலா வந்து நின்று கொண்டிருந்தாள். ஆகா, மாமியாரின் பாட்டை ரசித்துக் கேட்கிறாள் போலிருக்கிறது என்று ருக்மிணி சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்த போது, பாகவதர் வெளியேறின மறுவிநாடியே, ''இப்படிக் காள் காள்னு கத்தினா பக்கத்திலே இருக்கிறவர்களுக்கு என்ன நிம்மதி? படிக்கவே முடியலே. மூணு வாரத் தொடர்கதை பாக்கி...'' என்றாள்.

மாலையில் அபார்ட்மெண்ட் செக்ரடரி வந்து, 'ராஜாமணி வந்தாயிற்றா?' என்று பத்துத் தடவை கேட்டு விட்டுப் போன போதே ருக்மிணிக்கு ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று வயிற்றைக் கலக்கியது.

பிறகு ஒலியும் ஒளியும் பார்த்துக் கொண்டிருக்கிற போது செக்ரடரி சக்ரபாணி, மற்ற குடித்தனக்காரர்களுக்குப் பிற்பகல் நேரத்தில் தொல்லை தராமல் இருக்க வேண்டும் என்று நாசுக்காகத் தெரிவித்தார்.

வீட்டில் குழந்தை இருந்தாலாவது அழும். என்ன சப்தம் என்று கேட்டால் குழந்தை அழுகிறது என்று சொல்லலாம். அம்மா பாட்டுக்கும், அழுகைக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது என்று ராஜாமணிக்குத் தோன்றிற்று.

ருக்மிணி பஜன் வகுப்புக்குப் போயிருந்த முற்பகல் நேரம்.

எல்லா ஃப்ளாட்டுகளிலும் ஸ்கூல், ஆபீஸ் களேபரம் ஓய்ந்து, அவரவர் ஓய்வு எடுத்துக் கொள்ளும் சமயம்.

சிவசாமி பாகவதர் வரவும், அம்மா கட்டிலிலிருந்து மெல்ல எழுந்து, தரையில் பாயை விரித்து, சுருதிப் பெட்டியுடன் உட்கார்ந்து கொண்டாள்.

''அம்மா... பிடியுங்களேன்!'' என்று இடதுபக்க ஃப்ளாட்டிலிருந்து ஓர் ஓலம் கேட்டது.

தூக்கிவாரிப் போட்டது கௌசல்யாவுக்கு. பாகவதர், ''என்ன அபசுரமாய் இருக்கிறது!'' என்று காதைப் பொத்திக் கொண்டார்.

அதற்குள், ''திருடன்... திருடன்... பிடியுங்கள்!'' என்று ஒரே கூச்சல்.

குப்புசாமி மூச்சிரைக்க ஓட, கோகிலா ஆஸ்த்துமா மூச்சு விட்டுத் துரத்த, முரடன் ஒருவன், கையில் ஒரு மூட்டையுடன் ஒருவர் பிடியிலும் அகப்படாமல் பாய்ந்து செல்ல, தமது கனத்த சரீரத்தைத் தூக்க மாட்டாமல் தூக்கிக் கொண்டு வெளியே வந்த சிவசாமி பாகவதர் மீது ஒரே மோதலாய் மோதிக் கீழே விழுந்தான்.

பாகவதர் சிவசாமிக்கு எத்தனையோ தடவை சுருதி பிடிபட்டதில்லை. தாளம் பிடிபட்டதில்லை. ராகம் கூட ஒன்றைப் பாடினால் இன்னொன்றின் சாயலடித்து விட்டுப் பிடிபடாமல் போய் விடும்.

அன்றைக்கு அவர் பிடித்த பிடியில் திருடன் அமுங்கிப் போய் விட்டான்.

பக்கத்து வீட்டுக் குடித்தனக்காரர்கள் சொன்ன நன்றி எல்லாம் கௌசல்யாவுக்குத்தான். அதுவும் பகல் நேரத்தில் அவள் சங்கீதம் கற்றுக் கொள்ளவில்லை என்றால் இப்படி ஒரு பெரிய திருடனைப் பிடித்திருக்க முடியுமா? அதிலும் சாரீரம் மட்டுமல்லாது சரீரமும் கனமாயிருந்த அவள் குரு சிவசாமி பாகவதர் மட்டும் அப்போது அங்கே இருந்திருக்கவில்லை என்றால், எத்தனை நகை, எத்தனை ரூபாய் போயிருந்திருக்கும்? - மாலையில் ருக்மிணியிடம் எல்லாரும் இதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ராஜாமணிக்குக் கவலை பெரிதாகப் பிடித்துக் கொண்டது. இப்போது, இந்த லட்சணத்தில் பாட்டுக் கற்றுக் கொண்டு விட்டு, நாளைக்குச் சபா கச்சேரிகள் எல்லாம் ஏற்பாடு பண்ணுடா என்று அம்மா கௌசல்யா பிடித்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது என்பதுதான் ராஜாமணியின் புதிய கவலை.

சம்சார சாகரம்

புதிதாகத் திருமணம் செய்து கொண்ட அவருக்கு, மனைவி மீது கொள்ளை ஆசை. அரசாங்க உத்தியோகம். அடிக்கடி வீட்டுக்கு வர முடியாத நெருக்கடியான பணி. ஓரிரு தினங்கள் சென்றன. அபராத பின் விளைவுகளை மறந்து, அன்றிரவு மனைவியை நினைத்து வீட்டிற்கு ஓடி வந்தார்.

வீட்டிலே மனைவி இல்லை. அவள் பிறந்த வீட்டுக்குப் போயிருந்தாள். ஆசை அவரைத் துரத்தியது. மழையும் மின்னல்களும் பூமிக்கும் ஆகாசத்துக்குமாக ஒரு வைர நெசவு நடத்திக் கொண்டிருந்தன. போதாக்குறைக்கு ஆற்றைக் கடக்க வேண்டும். படகோ பரிசலோ இல்லை என்றாலும் கையில் கிடைத்த ஒன்றைப் பற்றிக் கொண்டு, மறு கரைக்குப் பாய்ந்தார். இருட்டில் தடுமாறி நடந்து, மனைவியின் வீட்டுக் கதவை வேக வேகமாகத் தட்டினார். தூக்கக் கலக்கமோ, இடியின் சப்தம்தான் காரணமோ, தெரியவில்லை. கதவை யாரும் திறக்கவில்லை. பக்கத்தில் இருந்த ஆலமரத்தை நோக்கிப் பாய்ந்தார். தொங்கிய விழுதைப் பற்றிப் பரபர என்று மேலே ஏறிப் போய், கிளை வழியே மொட்டை மாடியில் இறங்கி, மாடி அறையின் கதவுகளை அறைந்தார்.

கதவு திறந்த மனைவி விக்கித்துப் போனாள். ''என்ன..? ஏன்? எப்படி....? வந்தீர்கள்..? இப்படி நனைந்து போய்... நள்ளிரவில்... அப்படி என்ன அவசரம்?''

''உன் மீது அவ்வளவு பிரியம்! பார்க்க வேண்டும் என்று தோன்றியது.. தாமதிக்க மனம் இல்லை! ஓடி வந்தேன். ஆற்றில் வெள்ளம். படகும் இல்லை. அகப்பட்டதைப் பிடித்து மிதந்து வந்தேன்.''

மின்னல் வெட்டியது. ஆற்று வெள்ளத்தில் பிணம் மிதப்பது புலப்பட்டது!

''மேலே எப்படி ஏறி வந்தீர்கள்?''

''பக்கத்தில் உள்ள ஆலமரத்தின் விழுதைப் பிடித்து மேலே ஏறினேன்.''

''ஆலமரமா? நம் வீட்டுப் பக்கத்திலா? இல்லையே!'' மனைவி திகைத்துப் பேசினாள்.

மீண்டும் மின்னல் வெளிச்சம் காட்டியது. பக்கத்தில் இருந்த மரத்தின் கிளையிலிருந்து மலைப் பாம்பு ஊஞ்சல் ஆடியது! மனைவியின் உள்ளமே ஆடியது. எத்தனை ஆபத்துக்களைக் கடந்து இவர் ஓடி வந்திருக்கிறார்! ஏதும் நடக்கக் கூடாதது நடந்திருந்தால்...

''ஏன் இப்படி ஆபத்துக்களைப் பாராமல் வந்தீர்கள்? அழிந்து போகிற இந்தச் சரீரத்தின் மீது உங்களுக்கு இவ்வளவு ஆசையா? இந்த ஆசைதானே இத்தனை ஆபத்துக்களை எதிர்கொள்ள வைத்தது! சுவாமி, இந்த உடம்பின் மீது வைத்த பிரியத்தை ராமன் மீது வைக்கக் கூடாதா? ராம நாமத்தின் மீது வைக்கக் கூடாதா?''

அந்தகாரமான அவர் உள்ளத்தில் அறிவு மின்னல் வெட்டியது. காட்டு வெள்ளத்தில் வந்தவருக்குக் கவிதை வெள்ளம் கரைபுரண்டது. மனத்தில் காமம் அழிந்தது - ராம நாமம் நுழைந்தது. அவருக்குள்ளே இருந்த விலங்கு செத்துப் போய் விட்டது. தெய்விக எண்ணம் அவரை ஆட்கொள்ளலானது. அவர் துளசிதாஸராகி ராமனுக்கே தம்மை அர்ப்பணித்து விட்டார்.

உயிருக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள தடையாகிய பொருட்பற்று நீங்கினாலும் மனைவி மக்கள் மீது உள்ள பற்றை விட முடியாமல் தவிப்பவர்களுக்குத் துளஸியின் வாழ்க்கை ஒரு திருப்புமுனை. பற்றுக்கள் ஒழிந்து, பாசம் அகன்று, பரம்பொருளில் லயித்து, பக்குவ நிலையில் மனிதன் நிற்க முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டு.

விரக்தியின் விளைவா இது? இல்லை.. தெளிவின் முடிவு. அறிவின் எல்லை. விதி வசத்தால் உறவுகள் ஏற்படுகின்றன. அன்புடன் அவற்றை வளர்க்கவும் பேணவும் மனிதன் கடமைப்பட்டிருக்கிறான்.

மனிதனில் இருந்து தெய்வமாகும் போது, இந்த உறவுகளின் குறுகிய எல்லை தகர்ந்து போவது தவிர்க்க முடியாது.

இந்தப் பேருண்மையை விளக்க, நாரதரையே கருவியாக்கிய கதை ஒன்று உண்டு. 'அத்தனை பெரிய மகரிஷிக்குமா அப்படி?' என்று வருத்தம் வேண்டாம். விளக்கப்படும் உண்மையின் வலிமையை விளக்க அவ்வளவு பெரிய மகரிஷி தேவைப்படுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

பாற்கடலில் படுத்திருந்த பெருமாளைத் தரிசிக்க வந்தார் நாரத மகரிஷி. 'நமோ நாராயண' என்று பக்தி பொங்க வழிபட்ட மகரிஷியின் மனத்தில் ஒரு சந்தேகம்... உறுத்தல்.. கேட்டு விடுவது என்ற

சுகிசிவம்



முடிவுக்கு வந்தார்.

''சுவாமி... மண்ணுலகில் வாழும் மகான்கள் பலரும் சம்சார சாகரம், பாச வலை போன்றவற்றிலிருந்து தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று உங்களை நோக்கிக் கதறுகிறார்களே, சம்சார பந்தம் என்பது என்ன, அவ்வளவு சங்கடமானதா? ஒரே சமயத்தில் பல காரியங்கள் ஆற்றக் கூடிய பலம் பொருந்திய மனித னால் பக வானை அனுபவித்துக் கொண்டே இல்ல றத்திலும் இருக்க முடியாதா?

''நாரதா... முடியாது என்று இல்லை... ஆனால் அது அவ்வளவு எளிது இல்லை, பலராலும் முடிவதில்லை என்பது யதார்த் தம்...''

''அப்படியா...! சம்சார பந்தம் என்பது இவ்வளவு சிக்கல் என்பதை என்னால் நம்ப முடியவில்லையே...'' என்று இழுத்தார் நாரதர்.

நாராயணர் பேச்சை மாற்றினார். ''நாரதா... ஒரு சிறிய உதவி தேவைப்படு கிறது. எனக்குத் தாகமாக இருக்கிறது; பூமிக்குப் போய் கங்கை நீரை இந்தக் குடம் நிறையக் கொண்டு வர முடியுமா...?'' என்று கேட்டவாறே வெள்ளிக் குடம் ஒன்றை எடுத்து நீட்டினார்.

பூமிக்கு வந்த நாரதர், வெள்ளிக் குடத் தைக் கங்கை வெள்ளத்தில் அமிழ்த்தினார். நிமிர்ந்தவருக்கு ஓர் அதிர்ச்சி! எதிர்க்கரை யில் ஒரு மானுட மின்னல். மலர் சூடிய மலர்... வெளிச்சமான விழிகளில் நாணத் தின் நளினமான நாட்டியம். ஆற்று வெள் ளத்தில் வெள்ளிக் குடம் அடித்துப் போவது கூட நாரதருக்குத் தெரியவில்லை.

இல்லறம் தொடங்கிப் பிள்ளைகள் பிறந்து, அவர்கள் வாழ்க்கை வளர்ந்து கொண்டிருந்தது. ஒரு நாள் பரபரப்பாகத் திருமதி நாரதர் ஓடி வந்தாள். ''ஆற்றில் வெள்ளம் அதிகமாகிப் பாய்கிறது. இந்தக் கரை பள்ளமானது.. நாம் மறுகரை போவது நல்லது. அது மேடு.. வாருங்கள்...'' என்று அவசரப்படுத்தி னாள்.

கையில் கிடைத்த பொருட்களை அள்ளிக் கொண்டு, குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு, மனைவியை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, வெள்ளத்தில் போராடி அயர்ந்தார் நாரதர். வெள்ளத்தின் வேகத் தில் சேகரித்து வைத்த பொன்னும் பொரு ளும் நழுவிப் போயின. மனைவியும் பிள்ளைகளும் முழுகத் தொடங்கினர். ஒரே கூச்சல் குழப்பம். யாரைக் காப்பாற்றுவது என்று புரியாமல் தவித்துப் போனார் நாரதர். அடுத்த விநாடி ஒரு பெரிய அலை அவரையே சுழற்றி எடுத்தது. 'ஐயோ என்னை எப்படிக் காப்பாற்றிக் கொள் வேன்?' என்று தத்தளித்தார்.

அப்போது ஒரு குரல் கேட்டது. ''நாரதா.. நலம்தானா?''

திடுக்கிட்டுத் திரும்பினார். வெள்ளத் தின் மேலே திருமாலின் திருஉருவம்!

சுவாமி சிரித்தார். ''நாரதா, குடிக்கத் தண்ணீர் கேட்டேன். இவ்வளவு வெள்ளம் போகிறது.. இன்னுமா எடுக்க முடிய வில்லை...?''

மாயவன் நிகழ்த்திய மாயா லீலையில் சம்சார சாகரத்தின் ஆழம் நாரதருக்குப் புரிந்து விட்டது. ''ஆளை விடுங்கள் சுவாமி... நாராயணா... நாராயணா...'' என்று ஓட ஆரம்பித்தார் நாரதர்!

(இன்னும் சொல்வேன்)

மிச்சமிருப்பது ஒரு தோட்டா

ஒரு முன்னுரை

துப்பாக்கியில் ஒரு தோட்டாதான் பாக்கியிருந்தது.

கார்த்திகேயனின் நெஞ்சு விரிந்து அடங்கிய போது, ஒரு பெருமூச்சு விடு தலையானது.

ஒரு தோட்டா. ஒரே தோட்டா. இன்றைக்கும் அவன் தவற விட்டால், அப்புறம் இந்தத் துப்பாக்கியைத் தொடுவதற்கு அவனுக்கு அருகதையே இல்லை. வெட்கமும், கசப்பும் அவன் நெஞ்சில் மேகமிட்டன.

கனத்த பூட்ஸ்களால் இருட்டை மிதித்துக் கொண்டு, அவன் ரகசியமாக முன்னேறினான். தைலக் காற்று அவன் நாசிகளை வருடியது. பிடிவாதப் பூச்சிகள் சட்டைக் காலருக்குள் பறந்து வந்து அமர்ந்தன. மரங்களின் கிளைகளில் சொடக்கு விழுந்தன.

பூமி சற்று மேடிட்டுச் சரேலெனச் சரிந்த பகுதியை அடைந்ததும் அவன் நின்றான். குழந்தை விட்டெறிந்த பொம்மை போல, பரந்த பிரதேசத்தில் ஒற்றைக் கல் மட்டும் உயரமாக நின்றது. அதன் நிழலில் சென்று மண்டியிட்டு அமர்ந்தான். இந்த கோணத்திலிருந்து மலையின் விளிம்பிற்குள் யார் பிரவேசித்தாலும் அவனால் பார்த்து விட முடியும். ஆனால் அவனையும், இரக்கமில்லாத அவன் துப்பாக்கி முனையையும் யாரும் பார்த்து விட முடியாது.

தன் ஒளிவிடத்தில் சௌகரியமாக அமர்ந்து கார்த்திகேயன், தன் எதிரிக்காகக் காத்திருந்தான்.

சத்தார் பாறையில் ஒருக்களித்துப்

அஞ்சனா மைக்கேல் ராஜ்

படுத்திருந்தான்.

ஒன்றரை மணி நேரத்திற்கு முன்பு வந்து, அவன் அந்தப் பாறையில் உடம்பைச் சரித்த போது, அது இவ்வளவு வெப்பத்தை உமிழும் என்று அவன் நினைத்திருக்கவில்லை. போலீஸிடமிருந்து ஓடி ஓடிக் களைத்திருந்த கால்களுக்கு ஓய்வு கொடுத்தால் போதும் என்றுதான் அப்போது தோன்றியது.

பார்வையை மட்டும் உயர்த்திப் பார்த்தான்.

நல்ல வெளிச்சத்தில் இந்த இடம் ஓர் அற்புத இயற்கைக் காட்சியாய் அசத்தும் என்று தோன்றியது. வயிற்றை உள்ளே இழுத்து.. முழங்கால்களில் கையூன்றி நிற்கும் இளம் பெண்ணைப் போல் மலை அங்கே செங்குத்தாக உள்வாங்கியிருந்தது. அதன் மடிப்பில் படுத்திருந்த அவனை மேலேயிருந்து யாராலும் பார்த்து விட முடியாது. அவனிருந்த இடத்திலிருந்து பத்தடி கீழே, சதா சர்வகாலமும் முணுமுணுத்துக் கொண்டு பாயும் சிற்றோடை.

சத்தார் கைகளை தலைக்குப் பின்னே ஆதரவாக்கி மல்லாந்து படுத்தான். மே...லே... மலைப் பாதையில் அவ்வப்போது விரையும் வாகனங்களின் இரட்டைக் கண் வெளிச்சங்கள் இருள் வானத்தில் டார்ச் அடித்து எதையோ தேடின, விலகின. நரைத்த புருவத்திலிருந்து உதிர்ந்த முடி போல் மெல்லிய நிலா.

சத்தார் கண்களை மூடினான். மூடிய இமைகளை நனைத்து, விழிகளுக்குள் திடீரென வெளிச்சம் வழிந்ததும் திடுக்கிட்டு விழித்தான். விறைத்தான்.

நிஜமா?

எழுந்து உட்கார்ந்தான். அவன் பார்வையின் நேர்க் கோட்டிலிருந்த உயரமான உச்சியில் இருந்த பாறையின் விளிம்பில் இரண்டு வெளிச்சங்கள் தொங்கின. அபாயகரமான உச்சியில் யார் அது?

வெளிச்சங்களின் சிதறலிலிருந்து அவை ஒரு காரின் முன் விளக்குகள் என்று

அவனுக்கு உறைத்த போது, அதிர்ந்து எழுந்து உட்கார்ந்தான்.

அந்த வெளிச்சங்கள் சற்றே ஊசலாடின. திடீரெனச் செங்குத்தாக இறங்கின. மின்னலை இணையாக இழுத்துக் கிழித்தது போல், பாறைகளை வெளிச்சமிட்டுக் கொண்டு வீழ்ந்தன. கிட்டத்தட்ட முந்நூறு அடி ஆழத்தை நொடிகளின் பின்ன நேரத்திற்குள் பயணம் செய்து -

வலுத்த பாறையின் மீது உலோகம் மோதியது. தீப்பொறி பறந்தது. இரண்டு வெளிச்சக் கண்களும் கண்ணாடிகளாகச் சிதறின. குருடாயின.

அமானுஷ்யமான கூச்சல் ஒன்று காருக்குள்ளிருந்து எழுந்தது.

கார் மூக்காலேயே இன்னொரு பாறைக்குத் தத்தியது. ஒருக்களித்தது. மல்லாந்தது. புரண்டது. குட்டிக்கரண மிட்டது. குப்புற அடங்கியது.

சற்று முன் வெளிச்சங்கள் லாந்தர்கள் போல் தொங்கிய அந்த உச்சியின் மீதிருந்து, டயர்கள் கிறிச்சிடும் சப்தம் கேட்டது. நிறுத்தப்பட்ட வாகனங்களின் வெளிச்சத்தின் பின்னணியில் பொம்மை பொம்மையாய் மனித உருவங்கள் அங்கு கூடின. எட்டிப் பார்த்தன.


அத்தனை தூரத்திலிருந்தும் சத்தாரால் அவர்களின் சீருடைகளை உடனே அடையாளம் புரிந்து கொள்ள முடிந்தது.

போலீஸ்!

அப்படியானால் கீழே உதிர்ந்த அந்தக் கார் போலீஸால் துரத்தப்பட்டு, பாதையிலிருந்து கட்டுப்பாடில்லாமல் விலகி, உச்சியிலிருந்து வீழ்ந்திருக்க வேண்டும். போலீஸ் உச்சியிலிருந்து குதித்து விட முடியாது. பாதை பிடித்து நடந்துதான் இறங்கி வந்தாக வேண்டும். அந்தப் பள்ளத்தை அடைய அவர்களுக்கு வேறு மார்க்கமில்லை.

வாகனங்களின் வெளிச்சம், டார்ச்களின் பிரகாசம், நிலவின் ஒளி எதுவோ எங்கோ பிரதிபலித்து, மிக மிக மங்கலான வெளிச்சம் அங்கே தென்பட்டது.

சத்தார் பார்த்தான். கார் விழுந்து



நொறுங்கிக் கிடந்த இடத்தை அவன் வெகு துரிதமாக அடைந்து விட முடியும். போலீஸ் இறங்கி வருவதற்கான சரியான வழியைத் தேர்வு செய்வதற்குள் அவன் காரை அடைந்து, ஆராய்ந்து, அவசியமென்றால் வெகு உன்னதமாய்ப் பின் வாங்கி விடலாம்.

ஆர்வம் அவனை உந்தித் தள்ளியது.

பாறைகளின் நிழல்களில் அவன் நீரைப் போல் வழிந்து வழிந்து இறங்கினான். சிற்றோடையைக் கடந்து ஒரு கல்லின் விளிம்பில் தொங்கிக் குதித்தான். காலடியில் கண்ணாடித் துண்டுகள் நொறுங்கின.

கார் முதலில் மோதிய இடம்!

இரண்டு நிமிடங்களுக்கும் குறைவான அவகாசத்தில் அவன் காரை நெருங்கி விட்டான்.

மூன்று பாறைகளின் நடுவே குழிந்த பகுதியில் - லாரிச் சக்கரத்தில் சிக்கிய தகர டப்பா போல - கார் நசுங்கிச் சிக்கியிருந்தது.

''ம்ஹ்... ம்ஹ்.... ம்ஹ்..''

சத்தார் திடுக்கிட்டான். மனித முனகல். நசுங்கிக் கிடந்த காருக்குள்ளிருந்து. இத்தனை உயரத்தில் இருந்து விழுந்த காரில் யாரும் உயிருடன் மிச்சமிருக்க முடியும் என்பதே அவனுக்குத் திகைப்பாய் இருந்தது.

சௌகர்யமான கோணத்தில் காரை நெருங்கினான். தயங்கி விட்டு, அவனுடைய சிறிய டார்ச்சை எடுத்தான். அதன் வெளிச்சத்தை நசுங்கிய தகரங்களுக்கு நடுவில் பாய்ச்சினான்.

காட்சி நெஞ்சைத் தாக்கியது.

காரின் நசுங்கிய கூரைக்கும், ஸ்டியரிங் வீலிற்கும் இடையில் அவனுடைய பெரும் பகுதி சிக்கியிருக்க, தலை தொய்ந்து தொங்கிக் கொண்டிருந்தவன் வெளிச்சத்தால் கவரப்பட்டு நிமிர்ந்தான்.

'ஹ... ஹ... ஹ...' என்று அவன் மூச்சு இறுதி பயத்தில் ஒலித்தது. தோளருகே சட்டை கிழிந்து, இரும்பு பிரவேசித்து ரத்தமும் சதையுமாகத் தீற்றப்பட்ட ஓர் இடம் தவிர, அவன் அதிக சேதமில்லாமல் உயிருடன் இருந்தான்.

''த..ண்...ணீ..ர்... தண்ணீர்...'' என்று ரகசியமாகக் கெஞ்சியது அவன் குரல்.

காற்றில் பெட்ரோல் வாசம் சேரத் துவங்கியிருந்தது.

''இங்கே ஏது தண்ணீர்? யார் நீ?'' சத்தார் டார்ச்சை அவன் கண்களுக்குள் அடித்துக் கூசச் செய்தான்.

"என்னைக் காப்பாற்று... உனக்கு லட்ச ரூபாய் தருகிறேன்.. என்னைக் காப்பாற்று..." அவன் தொடங்கிய நிலையில், சத்தாரைப் பார்ப்பதற்காகத் தலையை மிகவும் வளைத்து வேதனைக்குள்ளானான்.

சத்தார் சிரித்தான். இரக்கமில்லாத சிரிப்பு.

"லட்ச ரூபாய்! இந்தப் பொட்டல் காட்டில் எங்கே வைத்திருக்கிறாய் உன் லட்ச ரூபாயை!"

"என்னைக் காப்பாற்று. என் அம்மாவின் மேல் ஆணை - ஒன்றென்ன, உனக்கு இரண்டு லட்சம் கூடத் தருகிறேன்!"

சத்தார் மறுபடியும் சிரித்தான். "அம்மாவின் மேல் ஆணை! உன்னையே யார் என்று எனக்குத் தெரியாது. உன் அம்மாவை வேறு தெரிந்து கொள்ள வேண்டுமா?"

"என் பெயர் சுகுமார். என்னைப் போலீஸ்..." அவனுக்குத் தொண்டையில் சின்ன இருமல் உருவானது. வாயோரம் மெல்லிய ரத்தக் கோடு வழிந்தது.

சத்தார் ஓடினான். இரண்டே எட்டில் சிற்றோடையை அடைந்தான். தன் கைக்குட்டையை நனைத்து எடுத்து வந்தான். சுகுமார் செத்து விடக் கூடாது. லட்ச ரூபாய் என்று ஏதோ சொன்னானே. அது என்ன என்று தெரிந்து கொள்வதற்குள் அவன் செத்து விடக் கூடாது!

சுகுமாரின் தாகமிக்க நாக்கில் கைக்குட்டையைப் பிழிந்தான். காரில் சுகுமாரைத் தவிர வேறு யாரும் பயணம் செய்யவில்லை என்பது தெரிந்தது.

சுகுமாரின் முகத்தில் வலியின் வேதனை உச்சத்திலிருந்தது.

"கால் எலும்பு முறிந்து விட்டது என்று நினைக்கிறேன்..." என்று சொல்வதற்குள் அவன் நாக்கு பலமுறை புரண்டு விட்டது. "என்னை வெளியே எடுத்து விட மாட்டாயா?"

இப்போது இன்னும் பிரகாசமான வெளிச்சம் அந்தப் பகுதியில் வீசப்பட்டது. போலீஸின் சக்திவாய்ந்த பைனாகுலர்களின் கண்காணிப்பில் தன் பிம்பம் விழுவதைச் சத்தார் விரும்பவில்லை. முகத்தைத் திருப்பிக் குனிந்து கொண்டான்.

"இதோ பார்... என் பெயர் சத்தார். ஒரு கொலை வழக்கில் என்னைப் போலீஸ் கைது செய்திருந்தது. நான் லாக்கப்பிலிருந்து தப்பி விட்டேன். என்னையும் போலீஸ் தேடுகிறது..."

"அப்படியானால் நிச்சயம் நீ எனக்கு உதவி செய்வாய்!"

"செய்வேன்... ஆனால் உன்னை ஏன் போலீஸ் துரத்துகிறது என்று சொல்..." சத்தார் ரகசியமாகக் கேட்டான்.

"இன்று காலை ஒரு பாங்க்கிலிருந்து நாலரை லட்ச ரூபாயைத் துப்பாக்கி முனையில் கொள்ளை அடித்தேன். புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள முயன்ற மானேஜரைக் காயப்படுத்த வேண்டி வந்தது. முகமூடி அணிந்து தான் போனேன்... ஆனால் போலீஸ் எப்படியோ மோப்பம் பிடித்து வந்து விட்டது. பணத்தை ஒளித்து வைத்த இடத்திலிருந்து அள்ளிப் போட்டுக் கொண்டு, நான் காரில் தப்பித்த போது துரத்த ஆரம்பித்து விட்டது...."

"பணம் இப்போது காரில்தான் இருக்கிறதா?"

"இரண்டு பெட்டிகளில் பின் சீட்டில் வைத்... ஹம்மாவ்..." சுகுமார் அதிகம் பேசியதாலோ என்னவோ ஏதோ அவன் தொண்டைக் குழியில் அடைத்தது.

சத்தார் சுகுமாரிடமிருந்து கவனத்தைத் திருப்பினான். காரின் பின்பகுதியைக் கவனித்தான். பாறைகளில் மோதியதில் அந்தப் பகுதியும் நசுங்கியிருந்தது. ஆனால் நேரடியாக முத்தமிட்ட முன்பகுதியைப் போல அவ்வளவு நஷ்டமில்லை. பிளந்திருந்த ஜன்னல் வழியே கை விட்டான். இருட்டில் துழாவினான்.

அதோ....

மிகவும் எக்கி முயன்ற போது, முதல் பெட்டி, இன்னும் சற்று சிரமப்படுத்திக் கொண்டதில் இரண்டாவது பெட்டி... ஒன்றன் பின் ஒன்றாக வெளியே எடுத்தான்.

"உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் எனக்கு ஆசை, சுகுமார்.. ஆனால் உன்னை நசுக்கியிருக்கும் காரின் இரும்பை என்னால் தனியாக நகர்த்த முடியாது..."

"பணம்... என் பணம்..."

"சாகப் போகிறவனுக்குப் பணம் எதற்கு? போலீஸ் வரும் போது நீ அநா



"'பத்தாயிரம் ஒரு தரம்... பத்தாயிரம் இரண்டாம்தரம்...' என்று சப்தம் கேட்குதே.. அந்த ஆபீஸ்ல ஏலம் போடறாங்களா?"

"இல்லே... கம்பெனியில் இண்டர்வியூ நடந்துக்கிட்டிருக்கு. அதுதான்."

- திருத்துறைப்பூண்டி எஸ். கந்தசாமி.

வசியமாக என்னைப் பற்றி அடை யாளம் சொல்லி உன் உடம்பை வருத்திக் கொள்ளக் கூடாது என்பதற்காக...''

சத்தார் சற்றுத் தள்ளி நின்று தீக்குச்சி யை உரசிக் காருக்குள் எறிந்தான். ஒழுகிச் சேர ஆரம்பித்திருந்த பெட்ரோல் பசியுடன் பற்றிக் கொண்டது.

முழங்கைகளில், முழங்கால்களில், அங்கங்கே துணி கிழிந்து, சிராய்ப்பு. இரண்டு புஜங்களிலும் அபரிமிதமான வலி. இரண்டு பெட்டிகளையும் சுமந்து கொண்டு, கரடுமுரடான மலையின் செங்குத்தான சரிவுகளில் ஏறுவது என்பது, எத்தனை வேதனையான விஷயம் என்பது பற்றி விரிவான வியாசம் எழுதும் அளவுக்குச் சத்தார் அறிந்திருந்தான்.

போலீஸைப் பொறுத்தவரை அத்தனை பணமும் எரிந்து போய் விட்டதாக நினைத்திருப்பார்கள். போலி பாஸ்போர்ட்டிற்கும், தப்பித்து வெகு தூரம் செல்வதற்கும் தேவையான பணத்தை அவனுக்காகவே கொள்ளையடித்துச் சுகுமார் கொண்டு வந்தது போல் இருந்தது.

சத்தாரின் ரத்தத்தில் புது உற்சாகம் வந்தது.

இன்னும் பத்துப் பதினைந்தடிகள் தாம். ஏறி விட்டால் மலையின் விளிம்பை எட்டி விடலாம். இருள் மிக உக்கிரமாய் இருந்தது.

நெளிந்து நெளிந்து தான் ஏறி வந்த பாதையைக் குனிந்து பார்த்த சத்தாருக்கு ஆச்சரியமாயிருந்தது. இவ்வளவு தூரமா வந்து விட்டோம்!

மிச்சமிருந்த பகுதியை ஏறியதும் ஒவ்வொரு பெட்டியாக மேலே வைத்தான். பின், அந்தப் பாறை விளிம்பை இரு கைகளாலும் பற்றி எம்பி ஏறினான். முழங்கா லிட்டு அமர்ந்தான். அவன் அமர்ந்திருந்த இடத்தை ஒரு எதேச்சையான புதர் மறைத்தது. மெல்லத் தலையை உயர்த்தினான். சுதந்திரம் கைக்கெட்டும் தூரத்தில்!

தைல வாசம் காற்றில் இருந்தது. இருளும், புதரும் விளிம்பிட்ட அந்தப் பகுதியில் ஒரேயொரு உயரமான பாறை மட்டும் தெரிந்தது. அதன் பின்னே ஒரு சின்ன அசைவு தெரிந்தாற்போல் இல்லை? பிரமையா?

இருந்தபோதிலும் எந்தவித ரிஸ்க்கும் எடுக்க அவன் விரும்பவில்லை. பெட்டிகளை அங்கேயே விட்டு விட்டு முழங்கால்களில், புதரின் நிழலிலேயே நகர்ந்து, அந்தப் பாறையை முதலில் நோட்டமிட முடிவு செய்தான்.

ஒரு முடிவுரை

கார்த்திகேயன் விறைத்தான்.

ஒரு வார காலமாக அவனுடைய கிராமத்திற்குள் இரவுகளில் வந்து துவம்சம் பண்ணி விட்டுப் போகும் கரடியை இனியும் விட்டு வைத்தால், அபாரமான வேட்டைக்காரன் என்ற அவனுடைய பெயர் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விடும்.

மலை விளிம்பில் இருந்த புதரின் பின்னே சிறு அசைவு, அவன் கவனத்தை ஈர்த்தது. நாலு கால்களில் ஓர் உருவம் மறைந்து மறைந்து முன்னேறி வருவது அவன் ரத்தத்தில் சிலிர்ப்பு ஓட்டியது.

மிக உன்னதமாகக் குறி வைக்க வேண்டும். தப்பிக்க எந்த வாய்ப்பும் தந்து விடக் கூடாது என்று முடிவு செய்தான். ஏனென்றால்...

அவன் துப்பாக்கியில் ஒரே தோட்டா தான் பாக்கியிருந்தது.

டாக்டர் பதில்கள் :

வாக்மேன் கேட்பதால் காதுகள் பாதிக்கப்படுமா?

O சிகன், வேலூர் - 1.

தொடர்ந்து வாக்மேன் கேட்பதால் காதுகள் பாதிக்கப்படுமா?

OO டாக்டர் நந்தகோபால் (ஈ.என்.டி. மருத்துவர்) சென்னை - 18.

தொடர்ந்து என்றால் மணிக் கணக்கிலா? அப்படி என்றால் நிச்சயம் பாதிப்பு உண்டாகும். அதிலும், ஒலி எழுபது டெசிபல் வரை என்றால் தாங்கிக் கொள்ளக் கூடிய, அல்லது பொறுத்துக் கொள்ளக் கூடிய நிலை எனலாம். அதையும் தாண்டி, ஒலி இருந்தால் செவி நிச்சயம் பாதிக்கப்படும். பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு காதிலிருந்து இணைப்பை எடுத்து விடுவது நல்லது. சப்தம் அதிகமாயிருந்து, தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தால் தலை சுற்றல் கூட வரும்!

O அ. சண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.

காயம் பட்டால் உடனே டெடனஸ் தடுப்பு ஊசி போட்டுக் கொள்கிறோம். ஆனால் இது பலனளிக்கச் சில வாரங்கள் ஆகுமென்றும் (அதற்குள் அந் நோய் வந்தால் பாதுகாப்பு இல்லை என்றும்), ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை டெடனஸ் தடுப்பு ஊசியும் அதற்கான பூஸ்டரும் தவறாமல் போட்டு வருபவர்களுக்கு இந்த ஆட்கொல்லி நோயிலிருந்து உறுதியான பாதுகாப்புக் கிடைக்குமென்றும் சொல்கிறார்களே, உண்மைதானா?

OO டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியம், சென்னை - 18.

உண்மைதான். டெட்டனஸ் ஸீரம்தான் உண்மையில் போட வேண்டும். ஆனால் பயங்கரமான அலர்ஜிக் விளைவுகளைச் சந்திக்க வேண்டும் என்பதால் அந்த ஊசியைப் போடுவதில்லை, பயங்கர விளைவில் மரணமும் அடக்கம். எனவே ரிஸ்க் எடுக்க விரும்பாமல் டெடனஸ் டாக்சாய்டு ஊசி போடுகிறார்கள். இது தன் பணியைத் தொடங்க நேரம் பிடிக்கும். அதற்குள் டெடனஸ் ஊறிவிடும். பதினைந்து நாள் கழித்து ஒரு பூஸ்டர் ஊசி போட வேண்டும்!

O வி. ரெங்கநாதன், திருச்சி - 2.

கணவனைவிட மனைவியின் வயது குறைவாகத்தான் இருக்க வேண்டுமா? மருத்துவ ரீதியான விளக்கம் தேவை.

உளவியல் ரீதியாகப் பார்த்தால், தன்னைவிடக் கணவர் சற்று அதிக வயது உடையவராக இருந்தால்தானே கணவனை மனைவி மதிப்பாள்! உடலியல் ரீதியாகப் பார்த்தால், ஆண்களுக்கு செக்ஸ் - லைஃப் நீண்டது. பெண்களுக்குக் குறைவானது. அதனால்தான் குறைந்தபட்சம் நான்கு வருட இடைவெளியாவது கணவனுக்கும் மனைவிக்கும் இருக்க வேண்டும் என்கிறார்கள்.

தொகுப்பு : எஸ். வி. என்.





டாக்டர் எஸ். தங்கவேலு



என் வயலில் ஆராய்ச்சி...

எள்ளில் இத்தனை ரகங்களா?

'பெண்களின் மூக்கழகை வர்ணிக்க, எள்ளின் பூவை விட்டால் கவிஞர்களுக்கு வேறு கதியே கிடையாது. இப்போது அதிலும் ஒரு சிக்கல் வந்திருக்கிறது! ஆமாம், எள்ளிலேயே இரண்டாயிரத்து ஐந்நூறு வகைகள் இருக்கின்றன என்கிற போது, எந்த வகையான 'எட்பூ நாசி' என்று ஐஸ் வைக்க முடியும்!

கோவை வேளாண் பல்கலைக் கழகத்தின் ஒரு பிரிவாக, விருத்தாசலத்தில் இயங்கி வரும் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில்தான், உலகெங்கிலுமிருந்து இரண்டாயிரத்து ஐந்நூறு 'வகையான என் ரகங்களையும் வைத்திருக்கிறார்கள். இத்தனையும் போதாதென்று, இன்னும் இரண்டாண்டுகளில் ஓரிரண்டு புதிய ரகங் களை உருவாக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்!

இப்போதுள்ள ரகங்களெல்லாம் 85 முதல் 90 நாட்களில் பயன் தருகிறவை. இன்னும் குறுகிய காலத்தில் - 70 முதல் 75 நாட்களுக்குள் பயன் தருகிற ரகங்களைக் கண்டுபிடிப்பதிலும் எண்ணெய்ச் சத்து விகிதத்தை உயர்த்தும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

வேத காலத்திலிருந்தே பாரதத்தில் என் ஒரு முக்கிய பொருளாக இருந்து வந்திருக் கிறது. ஆன போதிலும் இதன் தாயகம் எது என்பதில் ஒரு குழப்பம் நிலவுகிறது. முத லிடம் சூடானுக்கும் இரண்டாவது இடம் தான் பாரதத்துக்கும் தரப்பட வேண்டும் என்று பல ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.


''எள்ளின் தாயகம் எதுவாயிருந்தால் என்ன! அது ஒரு பணப் பயிர். அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிற பயிர். அதனால்தான் அனைவரும் விரும்புகிற தரமான ரகங்களைப் பயிரிடுமாறு விவசாயிகளை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்,'' என்கிறார் விருத்தாசலத்தில் உள்ள மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் டாக்டர் எஸ். தங்கவேலு.

முன்பு ஏக்கருக்கு இருநூறு கிலோ மட்டுமே மகசூல் கிடைத்துக் கொண்டி ருந்த நிலையை மாற்றி, இப்போது நானூறு கிலோ அளவுக்கு மகசூல் கொடுக்கும் ரகங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ''எத்தனை நாடுகளில் என் விளைந்தாலும் பாரதத்தில் மட்டும்தான் எல்லாக் காலங்களிலும் பயிரிடுகிற சீதோஷ்ண நிலை இருக்கிறது. இதை நமது விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்கிறார் டாக்டர் தங்கவேலு.

எள்ளின் முக்கியத்துவத்தை உணர்ந்ததால்தான் உலக நாடுகள் அளவில் என் பயிருக்கென்று ஆராய்ச்சிக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதன் அங்கத்தினர்கள் ஒவ்வோர் ஆண்டும் கூடித் தத்தம் நாடுகளில் செய்யப்பட்டுள்ள என் ஆராய்ச்சிகளைப் பகிர்ந்து கொண்டு, மேலும் புதிய ரகங்களுக்கு முயற்சி செய்கிறார்கள்!

– சுப்ர. பாலன்

வாசகர் யோசனை :
கே. பூபதி,
பண்ருட்டி.



nizhalukkup pin nijangaL

உப்புத் தின்னவன் தண்ணி குடிக்கணும்!

விசு



ஒரு காட்சியை எழுதியவுடன் ஒரு முறைக்குப் பத்து முறை படித்துப் பார்ப்பேன். பல கோணங்களில் அலசி, யார் மனதும் புண்படாது என்ற முடிவுக்கு வந்தபின்தான் அந்தக் காட்சியை நடிக/நடிகையர்களின் மனதில் திணிப்பேன். இப்படி எவ்வளவோ முன்ஜாக்கிரதையாக இருந்தபோதிலும் பல சந்தர்ப்பங்களில் பல காட்சிகள் பலரது மனங்களைப் புண்படுத்தி விடுவதைப் பின்னால் அறிந்து வருந்தியிருக்கிறேன்.

படம் : விடு - மனைவி - மக்கள் : வீடு கட்ட முயற்சி எடுத்து, தோல்வி அடைந்து, கடைசியில் நான் சொல்லும் வசனம் ''லஷ்மீ! நம்மளை மாதிரி அன்னாடங்காச்சிங்க வீடு கட்ட ஆசைப்பட்டு இருக்கக் கூடாது. வீட்டுக்காரங்களோட ஏச்சையும் பேச்சையும் கேட்டுக்கிட்டு வாடகை வீட்டிலேதான் முடமா முடங்கி இருக்கணும்.''

படம் ரிலீசாகி, சில நாள் கழித்துக் கொடைக்கானல் சென்றேன். கண்ணீரும் கம்பலையுமாக ஒரு பெண்மணி, நான் தங்கி இருந்த இடத்துக்கு வந்தார். ''சார்! உங்க பாஷையிலே நாங்க அன்னாடங்காச்சிங்க. எப்படியோ என் புருஷனுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துக் கால் கொலுசுலேந்து காது கம்மல் வரைக்கும் அடமானம் வைச்சு அஸ்திவாரம் வரை வந்தோம். அவருக்குத் தேவைப்பட்டது பணம் மட்டுமல்ல! ஆறுதலான, ஊக்கமான வார்த்தைகளும் கூட. அவரை உங்க படத்து மூலமாத் தளர்ச்சி அடைய வைச்சிட்டீங்களே, சார். உபகாரம் பண்ணலைன்னாலும் உபத்திரவம் பண்ணிட்டீங்களே! மூணு மாசமா அஸ்திவாரத்தோட அப்படியே நிக்குதே சார். 'விசு சாராலேயே முடியலையே - என்னாலே எப்படி முடியு'ங்கறாரே சார்...''

அந்தப் பெண்மணி சொல்லிக் கொண்டே போனார். என் கண்களில் நீர் முத்திட்டு நின்றது. அந்தப் பெண்மணிக்குத் தேவை பாஸிடிவ் அப்ரோச்; நெகடிவ் அப்ரோச் அல்ல என்பதைப் புரிந்து கொண்டேன்.

படம் : டௌரி கல்யாணம் : கல் யாணச் சத்திரக் காட்சியில் ஒரு சமையல் காரர், யாருக்கும் தெரியாமல் கைநிறைய முந்திரிப் பருப்பை அள்ளித் தம் உதவியாளன் மூலமாகப் பின் வழியாகத் தம் வீட்டுக்குக் கொடுத்தனுப்புவார்.

படம் ரிலீசாகி சில நாள் சென்று, ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தேன். பரிமாறியவர் எனக்குக் கொஞ்சம் அலட்சியத்துடன் பரிமாறினார். பக்கத்து இலைக்குக் காட்டப்பட்ட மரியாதை எனக்கு இல்லை. எனக்குக் காரணம் புரியவில்லை. கடைசியில் அவரே இனி பொறுக்க முடியாது என்பது போல் என்னருகில் வந்தார். ''சார், போன ஜன்மத்திலே என்ன பாவம் பண்ணினோமோ, ஆண்டவன் எங்களை அடுப்படியிலே வேகவைச்சிட்டான். இருபது ரூபாய்க் கூலிக்காக வெந்து சாகறோம். நாட்டிலே அவனவன் கோடி கோடியாக் கொள்ளையடிக்கறான். அவனை எல்லாம் விட்டுட்டீங்க. எங்கள்லே யாரோ ஒருவன் பண்ற தப்பைக் கண்ணுலே விளக்கெண்ணெய் விட்டுக் கண்டுபிடிச்சு எழுதிட்டீங்களே! இப்ப பல பேரோட சந்தேகப் பார்வையைத் தாங்க முடியலையே சார். வெற்றிலை போட ஓரமா ஒதுங்கினாக் கூட சந்தேகக் கண்ணோட பார்க்கறாங்களே... உங்களுக்கு இதில் என்ன சந்தோஷம்?''

இதைக் கேட்ட பிறகு, எனக்கு ஒரு கவளம் உணவு கூட இறங்குமா? பாதிச் சாப்பாட்டில் அப்படியே எழுந்து விட்டேன்.

படம் : 'ஊருக்கு உபதேசம்' :சமூகத்தால் ஒரு பெண் தாசியாக்கப்படுகிறாள். அவளிடம் ஒரு சமயம் முறைகேடாக நடந்த

வாலிபனே அவளை மணந்து கொள்ள முன்வருகிறான். ஆனால் மணமேடையில் அவள் எழுந்து விடுகிறாள். ''என்றாவது ஒரு நாள், ''நீ தாசியாகத்தானே இருந்தாய்'' என்று நீங்கள் கேட்டு விட்டால் அந்த வார்த்தையைத் தாங்க முடியாது'' என்று சொல்லிக் கல்யாணத்தை நிறுத்தி விடுகிறாள். படம் நன்றாகத்தான் ஓடியது.

சில நாட்கள் கழித்து, ஒரு நர்சிங் ஹோமுக்கு ஒரு நோயாளியைப் பார்க்கப் போனேன். ஏன்டா போனோம் என்றாகி விட்டது! ஒரு நர்ஸ் என்னைப் பிடித்து உலுக்கு உலுக்கு என்று உலுக்கி விட்டார். ''ஒரு ஸ்கேன் எடுக்கிறேன் சார்! உங்களுக்கு முதுகு எலும்பு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்!'' என்றார். ''அந்த ஆடவனும் தவறுதலான பாதையில் போனவன். அந்தப் பெண்ணும் தவறுதலான பாதையில் போனவள். இரண்டு சமூகக் குற்றவாளிகளை இணைக்கக் கூட உங்கள் 'ஆண்' என்ற அகம்பாவம் ஒப்புக் கொள்ளவில்லை அல்லவா? தண்டனை அவளுக்கு மட்டும்தானா? அவள் வறுமைக்காகத் தவறு செய்தாள். அது பரிதாபம். அவன் உடல் கொழுப்பு எடுத்துத் தவறு செய்தான். அது அகம்பாவம். அவனுக்கு என்ன சார் தண்டனை கொடுத்தீர்கள்?''

இதெல்லாம் கூடப் பரவாயில்லை. என்னுடைய இரண்டு படங்களை ஒப்பிட்டு ஒரு பெண்மணி என்னை மடக்கினார் பாருங்கள்....!

படம் : சம்சாரம் - அது - மின்சாரம் : ஹாஜா ஷெரீப் கதாபாத்திரத்துக்குத் திடீரெனப் பொறுப்பு வந்து, படித்துப் பாஸாக வேண்டும் என்று வெறி வந்து, தன் அண்ணி மாதுரியிடம் இரவு - பகல் பாராமல் பாடம் கற்றுக் கொள்கிறான். அதனால் சந்திரசேகர் - மாதுரி தாம்பத்ய வாழ்க்கையில் ஒரு இடைவெளி ஏற்படுகிறது. தனக்குத் தன் கணவரிடம் இருந்து கிடைக்க வேண்டிய உடல் உரிமைகள் கிடைக்கவில்லையே என்ற காரணத்தினால் அவள் வீட்டை விட்டே வெளியேறி, கணவன் மனைவிக்கு இடையே பெரிய பிளவு ஏற்படுகிறது. கடைசியில் தவறை உணர்கிறாள்.



படம் : சகல - கலா - சம்பந்தி : அருணா கதாபாத்திரம், சந்திரசேகர் கதாபாத்திரம் இருவரும் கல்யாணத்துக்கு முன் ஓர் ஒப்பந்தத்துக்கு வருகிறார்கள். திருமணத்துக்குப் பிறகும் தன்னை வேலைக்குப் போக அனுமதிக்க வேண்டு எனவும், தனது கடமைகள் சில முடியும் வரை தன்னைக் குழந்தைகள் பெற்றுக் கொள்ளக் கட்டாயப்படுத்தக் கூடாது எனவும் அருணா கூறுகிறாள். சந்திரசேகரும் அதற்குச் சம்மதிக்கிறான்.

கல்யாணத்துக்குப் பிறகோ, சராசரி வாலிபனான சந்திரசேகருக்குச் சபலம் ஏற்படுகிறது. அவள் மறுக்கிறாள். இடைவெளி ஏற்படுகிறது. பிரிகிறார்கள். விஷயத்தை மோப்பம் பிடித்த சம்பந்தி கதாபாத்திரம் (அடியேன்தான்) வார்த்தைகளால் குத்திக் கிழிகிழி என்று கிழிக்கிறார். ''கணவனோட ஜீவாதார உரிமையைப் பறிக்க உனக்கு யார் உரிமை கொடுத்தது? நடக்காத உன் தங்கைங்க கல்யாணத்துக்காகப் போராடறியே - நடந்த உன் கல்யாணம் சூனியமா இருக்கே, இதுக்கு என்ன பதில் சொல்லப் போறே...?'' அட்டகாசமாக, ஆர்ப்பாட்டமாக நான் வசனம் பேச, தியேட்டரே அதிரும்! படம் நன்றாகவே ஓடி விட்டது.

சில நாள் கழித்து எனக்கு ஒரு கடிதம் வந்தது.

''ஏன் சார்! 'சம்சாரம் - அது - மின்சாரம்' படத்தில் மாதுரி உடல் உறவுக்காக அலைந்தால், அது அவள் தவறு. 'சகல - கலா - சம்பந்தி' படத்தில் சந்திரசேகர் உடல் உறவுக்காக அலைந்தால், அது அவன் தவறு அல்ல, அதைக் கொடுக்காத அருணாவின் தவறு. எப்போதும் பெண்தான் தவறு செய்பவளா? யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்?

''உங்களைப் போய், படிக்காத பாமரத் தாய்க்குலம் 'தாய்க் குலத்தின் இயக்குனர்' என்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடும் கொடுமையை யாரிடம் சொல்லி அழுவது? You are a male Chauvinist!"

டிக்ஷனரியைப் புரட்டினேன்! Chauvinist என்றால் வெறியனாமே! நான் ஆண் ஆதிக்க வெறியனா? அய்யய்யோ!

கதை எழுதுவது, வசனம் எழுதுவது, காட்சிகள் அமைப்பது என்பதெல்லாம் 'நிழல்'தான். அதற்குப் பின்னே சமுதாயப் பொறுப்பு, தார்மீகப் பொறுப்பு என்ற 'நிஜம்' ஒளிந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தேன்.

உப்புத் தின்னவன் தண்ணி குடிக்கணும்!

(நிழல்கள் தொடரும்)

ஆத்மசாந்தி

பெரியவர் திருஞானம் திண்ணையில் ஈஸிசேர் போட்டு அமர்ந்திருந்தார். அவருடைய மடியில் தங்க நிறத்தில் வெற்றிலைப் பெட்டி. இருந்தது. அவர் தம் வெண் மீசையைத் தடவி விட்டுக் கொண்டு, காப்பி தம்ளரைக் காலி செய்த போது வாசலில் ''ஐயா'' என்று ஒரு குரல்.

நிமிந்து பார்த்தார், ''வாய்யா தங்கராஜ்! நல்லாருக்கியா... இப்படி வந்து உட்கார்!'' என்று எதிர்த்த திண்ணையைக் காட்டினார்.

''பரவாயில்லைய்யா,'' என்று தங்கராஜ் தயங்கித் தயங்கி உட்கார்ந்த போது, அவருக்கு நீர்மோர் வழங்கப்பட்டது.

''சாப்பிடு. என்ன விஷயம்...?''

''ஐயா! என் குடிசை ஒழுகுது. வேயணும்!''

''பணம் வேணுமா...?''

''இல்லைங்கய்யா. வைக்கோல் நாலு கட்டு இருந்தால்.''

''வைக்கோல் தானே.... பண்ணையாள்ட்ட சொல்லிட்டு எடுத்துக்கோ!''

''ரொம்ப நன்றிங்கய்யா'' என்று அவர் கிளம்பின போது, இளைஞன் ஒருவன் வந்தான். அவனுக்கும் வரவேற்பு, நீர்மோர்.

''உனக்கு என்னப்பா வேணும்....?''

''யூனியன் ஆபீசுல வேலைக்கு ஆள் எடுக்கறாங்களாம். நீங்க ஒரு லட்டர் தந்தால்...''

''என் லட்டருக்கு அவ்ளோ வேல்யூவா... இந்தா!'' என்று எழுதிக் கொடுத்தார். அவர் குளிக்க எழுந்த போது, ''ஐயா!''

வாசலில் இடுகாட்டு வெட்டியான் இடுப்பில் துண்டு கட்டிக் கொண்டு பணிவாய் நின்றிருந்தான். ''என்னப்பா விசேஷம்....?'' என்று அவனிடம் போனார்.

''அன்னைக்குச் சொன்னது தாங்க. என்னோட பொட்டைப் புள்ளைக்கு இருதயத்துல ஓட்டையாம்...'' இருசன் விசனப்பட்டான்.

''ஓட்டையா... சே! தராதரம் பார்க்காம நோய் வந்திருக்கு போல. நான் என்ன செய்யணும்னு சொல்லு!''

''நோவைப் போக்கணும்னா பெரிய நோட்டு பத்துப் பதினைஞ்சு ஆகும்ங்களாம். கவர்மென்ட் ஆஸ்பத்திரிலன்னா அஞ்சு ரூபாயில முடிஞ்சிரலாம்னு சொல்றாங்க. ஐயாதான் உதவணும்!''

''ஐயாயிரமா....?'' என்று ஒரு நொடி யோசித்தார். ''ரெண்டு நாள் கழிச்சுப் போதுமா...?''

''போதுங்கய்யா.''

''சரி, ரெண்டு நாள் கழிச்சு வந்து வாங்கிக்கோ. இரு, நீர்மோர் குடிச்சுட்டுப் போ!''

பெரியவருக்கு இளகின மனது. அவருடைய மனத்தைப் போலவே வசதிகள் பெற்றிருந்தார். அவருக்கு விவசாயத்திலும், மண்டியிலும் நல்ல வருமானம் வந்து கொண்டிருந்தது.

அவர் குளித்துவிட்டு வந்த போது, சிவகாமி, ''குணா போன் பண்ணினா....'' என்றாள்.

''குணா என்ன பேசினா...?''

''பணம் ஐயாயிரம் வேணுமாம். அவ புருஷனுக்கு....''

அவர் அதைக் கேட்க விரும்பாதது போல இடைவெட்டி, ''ராஜாட்ட சொல்லி அனுப்ப ஏற்பாடு பண்ணிரு!'' என்று சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே கிளம்பினார்.

குணா அவர்களது மூத்த மகள். பெங்களூரில் இருக்கிறாள். கல்லூரியில் படிக்கிற இரண்டு பசங்கள் அவளுக்கு. ஆனால் இன்னும் கூட மருமகனுக்குப் பொறுப்பில்லை. வேண்டாத சிநேகத்துடன் பிசினஸ் பண்ணிச் சொத்தையெல்லாம் அழித்துவிட்டார். டௌரியாகக் கொடுத்த நகைகள், பணம் எல்லாமே காலி.

குணாவும் ஒன்றும் கண்டு கொள்வதில்லை. கணவனைக் கண்டிப்பதுமில்லை. அவ்வப்போது கூசாமல் பிறந்த வீட்டில்

என். சி. மோகன்தாஸ்

பணமும் பொருளுமாக சு ர ண் டி க் கொண்டேயிருக்கிறாள். இவர்களும் மகளா யிற்றே என்று கொடுத்துக் கொண்டே யிருந்தார்கள்.

குணாதான் அப்படியென்றால் அவளு டைய தங்கை லலிதாவின் மாப்பிள்ளை அதற்குமேல். ஆரம்பத்தில் நல்ல வேலையி லிருந்தார். பிறகு யாருடைய உபதேசத் தையோ கேட்டு, வேலையை விட்டுவிட்டு அரசியலுக்குப் போனார். அவர்கள் வேண்டாம் வேண்டாம் என்று எவ்வ ளவோ சொல்லிப் பார்த்தார்கள். கேட்க வில்லை. தேர்தலில் நிற்கிறேன் என்று ஊரெல்லாம் கடன் வாங்கிச் செலவழித் தார்.

அவருடைய பித்தலாட்டம் அறிந்தி ருந்த மக்கள் டெபாசிட் இழக்க வைத் தார்கள். அந்தக் கோபத்தில் அவர் பொதுச் சொத்துக்களை நாசம் பண்ண, போலீஸ் உள்ளே கொண்டு போய் வைத்தது. அவரை வெளியே கொண்டுவரவும் கேஸ் நடத்த வும் பெரும் பாடாயிற்று. கடனும் நஷ்ட ஈடும் பெரும் சுமையாயின.

இத்தனை நல்லவருக்கு இப்படி ஒரு மருமகனா என்று ஊர் வருந்திற்று. பெரி யவருக்கு மருமகன்களையும் மகள்களின் எதிர் காலத்தையும் நினைத்து ப்ரஷர் ஏறிற்று. ஹார்ட் அட்டாக் வரை கொண்டு போயிற்று.

மூன்றாம் நாள்.

இருசன் குடிசைக் காலண்டரில் தொங் கின சாமி படத்தை விழுந்து கும்பிட்டு விட்டு, ''நான் போயிட்டு வரேண்டி'' என்று மகளுக்கு முத்தம் கொடுத்தான். ''நீ எதுக்கும் கவலைப்படாத தாயி. பெரி யவர்ட்ட பணம் வாங்கி வ ந் த து ம் நாளைக்கே டவுன் ஆஸ்பத்திரிக்குப் போயி டலாம்.''

''பணம் பத்திரம்ய்யா. இந்தா பை!'' என்று துணிக்கடைப் பையை நீட்டினாள்.

''வேணாண்டி. அண்டிராயர் ஜேபில வச்சுக்குவேன்'' என்று ஆர்வத்துடன் கிளம்பினான்.

நாம் போகும் போது பெரியவர் வீட்டில் இருக்க வேண்டும், அவருடைய



கையாலயே வாங்கிக் கொள்ள வேண்டும். அவர் பணம் தயார் பண்ணி வைத்திருப் பாரா இல்லை, மறந்திருப்பாரா? சேச்சே! மறக்கவெல்லாம் மாட்டார்.....

'மகளுக்குக் குணமானதும் தலையை அடமானம் வைத்தாவது சிறுகச் சிறுக அவருடைய பணத்தைத் திருப்பித் தந்து விட வேண்டும். ஆபத்துக்கு உதவுகிற மகராசன் என்றைக்கும் நல்லாருக்கோணும்!'

வாழ்த்திக் கொண்டே அவருடைய வீட்டை அடைந்தவனுக்கு அதிர்ச்சி. அங்கே ஒரே கூட்டமாயிருந்தது. எல்லோருடைய முகத்திலும் விசனம். அக்கம் பக்கம் விசாரித்ததில் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

பெரியவர் ராத்திரி மாடிப்படியில் தடுக்கி விழுந்து விட்டாராம். உடன் பிரஷர் ஏறி, ஆஸ்பத்திரிக்குப் போகும் வழியிலேயே....

இருசன், ''ஐயா!'' என்று அலறிக் கொண்டு உள்ளே ஓடினான்.

விஷயம் கேள்விப்பட்டுப் பெரியவரிடம் உதவி பெற்றவர்கள், உதவி பெற நினைத்தவர்கள், நட்பு, சொந்தபந்தம் எனக் குழும ஆரம்பித்தது. குணாவுக்கும், அவளது தங்கை லலிதாவிற்கும் போன் போயிற்று. மகன் ராஜா இடிந்து போய் அமர்ந்திருந்தான். சிவகாமி மூர்ச்சையாகிக் கிடந்தாள்.

பெரியவர் ஹாலில் கிடத்தப்பட்டிருந்தார். அவரது மூக்கில் பஞ்சு அடைக்கப் பட்டு, நெற்றியில் திலகமிடப்பட்டு, வெள்ளை மீசையுடன் போட்டியிடும் வெள்ளைப் பற்கள் சற்றே தெரியக் கிடந்தார். அவரது முகத்தில் இப்போதும் கூடப் புன்னகை.

அதைப் பார்க்கப் பார்க்க துக்கம் அதிகமாயிற்று. பெண்கள் கட்டுப்படுத்த முடியாமல் வாய்விட்டு அழுதனர். இருசன், ''ஐயோ... தரும துரை! உங்களுக்கு இப்படி ஒரு கொடுமையா...?'' என்று கதறினான்.

மதியம் இரண்டு மணிக்குக் குணாவும் அவளது கணவன் சேகரும் டாக்ஸியில் வந்திறங்கினர். இறங்குகிறவரை நன்றாக இருந்த குணா, வாசல்படியை மிதித்ததும் 'கோ'வென அழ ஆரம்பித்தாள். அழுகைக் கிடையே ராஜாவின் மனைவி சாந்தியை அழைத்து, ''டாக்ஸிக்கு கணக்குத் தீர்த்துரச் சொல்லு!'' என்று தந்தையைப் பார்க்கப் போனாள்.

கொஞ்ச நேரத்தில் லலிதாவும் வேறொரு டாக்ஸியில் குடும்ப சகிதம் வந்திறங்கினாள்.

பெரியவரின் இறுதிச் சடங்குக்கான காரியங்கள் நடந்து கொண்டிருந்தன.

மூத்த மருமகன் சேகர் ஒரு லிஸ்ட் தயாரித்துக் கொண்டு வந்து ராஜாவிடம், ''பணம் பத்தாயிரம் கொடு மாப்பிள்ளே!'' என்றான்.


''எதுக்கு?''

''பல்லக்கு ஜோடிக்கணும். தாரை தப்பட்டை, சீரியல் விளக்குகள், கூத்து, பூக்கள், வெடி, வாண வேடிக்கை, இறுதி ஊர்வலத்தில் காக இறைக்கணும். எல்லாத்துக்கும் சேர்த்துத்தான்.''

''இதெல்லாம் தேவையா மாமா?''

''என்ன மாப்பிள்ளே அப்படி கேட்டுட்டே? அப்பா என்ன சாதாரண ஆளா....

மாத்திரை அளவில் மனித இயந்திரம்!



ரோபாட் என்னும் மனித இயந்திரம் ஒரு மாத்திரை அளவில் உருவாகும் காலம் அதிக தூரத்தில் இல்லை. ரோபாட் மாத்திரையை நோயாளி விழுங்கலாம். அதன் உள்ளே இருக்கும் காமிரா, உடலுக்குள் உண்டாகும் அதிர்ச்சிகளை, மானிட்டரைப் பார்த்துக் கொண்டு இருக்கும் டாக்டருக்கு எடுத்துச் சொல்லும். டாக்டர்கள் உத்தரவு தர, ரோபாட் சின்னஞ்சிறு கையொன்றை வெளியில் நீட்டி, சின்ன பிளேடால், சதையில் சிறிது பகுதியை அறுத்துப் பரிசோதனைக்கு வெளியில் அனுப்பி வைக்கும்.

இன்னும் சில காலம் சென்று, மிக நுண்ணிய ரோபாட்டை ரத்தத்தில் அல்லது ஜீரணச் சுரப்பிகளில் செலுத்தி, உடலைப் பரிசோதிக்க முடியும் என்றும் அதனால் சிறிய ஆபரேஷன்களைக் கூடச் செய்ய முடியும் என்றும் மருத்துவ விஞ்ஞானிகள் நம்புகின்றனர். செயற்கையாகப் பொருத்தப் பட்டுள்ள உறுப்புக்களை மாற்றவும் இந்த நுண்ணிய ரோபாட்டுகளைப் பயன்படுத்தலாம்.

— ஹிண்டுவிலிருந்து.
— சி. சண்முகசுந்தரம்.

ஊரே மெச்சும்படி அவருடைய சடங்கை நடத்த வேண்டாம்?''

''சாவில் போய் ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமும் தேவையா மாமா...?''

''எல்லாம் அவருடைய ஆத்மா சாந்தியடையத்தானே மாப்பிள்ளை. சரி, நேரமாகறது பணம் கொடு.''

''எல்லாம் நான் பார்த்துக்கிறேன் மாமா'' என்றதும் அவனுடைய முகம் வாடிப் போயிற்று. அவன் உள்ளே போனதும் குணா ஆவேசத்துடன் வந்தாள்.

''ஏய்... ராஜா! உன் மனசுல என்ன நினைச்சுகிட்டிருக்கே நீ? பெரிய இவன்னு நினைப்பா...?''

''என்னக்கா சொல்றே?''

''பின்ன என்னடா மாமா பணம் கேட்டதுக்குத் தரலியாமே நீ? அவமானப் படுத்திட்டாயாமே? அவர் வயசென்ன, உன் வயசென்ன? வேறு எதுவும் இல்லேன்னாலும் அவர் இந்த வீட்டு மாப்பிள்ளைடா! அதை மறந்திர வேணாம். ஒரு பத்தாயிரத்துக்கு அவரை உன்னால நம்ப முடியலியா...?''

ராஜா எதிர்த்து எதுவும் பேசவில்லை. அவளுடைய வார்த்தைகளையெல்லாம் தாங்கிக் கொண்டான்.

இரண்டாம் மருமகன் வேலுவும் தன் பங்குக்குச் ''சுற்றுப்பக்க அரசியல் பெரும் புள்ளிகளையெல்லாம் அ ழை க் க வேண்டும். பேப்பர்காரர்களுக்குத் தகவல் போட வேண்டும்'' என்றான்.

''எதுக்கு மாமா?''

''அப்பத்தானே பேப்பரில் நியூஸ் வரும்! அவருடைய புகழ் பரவும்!''

''மாமா! அவரே போயிட்டார். இனி புகழ் பரவி எதற்காகிறது. வேண்டாம் விட்டுவிடுங்கள்!'' என்று சொல்ல, அவனும் முகத்தைத் திருப்பிக் கொண்டு போனான்.

பெரியவரின் இறுதிச் சடங்கு சலசலப்புடனும் ராஜாவின் பேரில் மனஸ்தாபத்துடனும் நடந்து முடிந்தது.

தாயின் நகைகள் மகள்களின் கழுத்தில் அரங்கேறின. அதில் கூட ஒருவருக்கொருவர் போட்டாப் போட்டி. அவர்களைப் பார்க்கப் பார்க்க ராஜாவிற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அவர்கள் நகைகளை மட்டும் அழிக்கவில்லை. அப்பாவையே அழித்துத் தங்கள் கழுத்தில் போட்டிருப்பதாக நினைத்தான். அவர்களை நேருக்கு நேர் பார்ப்பதையே தவிர்த்தான்.

இருசனும் அவனது மனைவியும் குடிசைக்குள் இடிந்து போய் அமர்ந்திருந்தனர். பெரியவரின் மறைவு அவர்களைப் பெரிதாய்ப் பாதித்திருந்தது.

''பெரியவருக்கு இப்படித் தான் காலம் முடிஞ்சு போகணுமா...? நமக்குத் தெய்வமா உதவ முன் வந்தார்... தெய்வமாப் போயிட்டாரே! இனி நம்மோட குழந்தையோட கதி என்னய்யா?''

''செத்தாச் சாகட்டும்டி. எல்லாம் நம் நேரம்டி. மவராசன் அவரே போனதுக்கப்புறம் இனி, நம் குழந்தை இருந்தால் என்ன, செத்தாத்தான் என்ன...?''

''சொல்லிவிட்டு வெளியே வந்த இருசன் அங்கே ராஜா நிற்பதைக் கண்டதும் வியர்த்துப் போனான். ''தம்பி... நீங்க எப்படி இங்கே...?''

''எல்லாம் காரியமாத்தான்'' என்று ஒரு கவரை நீட்டினான். ''இந்தா வாங்கிக்கோ.''

''என்னங்க தம்பி...?''

''பணம். ஐயாயிரம்!''

''ஐயாயிரமா...?''

''ஆமாம். உன் பொண்ணோட ஆபரேசனுக்காக அப்பாட்ட ஐயாயிரம் கேட்டிருந்ததாகவும் நீ வந்து கேட்டால் கொடுக்கச் சொல்லியும் என்கிட்ட சாகும் முன்பு சொன்னார்.

''தம்பி! நீங்க தெய்வம்!'' இருசன் மனம் உருகினான்.

ராஜாவிற்கு அங்கிருந்து திரும்பும் போது மனபாரம் குறைந்த மாதிரி இருந்தது.

'இந்தமாதிரி ஏழைகளுக்கு உதவுவது அப்பா ஏற்றுக் கொண்ட ஒன்று. இறந்தவருக்குச் சாஸ்திரம் சம்பிரதாயம், வேடிக்கை, வெடி என்று செலவு பண்ணுவதால் யாருக்கு என்ன பிரயோஜனம்? அப்பா ஆசைப்பட்டபடி இந்தப் பிஞ்சின் உயிரைக் காப்பாற்ற உதவிவிட்டோம். இதுதான் நாம் அவருக்குச் செய்யும் பெரிய அஞ்சலி. இனி அவருடைய ஆத்மா நிச்சயமாய்ச் சாந்தியடையும். ஊரார் என்ன பேசினாலும் கவலையில்லை....'

ராஜா வேக வேகமாய் வீட்டை நோக்கி நடந்தான்.

எப்போதும் புன்சிரிப்புடன் காட்சி தருவதைப் பழக்கமாகக் கொள்ளுங்கள். 'அப்படிச் சிரிப்பதற்குக் காரணம் எதுவும் அவசியமில்லை. புன்முறுவல் செய்யத் தெரியாதவனுடைய முகம் மலராமல் கருகி விடும் மொட்டைப் போன்றது.

- ஹென்றிவார்ட்

தகவல் : அ. ராஜா ரஹ்மான்.

முதலீட்டாளர் செய்திகள் : ௪

ஸ்ரீராமா? அல்லது மற்றவையா?

லாரிகளுக்கான நிதியுதவி நிறுவனங்கள் அனைத்துமே ஒன்று போலத்தான். அப்படியிருக்கும் போது, ஸ்ரீராமுக்கு மட்டும் மற்றவற்றைவிடச் சற்று அதிகமான அளவில் பொதுமக்களின் ஆதரவு கிடைத்து வருவது எதனால்?



லாரிகளுக்குத் தவணைமுறை நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள் லாபகரமாக இயங்க முடியும் என்பதைப் பொது மக்களுக்கு விளக்குவதற்கு ஸ்ரீராம்தான் நேரத்தையும் ஆற்றலையும் செலவிட்டுள்ளது. என்றாலும், ஸ்ரீராம் தவிர, இத்துறையில் இயங்கும் இதர நிறுவனங்களும்கூட இம் முயற்சியின் மூலம் பலனடையக் கூடும். அதனால் எங்களுக்கு மகிழ்ச்சிதான். காரணம், உங்கள் டெபாசிட்டுகள் பத்திரமாகவும் பாதுகாப் போடும் இருக்கும்.

லாரிகளுக்கு நிதியுதவி வழங்குவதில் ஸ்ரீராம் 20 ஆண்டு அனுபவம் பெற்றுத் திகழ்கிறது. அளித்துள்ள தொகைகளைத் திரும்ப வசூலிப்பதற்கென்று நியமிக்கப் பட்டுள்ளவர்கள் அங்கங்கே இடம் பெற்றுள்ளனர். அவர்கள் தொடர்ந்து 100 சதவிகித வசூலைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். சாலைப் போக்குவரத்துத் துறையில் நாங்கள் கொண்டுள்ள ஈடுபாட்டுணர்வைக் கண்டுவிட்டுப் பிரபலமான டெல்கோ, அசோக் லேலண்ட் ஆகிய நிறுவனங்கள் தங்கள் இயக்குனர்களை எங்கள் இயக்குனர் குழுவில் இடம்பெறச் செய்துள்ளனர். இன்று ஸ்ரீராம் 76000 டெபாசிட் தாரர்களைப் பெற்றுள்ளது. மொத்த டெபாசிட் தொகை ரூ.79 கோடி.

லாரிகளுக்குத் தவணைமுறை நிதியுதவி வழங்கும் நிறுவனங்கள் பாதுகாப்பானவை, சிறப்பானவை என்பது இப்போது தெரிந்து விட்டதல்லவா! வேறு எங்கும் செல்வானேன்? ஸ்ரீராமுக்கு வாருங்கள்.

ஸ்ரீராம் என்றாலே நம்பிக்கை.

'மல்லிகை'யில் என்ன சோகம்?

சிரிக்க வையுங்கள்;
சிங்கப்பூர் செல்லுங்கள்!

நகைச்சுவை விழாவில் கேட்டது:

நடிகைக்குத் திருமணமாயிற்று. அன்று மாலை, ''ஏதாவது ஒரு பாட்டுப் பாடேன்'' என்றான் கணவன்.

''காலையும் நீயே, மாலையும் நீயே'' என்ற பாடலைப் பாடினாள்.

''அதற்குள் அலுத்து விட்டதா?'' என்றான் அவன்.

- அ. ஷண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.





O வகுப்பு மாணவர்கள் ஆசிரியர் வராததால் பாட்டுப் பாடிக் கொண்டும், அரட்டையடித்துக் கொண்டும் இருந்தனர். ஒரு மாணவன், 'என்னை யாரென்று எண்ணி, எண்ணி நீ பார்க்கிறாய்...' என்ற பாடலைப் பலமாகப் பாடும் போது, வகுப்பு ஆசிரியர் வந்துவிட, மாணவன் பாட்டை நிறுத்த, 'யாருப்பா... கிளாஸ்லே பாட்டுப் பாடறது?' என்று ஆசிரியர் கேட்டார்.

உடனே, 'இது யார் பாடும் பாடலென்று சார் கேட்கிறார்?' என்று அந்தக் குறும்பு மாணவன் பாட்டால் பதில் சொல்லவும், அந்த ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்த சிரிப்பைக் கேட்கவா வேண்டும்?

ஸ்வீட் ரவி, கும்பகோணம் - 1.

OOOOO

நீலா : அரசியல்வாதியோட மகனைக் காதலிச்சது தப்பாப் போச்சுடி...

மாலா : ஏண்டி... என்னாச்சு?

நீலா : முறைப்படி என்னைப் பெண் கேட்டு வாங்கன்னா, 'அடக்கு முறைப்படியா, வன்முறைப்படியா?'ன்னு கேட்கிறார்!

- அ. ஜமால் மொய்தீன், சென்னை.



OOOOO



O 'பவுனு பவுனுதான்' படம் பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் ஒரு வசனம்: "புருஷன் சமைச்சுப் போட்டுப் பொண்டாட்டி சாப்பிடற சுகமே தனிதான்" என்பது. அப்போது என் அருகில் அமர்ந்திருந்த தம்பதியினரில், மனைவி சொன்னாள்:

"அதுல என்ன சுகம்? உப்பில்லாம, ஒரே காரத்தோட சகிக்க மாட்டேங்குது!" கணவன், "ஏய், என்ன கிண்டலா?" என்று கேட்க, சுற்றியிருந்தவர்கள் சினிமாவை மறந்து சிரித்தனர்!

\- டி. வெங்கட், ஆனத்தூர்

OOOOO



"என்னங்க, 'மல்லிகை'ல எல்லாரும் சோகமா இருக்காங்க போல?"

"ம்ஹூம். சிவராசனும் சுபாவும் வேற வேற ஆளுங்க மாதிரி வேஷத்துல வந்து, ஒருத்தரை ஒருத்தர் பிடிக்க உளவு சொல்லிப் பதினைந்து லட்ச ரூபாயை வாங்கிக்கிட்டுப் போயிட்டாங்களாம், அதான்!"

\- உஷா, சென்னை - 24.

OOOOO



O இலக்கியக் கூட்டம். தமிழாசிரியர் சிறப்புரை ஆற்ற வந்தார். வெள்ளிக் கம்பிகளாய் நரைத்த தலையுடைய அவரை வரவேற்க, 'குடியாட்சி நடக்கும் இந்நாளில் தங்கமுடி தரிக்க இயலாதென்று வெள்ளிமுடி சூடி வந்தவரே!' என்றேன். எல்லோரும் நகைத்தபடி கைதட்டினர்.

அவர் பேசும் பொழுது பதிலாக, "குடியரசில் வெள்ளி முடிதான் எதற்கு? இன்றைய இளைஞர்கள் கோபாவேசம் கொண்டு போர் வெறியுடன் எதிர்ப்படும் போது, எதற்கு வம்பென்றுதான் சமாதானக் கொடியாய் இந்த வெள்ளை முடியைக் காட்டித் தப்பித்துக் கொள்கிறேன்' என்றதும் வந்திருந்த கூட்டத்தினர் கலகலவென்று ஆயினர்.

\- சுமித்திரகுமாரன், மதுரை - 14.

OOOOO

ஹோட்டலில் சாப்பிட வந்தவர் சர்வரிடம்: "ரெண்டு ஸ்வீட் மூணு காரம் ஒரு காப்பி, அல்லது ஒரு ஸ்வீட் இரண்டு காரம் மூணு காப்பி, அல்லது மூணு ஸ்வீட் ரெண்டு காரம் ஒரு காப்பி, அல்லது ஒரு ஸ்வீட் மூணு காரம் ரெண்டு காப்பி, இதிலே எது குறைஞ்ச பில் வருமோ அந்த மாதிரி குருப்பிலே கொண்டு வா...!"

\- எஸ். பாலசுப்பிரமணி, திண்டுக்கல்.



OOOOO

✱ நமஸ்கார ஃபோட்டோ



சாத்தூராரின் நமஸ்கார ஃபோட்டோ என்ன உணர்த்தியது?

O ஆர். கே. லிங்கேசன், மேல கிருஷ்ணன்புதூர்.

? கடத்தல் மன்னன் வீரப்பன் என்ன வானார்?


! காவலிலிருந்து தப்பி விட்ட மனைவியுடன் சௌக்கியமாக இருப்பதாகக் கேள்வி. சிவராசன் - சுபா டிமிக்கி கொடுத்து வரும் இந்தச் சூழ்நிலையில் வீரப்பன் பற்றி யார் கவலைப்படப் போகிறார்கள்!

O இ. எஸ். லலிதா, குடியாத்தம்


? 'எதிர்க் கட்சிகள் இல்லை என்றால் என்ன? பத்திரிகைகள் எங்கள் குறைகளைச் சுட்டிக்காட்டலாமே' என்று ஜெயலலிதா கூறியுள்ளாரே?

! அதைப் படித்த போது இனிப்பாக இருந்தது. அடுத்த வரிகளைப் படித்த போது ('நான் தவறு செய்யாவிட்டாலும் மற்றவர்கள் செய்யலாமில்லையா...') கசந்து வழிந்தது.

✱ வீரம் தெறிக்கும்



✱ ஸ்டைல் பளிச்சிடும்



O எஸ். வேங்கடேசன், கும்பகோணம்.

? 'எம். ஜி. ஆர். சமாதி மாற்றி அமைக்கப்படும்' என்று முதல்வர் அறிவித்திருப்பது பற்றி...?

! சிக்கன நடவடிக்கை அல்ல.

O ப. விஜயபாலன், சென்னை - 18

? புதிதாகத் தமிழகத்தில் ஆட்சி பீடம் ஏறியுள்ள அரசின் முன்னுள்ள முக்கிய பிரச்னை எது?

! 'சிக்கலான பிரச்னைகளில் மக்களின் கருத்தறிய பொது வாக்கெடுப்பு நடத்துவோம்' என்று கூறிய முதல்வர், உள்ள தற்குள் முக்கிய பிரச்னை எது என்ற சிக்கலான பிரச்னையில் மக்கள் கருத்தறிய முதலில் ஒரு வாக்கெடுப்பு நடத்தலாம்!

O இதயன் ராஜா, வாலூர்.

? இப்போதெல்லாம் தராசு பதில்களில் ஒரு 'கிக்'கே இருப்பதில்லையே?

! உங்கள் கேள்விகள் புறக்கணிக்கப்பட்டால் 'கிக்' கிடைக்காதுதான்... என்ன கேட்டீர்கள்? 'ரஜினி ஃபைட், கமல் ஃபைட், விஜயகாந்த் ஃபைட் - எந்த ஃபைட் உங்களைக் கவர்ந்தது' என்று தானே? கேட்டுக் கொள்ளுங்கள். ரஜினியிடம் ஸ்டைல் பளிச்சிடும்; கமலிடம் நளினம் இருக்கும்; விஜயிடம் வீரம் தெறிக்கும். ஆக, ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் கவர்கின்றன. பிடிக்காத விஷயம், சண்டைக் காட்சிகள் திரைப்படங்களில் தேவையின்றித் திணிக்கப்படுவதுதான்!

O எஸ். வெங்கட்குமார், ஹோசூர்.

? சாத்தூராரின் நமஸ்கார ஃபோட்டோவை இந்துவில் பார்த்தவுடன் உங்களுக்குத் தோன்றியது என்ன?

! சாத்தூரார் காலில் விழத் தொடங்கிய போது, 'இருங்கள் ஃபோட்டோகிராஃபர் வரட்டும்' என்று ஜெ அவரைக் காத்திருக்கச் செய்ததாக முதல் நாள் கேள்விப்பட்டது நினைவு வந்தது. அது உண்மையானால், பதவி ஆசை மனிதனை எத்தனை இழி நிலைக்குத் தள்ளுகிறது என்பதையும் பதவி அதிகாரம் மனிதனை எப்படி மமதை கொள்ளச் செய்கிறது என்பதையும் படம்

✱ நளினம் இருக்கும்



✱ ரூட் அவுட்




நீங்கள் கேட்டவை - தராசு



◆ இனிப்பும் கசப்பும்

◆ மண் ஒட்டலை...



உணர்த்துகிறது.

O பா. உதய கண்ணன், சென்னை - 11.

? பாரதிய ஜனதா கட்சியின் வளர்ச்சி பற்றி?

! 'மத்தியில் ஆட்சியைப் பிடிப்போம் என்று நாங்கள் சொன்னாலும் எங்களுக்கு முன்னரே தெரியும், ஆட்சியைப் பிடிக்க மாட்டோம் என்று' என்பதாக வாஜ்பாய் கூறிச் சமாளிப்பது, 'குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டலை' கதைதான். என்றாலும் பாரதிய ஜனதா வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. மசூதியைப் பெயர்க்கும் எண்ணத்தை உள்ளத்திலிருந்து பெயர்த்து எடுத்து விட்டால், அந்த வளர்ச்சி ஆரோக்கியமான வளர்ச்சியாக இருக்கும். இல்லையேல் ஆபத்தான வளர்ச்சியாக விளங்கும்.

O மு. அய்யூப்கான், சத்திரம் கருப்பூர்.

? வருகிற இடைத் தேர்தலில் தி. மு. க. போட்டியிட வேண்டுமா? வேண்டாமா?

! வேண்டும்தான். ஆனால் கலைஞருக்கு 'மூட்' அவுட் ஆகியிருக்கிறதே!

O எல். மாறன், மேல்பட்டி.

? மைய அமைச்சரவையில் தமிழகத்தில் மட்டும் நாலு அமைச்சர்கள் என்று பெருமை கொள்வதை விட்டு விட்டு கேபினட் அந்தஸ்து வேண்டும் என்கிறார்களே?

! அப்படியெல்லாம் மனசைச் சமாதானப்படுத்திக் கொண்டு விட்டால் உட்கட்சிப் பூசலை எப்படி வளர்ப்பதாம்?

O எம். குணசேகரன், வேலாயுதம் பாளையம்.

? 'தமிழகத்தைப் பொருளாதார ரீதியிலும் கலாசார ரீதியிலும் முன்னேற்ற வேண்டும் என்பதே எங்கள் நெடுநாள் ஆசை' என முதலமைச்சர் ஜெயலலிதா கூறியிருப்பது பற்றி?

! இரண்டுமே நல்ல எண்ணங்கள்தாம். ஆனால் ஈழத்திலிருந்து இறக்குமதியாகியுள்ள துப்பாக்கிக் கலாசாரத்தை ஒழிக்கவும் சரி, தமிழகத்தைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்தவும் சரி, அவருக்கு மத்திய அரசின் ஒத்துழைப்புத் தேவை. அதோடு, மத்திய அரசின் கொள்கைகளும் சரியான படி அமைதல் வேண்டும். இரண்டுமே சந்தேகத்துக்குரியதாக இருக்கும் போது, முதல்வரால் பெரிதாக எதையும் சாதித்து விட முடியும் என்று தோன்றவில்லை.

O என். சுரேஷ், சேலம் ★

? தமிழக தலைமைச் செயலர் மாற்றம் குறித்து?


! எந்தப் புதிய அரசு வந்தாலும் முதலில் அதிகாரிகளை மாற்றம் செய்வது என்பது மாமூல் நடவடிக்கை. அதற்கேற்பத் தலைமைச் செயலாளர் மட்டுமின்றி, மற்றும் பல அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதனால் மட்டுமே பலன் விளைந்து விடாது. இன்று எந்த அதிகாரியும் ஆட்சியில் உள்ளவர் சொற்படி செய்து விட்டுப் போகத் தயாராக இருக்கிறார். இது கூடாது. அதிகாரிகளைச் சிந்திக்கச்செய்ய வேண்டும். அமைச்சர்கள் அந்தச் சிந்தனைகளை அலசி, கட்சி சார்பற்று, நாட்டு நலனை மட்டுமே கருதி முடிவெடுக்க வேண்டும்.

O டி. சுகுமார், சென்னை.

? 'நான் பயணம் செய்யும் போது போக்குவரத்தைத் தடுக்க வேண்டாம்' என்று ஜெயலலிதா கூறியிருக்கிறாரே?

! அவர் முதல்வரான முதலிரு நாட்களில் போக்குவரத்துத் தடையால் அவதிப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்குச் சற்றே ஆறுதல்.

★ ரூ. 20 பரிசு பெறுபவர் :
என். சுரேஷ்,
1/14 - B, சுந்தர் நகர்,
அய்யம்பெருமாள்பட்டி அஞ்சல்,
சேலம் - 636 005



மலர்களிடம் பாசம்; இறைவனிடம் நேசம்!

அற்பமாகிய புழு, பூச்சி, பட்சி, மரம், செடி, கொடி உள்பட எந்த உயிருக்கும் சேதம் விளைவிக்கும்படியான எந்த ஒரு காரியத்தையும் ஒருபோதும் செய்யக் கூடாது என்பது பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் கருத்து. பூஜைக்கு மலர் பறிப்பது கூட ஒரு வகை இம்சைதான். நாமாகச் செடியிலிருந்து பறிக்காமல் தாமாகவே உதிர்ந்த தூய மலர்களை எடுத்து அவற்றினால் சிவனுக்கு உகந்த பூஜை செய்வதே சிவத் தொண்டனின் உயர்ந்த பூஜையாகும்.

திருச்சுழி லக்ஷ்மி அம்மாள் என்பவர் பகவான் ரமணரின் பிள்ளைப் பருவத்தில் அவருடன் விளையாடியவர். பகவானிடம் அளவு கடந்த அன்பும் பக்தியும் கொண்டவர்...

ஒரு சமயம் பகவானும் அடியார்களும் கிரி பிரதக்ஷிணத்திற்குப் புறப்பட்டார்கள். லக்ஷ்மி அம்மாளும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார். சோணதீர்த்தம் வரை சென்றதும் எல்லோரும் அங்கு கொஞ்ச நேரம் தங்கி இளைப்பாறினார்கள்.

சோணதீர்த்தத்துக்கு அருகில் பாதையின் ஓரத்தில் ஒரு சரக்கொன்றை மரம் அழகாகப் பூத்துக் குலுங்கியது. அதைக் கண்ட லக்ஷ்மியம்மாள் பூக்களைப் பறிக்கத் தொடங்கினார். எல்லோரும் இதற்குள் பிரதக்ஷிணம் புறப்பட ஆயத்தமானார்கள்.

சற்றுத் தூரத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்த லக்ஷ்மியம்மாளைப் பார்த்து பகவான் அருகில் சென்று ''லக்ஷ்மீ! என்ன பண்ணிண்டு இருக்கே?'' என்று கேட்டார். இதைக் கேட்ட லக்ஷ்மியம்மாள் திடுக்கிட்டு ''பூஜைக்குப் பூப் பறிக்கிறேன் பகவானே'' என்றார். ஏற்கெனவே பறிக்கப்பட்ட பூங்கொத்துக்கள் தரையில் விரிக்கப்பட்ட துணியில் குவிந்து கிடந்தன. அவற்றைக் கண்ட பகவான் ''அதான் நிறைய இருக்கே! இன்னும் ஏன் பறிக்கறே?'' என்றார்.

அதற்கு அந்த அம்மாள் பகவானிடம் ''இந்தச் செடி பூத்துக் குலுங்கி நிக்கறது. இவ்வளவும் வீணாத்தானே போறது. அதான் பறிக்கிறேன்'' என்றார்.

அதைக் கேட்ட பகவான், ''ஆமாமா! நீதானே நட்டுத் தண்ணி ஊத்தி வளர்த்திருக்கே! அந்த உரிமை கூட உனக்கு வேண்டாமா? அது பூத்து அப்படியேயிருந்தால் அழகாயிருக்காது. அதனழகையெல்லாம் நீ பார்த்துட்டியோல்லியோ, வேறே யாரும் அதைப் பார்க்க வேண்டாம். அந்தச் செடியை மொட்டை அடிச்சுடு.. அதுதான் பூஜைக்குப் பலன்'' என்றார்.

அதைக் கேட்ட லக்ஷ்மியம்மாள் துணுக்குற்றார். தான் செய்த தவறை உணர்ந்து புதைத்துப் போனார். அதற்குப் பிறகு அவர் பூத்துக் குலுங்கும் செடிகளைக் கண்டால் ''ஈசுவரா! பகவானே! உனக்கே அர்ப்பணம்'' என்று மானசீகமாக அர்ப்பணம் செய்து கைகூப்பித் தொழுவார்.

- சுப்ரபாலன்.

ஆதாரம் : ஸ்ரீ ரமண நூற்றிரட்டு அநுவாத நூன் மாலை - உரை
வெளியீடு : ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை - 606 606
விலை ரூ. 25.00

வட்டமேஜை

O புதிய பிரதமருக்குக் கட்சியையும் ஆட்சியையும் கட்டிக் காப்பதே பெரும் பாடாக இருக்கும் போது, கங்கையாவது காவிரியாவது!

சென்னை - 33, எஸ். வாசன்.

O 'மாறிய ஆட்சி; மாறாத பிரச்னைகள்' என்ற தலைப்பில் வெளியானது தலையங்கம் மட்டுமல்ல; எங்களின் மன எண்ணங்களின் பிரதிபலிப்பு!

மொரட்டுப்பாளையம்,
இராஜேஸ்வரன்.

O புத்தகப் பொதி சுமக்கும் பட்டாம்பூச்சிகளுக்கு விடுதலை பெற்றுத் தர முடியாவிட்டாலும் 'மாணவர் சிறப்பிதழ்' மூலம் அவர்கள் சார்பில் ஒரு குரலாவது கொடுத்த கல்கிக்குப் பாராட்டுக்கள்!

பொள்ளாச்சி - 2, ஏ.சி. பிரபு.

O எங்கள் கிராமத்தில் கூடப் பிள்ளைகள் சம்மர் ஸ்கூலுக்குச் செல்கிறார்கள். கலைகளைக் கற்றுக் கொள்வதற்காக அல்ல. கலைத்த தலையுடன் கால் வயிற்றுச் சத்துணவை ருசிக்கக் கையில் அலுமினியத் தட்டுடன்!

தஞ்சாவூர் - 7,
வளர்மதி ஆசைத்தம்பி.

O கல்கி, 30.6.91 மாணவர் சிறப்பிதழ், நன்றாகத்தான் இருந்தது. ஆனால் மாணவர் என்றாலே, நூலகம் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏன் நீங்கள் நூலகத்தின் பங்கு பற்றிக் குறிப்பிடவில்லை?

திருச்செந்தூர்,
ஆர். முத்துகிருஷ்ணன்.

O ''நரி வடையைத் தூக்கிட்டு ஓடுடுச்ச. காக்கா ஏமாந்து போச்சு''; ''நரி குதிச்சுக் குதிச்சுப் பாத்தது. திராட்சைக் குலை எட்டலை. பழம் புளிக்கும்னு சொல்லி நரி போயிடுச்சு''. இது மாதிரி ஏமாற்றம், தோல்வி இவற்றையே கருவாகக் கொண்ட கதைகளையே என் தாத்தா, அப்பா, நான், என் மகன், பேரன் கேட்டுக் கேட்டுச் சலித்துவிட்டோம். நம்பிக்கை, நேர்மை, விடா முயற்சி இவற்றைக் கருவாகக் கொண்ட கதைகளை இனியாவது மழலையர் பள்ளிகளில் போதிக்க முயல்வார்களா?

கோவை - 11,
கமலா மாரியப்பன்.

O மூன்று சிறுகதைகளுமே சிறப்பாயிருந்தன. அதிலும் 'மானுடம் உருவாகும் போது' என்ற வையவனின் சிறுகதை, மனத்தை நிரப்பியது.

மானாம்பதி, பா. பசுபதி.

O சத்துணவுத்திட்ட ஊழியர்கள் பற்றிய ''ஜோக்'' பார்த்து மிகுந்த வருத்தம் அடைந்தோம். மிகவும் பொறுப்புணர்வோடு மிகக் குறைந்த ஊதியத்தில் செயல் பட்டு வரும் எங்களில் பெரும்பாலோர் மிகவும் வறிய நிலையிலும், மிகவும் மெலிந்த நிலையிலுமே உள்ளனர்.

பூதலூர், எஸ். ராசப்பா.

O தேர்தலில் தோற்றுப்போன சில முக்கிய அரசியல் தலைவர்களின் எண்ண ஓட்டங்கள் எப்படி இருந்திருக்கும் என்பதைக் 'கல்கி' வெளியிட்டிருந்தது கற்பனைதான் என்றாலும், நிஜம் கலந்த கற்பனை.

கும்பகோணம்,
எஸ். வெங்கடேசன்.

O 'ஏன் பள்ளிக்கூடம் போகிறீர்கள்?' என்ற கேள்விக்குப் பெயர் வெளியிட விரும்பாமல், மாணவர்கள் அளித்துள்ள பதில்கள், இன்றைய கல்வி முறைக்கு எதிரான ஒரு சாட்டை அடி. வருங்கால வாழ்வுக்கு உத்திரவாதம் அளிக்கும் கல்வி முறை வராதவரை, மாணவர்களின் இந்தச் சாட்டை அடியை நாம் பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

திருவனந்தபுரம்,
எஸ்.எஸ். மணி.

O சத்யராஜைச் சந்தித்தவர்கள் சின்னப் பசங்களாயிற்றே என்னத்தைக் கேள்வி கேட்கப் போகிறார்கள் என்று நினைத்தால்... ஓர் அசத்து அசத்தி விட்டார்களே!

சென்னை - 91,
எல்.ஆர். விஜயகுமார்.

O குமுறும் மனத்தோடு குறைந்த கூலிக்கு வேலை செய்யும் இன்றைய சிறுவர்களின் நிலையை இயல்பாகப் படம் பிடித்துக் காட்டிவிட்டது 'முற்றிய மலர்கள்' சிறுகதை.

கொங்கணாபுரம்,
இளையபாரதி.

தக்காளி விலை ஏறினாலும் விவசாயிக்கு நஷ்டம்தான் !

O தற்சமயம் தக்காளி விலை ஏற்றத்தைப் பற்றி எழுதாதவர்கள், பேசாதவர்களே இல்லை எனலாம். ஆனால் தக்காளி சாகுபடியில் விவசாயிக்கு ஏற்படும் நஷ்டத்தைப் பற்றி யாரும் பேசுவதில்லை. சென்ற பிப்ரவரி பட்டத்தில் ஒரு ஏக்கர் தக்காளி சாகுபடி பண்ணியதில் நிகர வரவு ரூ. 3,557.80. நான் செலவு செய்த தொகை ரூ. 4,506.00. ஆக நான் தக்காளி சாகுபடியில் அடைந்த நஷ்டம் ரூ. 948.20. (விவரமான கணக்கு இணைக்கப்பட்டுள்ளது.)
இந்த விலையிலும் விவசாயி நஷ்டம் அடைவாரா எனப் பலர் சந்தேகப்படக் கூடும்! காரணம், ஏக்கருக்கு 600 கூடை தக்காளி கிடைக்கும் இந்த முறை 60 கூடைதான் விளைச்சல்! சரியான சீதோஷ்ண நிலை இல்லாததால், பூச்சி தொந்தரவு அதிகம் ஆகிவிட்டது. மேலும், முழு விலையும் விவசாயிக்குக் கிடைக்காமல், இடைத் தரகர்கள் சம்பாதிப்பதற்கே தக்காளி விலை ஏற்றம் அமைந்து விடுகிறது.

வத்தலகுண்டு,
இரா. சேவிச்சாமி.

ஆசிரியர்
பக்கம் :

யானை மேல் வந்த பண்ருட்டியார்!

சட்டமன்றத்துக்கு யானை ஏறி பவனி வந்த பண்ருட்டியார், யானையிடம் நாம் காண்கிற கம்பீரம், பெருந்தன்மை, பொறுமை முதலியவற்றை வெளிப்படுத்தாமல் நடந்து கொண்டது ஏமாற்றத்தையே அளிக்கிறது. பண்ருட்டியாரிடம் தமிழகம் இன்று மிக அதிகமாக எதிர்பார்க்கிறது. எதிர்க்கட்சி என்ற முறையில் தி.மு.க. துடைத்தெடுக்கப்பட்டு விட்ட நிலையில், காங்கிரஸ், தோழமைக்கட்சி என்றாகி விட்ட சூழலில், பண்ருட்டியார் போன்று பாக்கியிருக்கும் ஓரிருவர்தான் அரசுக்கு நல்லது கெட்டதை அச்சமின்றி எடுத்துக் கூற இயலும். வன்னியர் நலனுக்காக மட்டுமின்றி, தமிழகத்தின் ஒட்டுமொத்த நலனுக்காக வாதாட வேண்டிய முக்கியமான பொறுப்பில் உள்ள பண்ருட்டியார், கவர்னர் உரையின் போது நடந்து கொண்டவிதம் ஜனநாயகமும் அல்ல; பண்பாடும் அல்ல.

ஜனநாயக முறையில் எதிர்ப்புக் காட்ட ஆளுனர் உரையைப் புறக்கணித்து வெளி நடப்புச் செய்வது உண்டு. ஆளுனர் உரையைப் படிக்கத் தொடங்குமுன் பிரச்னை எழுப்புவதும் உண்டு. ஆனால் ஆளுனர் உரையைப் படிக்க விடாமல் தொடர்ந்து இடையூறு செய்வது போல், தாமும் அதே சமயம் எதையோ படித்துக் கொண்டிருப்பது அல்லது பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. இப்படி எதிர்ப்புக் காட்ட வேண்டிய அளவில் பெரிய குற்றம் ஏதும் யாரும் செய்து விட்டதாகவும் தெரியவில்லை. இதற்கு முன் இப்படியெல்லாம் சிலர் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பது இன்றைய பண்ருட்டியாரின் போக்கை நியாயப் படுத்தி விடாது.

தாமரைக்கனி வந்து பண்ருட்டியார் முதுகில் அறைந்தது, ஜனநாயகப் பற்றுள்ள ஒவ்வொரு தமிழனின் முதுகிலும் விழுந்த அடி போலக் கருதி, அவர்கள் ஒவ்வொருவரும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்தான். அதே சமயம் தாமரைக்கனி இப்படி நடந்து கொண்டது நமக்கு அவ்வளவாக வியப்பளிக்கவில்லை. சிலரிடம் சில வற்றைத்தான் எதிர்பார்க்க முடியும். ஆனால் தாமரைக்கனி இவ்வாறு நடந்து கொள்ளப் பண்ருட்டியார் இடமளித்து விட்டார் என்பதுதான் பெருவியப்பு.

இதை விடவும் பெரிய வியப்பு, 'தாமரைக் கனியைத் தம்மால் கட்டுப் படுத்த முடியாது' என்று முதல்வர் நழுவுவதுதான். தாமரைக் கனி சுயேச்சை உறுப்பினரே என்றாலும் முந்தைய தினம்தான் ஜெயலலிதாவைச் சந்தித்து அவர் கட்சியில் சேரத் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். கோரிக்கை ஏற்கப்படாத போது ஆதரவைத் தெரிவித்துள்ளார். எனவே ''விரும்பத்தக்கது அல்ல; வருந்தத்தக்கது'' என்பதற்கு அதிகமாகவே முதல்வர் தமது கண்டனத்தைத் தெரிவித்திருக்கலாம். அவைத் தலைவர், இருவருக்குமே சமமான அளவில் தண்டனை வழங்கிச் சமாளித்திருக்கிறார்.

முதல்வர் மன்னிப்புக் கோரினாலொழிய தாம் சட்டசபைக்குள் நுழையப் போவதில்லை என்ற பண்ருட்டியாரின் முடிவு அபத்தத்தின் எல்லைக்கே போய் விட்டது. இந்த முடிவினால் யாருக்குமே எந்த லாபமும் இல்லை. தமிழகத்துக்குத் தான் நஷ்டம்; ஜனநாயகத்துக்குப் பின்னடைவு.

சட்டமன்றத்துக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் மக்கள், அங்கே மின்னல் போன்று ஒளிரும் கூரிய தாக்குதல்களையும் இடிமுழக்கம் போன்ற வாதப் பிரதிவாதங்களையும் எதிர்பார்க்கிறார்கள். இவற்றின் விளைவாக நல்ல முடிவுகள் - செய்பாடுகள் என்ற மழை பொழிந்து நாட்டையும் மக்கள் மனங்களையும் குளிர்விக்கும் என்று நம்புகிறார்கள். இந்த நம்பிக்கையைப் பொய்யாக்கி, நாடு பெரிய பெரிய நெருக்கடிகளில் சிக்கியிருக்கும் போது சட்டமன்ற உறுப்பினர்கள் அற்பத்தனமான சின்னச் சின்ன சர்ச்சைகளில் இறங்குவது, திரண்டு வரும் மேகங்கள் சிதறி விட வறட்சியே மக்களை வாட்டுவதற்கு ஒப்பாகும்.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: பிரஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.

அரைமணி நேரம் செலவிடத் தயாரா?

00-30

ஆம்... நீங்கள் உங்களது அன்றாட அலுவல்களுக்கிடையே உங்களது முன்னேற்றத்திற்காக தினசரி அரைமணி நேரம் செலவிடத் தயாராக இருக்கிறீர்களா?... அப்படியானால் மேற்கொண்டு படியுங்கள்...

○ வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற உங்களது விருப்பம் நிறைவேற ஆங்கில மொழியில் போதிய புலமையின்மை ஒரு தடையாக இருக்கிறதா?

○ மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதை ஓரளவு புரிந்து கொண்டாலும், ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ என்று தயக்கமாக இருக்கிறதா?

○ ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற ஆர்வத்தில் பல வழிகளில் முயன்றும், பல புத்தகங்களைப் படித்தும் நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றம் ஏற்படவில்லையே என்று வருத்தப்படுகிறீர்களா?

கவலையை விடுங்கள்.... நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை இப்பொழுது அடைய உங்களது ஓய்வு நேரத்தில் தினசரி அரைமணி நேரம் ஒதுக்கினால் போதும்!

ஆம்... இந்த அரைமணி நேரத்தில் நீங்கள் தினசரி மேற்கொள்ள வேண்டிய பயிற்சியினை மிகவும் எளிய முறையில் சொல்லித் தந்து, நீங்கள் தயக்கமின்றி ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, மிகச் சிறந்த முறையில் தபால் மூலம் பயிற்சியளித்து வருகிறோம்.

எனவே ஆங்கிலத்தில் சரளமாகப் பேச வேண்டும், இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத வேண்டும் என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் இப்பயிற்சியின் மூலம் நிச்சயம் நிறைவேறும்.

என்ன? பயிற்சிக்காக தினசரி அரைமணி நேரம் செலவிடத் தீர்மானித்து விட்டீர்களா?

அப்படியானால் உங்களது முன்னேற்றத்தின் முதல் முயற்சியாக இப்பொழுது ஒரு ஐந்து நிமிடம் செலவு செய்து ஒரு போஸ்ட் கார்டில், **"நான் விவேகானந்தா கல்வி நிலையத்தில் ஆங்கிலம் கற்க விரும்புகிறேன்"** என்று எழுதி, கீழ்கண்ட முகவரிக்கு இன்றே அனுப்புங்கள்.

பயிற்சி பற்றிய விபரங்களை உங்களுக்கு உடனே அனுப்பி வைக்கிறோம்.

நேர்முகப் பயிற்சியும் உண்டு ☏ 44 12 16

விவேகானந்தா கல்வி நிலையம்

தபால் பெட்டி எண்: 4986, 9, நடேசன் தெரு, தி.நகர், சென்னை-17.

NAGA

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

செரிலாக்

நாள் முழுவதும் அருந்திட சமநிலைச் சத்துணவு

மெனு

உங்கள் குழந்தைக்கு எப்போதும் செரிலாக் வீட் உணவின் நற்பலன்களை அளித்து வருகிறீர்கள். ஆனால் இப்போது உங்கள் குழந்தைக்கு 6 மாதங்களாகிவிட்டதால், குழந்தை உணவில் புதிய சுவைகளை அறிமுகப்படுத்த இதுவே ஏற்ற பருவம். ருசிமிகுந்த, ஊட்டச் சத்துக்கள் சமநிலையிலுள்ள செரிலாக் உணவு வகைகளான-செரிலாக் வீட்-ஆரஞ்ச், செரிலாக் வீட்-வெஜிடபிள், செரிலாக் வீட்-ஆப்பிள் -ஒவ்வொன்றும் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய முக்கிய ஊட்டச் சத்துக்களும், தாதுப் பொருட்களும், வைட்டமின்களும் சரியான சமநிலையில் கலந்த முழுமையான உணவு. உங்கள் குழந்தைக்கு பரவசமூட்டும் சுவைகளை வகைவகையாக அளிக்கும் ஏற்றதொரு மெனு. இரண்டு வயது வரையிலும், அதற்கு அப்பாலும் தொடர்ந்து தரக்கூடிய மெனு.

உதயவேளை உற்சாகத்திற்கு

காலைச் சிற்றுண்டிக்கு, செரிலாக் வீட்-ஆரஞ்சின் பழச் சுவை நற்பலன்களை உங்கள் குழந்தைக்கு கொடுக்கலாம். பொறுக்கி எடுக்கப்பட்ட ஆரஞ்சுச் சுவைகளை, கோதுமை மற்றும் பாலுடன் கலந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்டது. உங்கள் குழந்தையின் நாள் சுறுசுறுப்பாகத் தொடங்கிட உதவும் முழுமையான உணவு.



மதிய உணவின் மனநிறைவு

மதிய உணவின்போது மற்ற எல்லாரையும் போல, உங்கள் குழந்தைக்கு காய்கறிகள் தேவை. பசுமையான கேரட்டுகள் மற்றும் தக்காளியின் நற்பலன்கள் கோதுமை மற்றும் பாலுடன் கலந்த செரிலாக் வீட்- வெஜிடபிள். உங்கள் குழந்தைக்கு கிடைப்பதோ திருப்தியான மதிய உணவு.



அந்திவேளை ஆனந்தம்

நாள்முழுக்க விளையாடிக் களைத்த குழந்தைக்கு அந்தி வந்ததும் அருமையான விருந்து தேவை. சற்றே வித்தியாசமான உணவு கிடைத்தால் குழந்தைக்குப் பரவசமாகும். இருக்கவே இருக்கிறது செரிலாக் வீட்-ஆப்பிள், ஆப்பிள் பழங்கள், பால் மற்றும் கோதுமையுடன் கலந்த அற்புதச் சுவை. உங்கள் குழந்தைக்கு வித்தியாசமான விருந்து.



பேக்குகளின் மீதுள்ள குறிப்புகளைப் பின்பற்றுக.
நெஸ்லேயின் தரமான தயாரிப்புகள்.



Mudra D: Nes 0752 - T

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம் - ஒவ்வொரு வேளை உணவிலும்